# 2

# தேசிய உற்பத்தி, செலவினம், வருமானம் மற்றும் தொழில்நிலை

## 2.1 பொதுநோக்கு

இலங்கைப் பொருளாதாரம் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பாதகமான தாக்கங்களால் முன்னொருபோதுமில்லாத விதத்தில் ஏற்பட்ட சமூகப் பொருளாதார விளைவுகளின் பின்னணியில் 2020இல் 3.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. நோய்த்தொற்றும், நோய்த்தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட அது தொடர்பான கட்டுப்பாடுகளும் உலகம் முழுவதிலுமுள்ள பொருளாதாரங்களின் செயலாற்றத்தினை பின்னோக்கித்தள்ளியதுடன், இதற்கு இலங்கையும் விதிவிலக்காக இருக்கவில்லை. இலங்கை மத்திய வங்கியினால் தொகுக்கப்பட்ட சில வியாபார மனோபவ சுட்டெண்கள் 2020இல் குறிப்பாக, இரண்டாம் காற்பகுதியில் மிகக் குறைந்த பெறுமதிகளைப் பதிவுசெய்து தேசிய ரீதியான முடக்க நிலைமையின் மோசமான தாக்கத்தினைப் பிரதிபலித்தது. உலகளாவிய நோய்த்தொற்றுச் சூழலானது முழுச் சூழல் முறைமைகளினாலும் சுற்றிக் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் சுற்றுலாத் துறைக்குப் புறம்பாக, தயாரிப்பு, கட்டடவாக்கம் மற்றும் போக்குவரத்து போன்ற தொழிலாளர்கள் நேரடியாகப் பங்கேற்பது அவசியமானதாகக் காணப்படும் பொருளாதார நடவடிக்கைகளைக் கடுமையாகப் பாதித்திருக்கிறது. கட்டடவாக்கம் மற்றும் தயாரிப்பு நடவடிக்கைகளில் காணப்பட்ட பின்னடைவு கைத்தொழில் நடவடிக்கைகளின் சுருக்கத்திற்குக் காரணமாகிய வேளையில் போக்குவரத்து, ஏனைய தனியாள் பணிகள் மற்றும் தங்குமிட வசதிகள், உணவு மற்றும் குடிவகைகளின் சேவை நடவடிக்கைகளில் காணப்பட்ட சுருக்கம் காரணமாக பணி நடவடிக்கைகள் முனைப்பான விதத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன. அதேவேளை, வேளாண்மை நடவடிக்கைகளும் வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு நோய்த்தொற்றுடன் தொடர்பான குழப்பநிலைமைகள் ஓரளவு காரணமாக இருந்த போதும், முடக்க காலப்பகுதியிலும் கூட வேளாண்மை நடவடிக்கைகள் தொடர்வதற்கு, தூண்டுதலளிக்கும் கொள்கைச் சூழல் ஆதரவாக அமைந்தது. 2020இல் முதலீட்டுச் செலவினம் சுருக்கமடைந்தமைக்கு உள்நாட்டிலும் அதேபோன்று உலகளாவிய ரீதியிலும் நோய்த்தொற்றிலிருந்து மீண்டுகொள்ளும் காலவரையறை பற்றிய நிச்சயமற்ற நிலைமையும் முக்கிய காரணங்களாக அமைந்த அதேவேளையில், நுகர்வுச் செலவினம் மெதுவான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக புவியியல் பிரதேசங்கள் முழுவதிலும் வளர்ச்சி உத்வேகம் இழக்கப்பட்டமையின் காரணமாக இவ்வாண்டுப்பகுதியில் வெளிநாட்டுக் கேள்வியும் நலிவடைந்தது. எனினும், இவ்வாண்டுப்பகுதியில் அத்தியாவசியமல்லா இறக்குமதிகள் சிக்கனப்படுத்தப்பட்டமை, வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்பட்டமை என்பன ஏற்றுமதிகளில் சுருக்கம் காணப்பட்டமைக்கிடையிலும் தேறிய வெளிநாட்டுக் கேள்வியில் ஏற்பட்ட மோசமான தன்மையினைத் தாங்கிக் கொள்வதற்குப் பகுதியளவில் பங்களித்தன. முதலீட்டுச் செலவினத்தில் கணிசமான சுருக்கம் ஏற்பட்டமையின் காரணமாக 2020இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்பு - முதலீட்டு இடைவெளி குறுக்கமடைந்த போதிலும் தேசிய சேமிப்பு, 2019 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 3.6 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. பொருளாதார நடவடிக்கைகளின் மீது கொவிட்-19 நோய்த்தொற்று கொண்டிருந்த மோசமான தாக்கத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் தொழிலாளர் சந்தை நீண்ட காலமாகக் காணப்படும் அதன் வலுவற்ற தன்மைக்கும் பாதிக்கப்படும் தன்மைக்கும் உட்பட்டதுடன் அமைப்பியல் பிரச்சனைகளையும் சமத்துவமின்மைகளையும் மேலும் ஆழமாக்கியது. இதற்கமைய, குடும்ப வருமானத்தில் இழப்பை ஏற்படுத்தும் வகையில் தொழிலின்மை வீதமானது, பெண்கள் தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியின் முக்கிய காரணமாக தொழிற்படையில் காணப்பட்ட கணிசமான வீழ்ச்சிக்கிடையில், 2009இற்குப் பின்னர் 2020இல் 5.5 சதவீதத்திற்கு மிக உயர்வாக அதிகரித்தது. அதேவேளை, 2020இல் பெண்கள், இளைஞர் மற்றும் கல்வித் தகைமை பெற்ற ஆட்களிடையே தொழிலின்மை வீதம் கணிசமாக அதிகரித்து சமத்துவமற்ற தன்மையினை மேலும் தீவிரமாக்கியது. மேலும், கொவிட்-19 நோய்த்தொற்றின் காரணமாக வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்காக புலம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை கடுமையாக வீழ்ச்சியடைந்த வேளையில், இலங்கையின் புலம்பெயர்ந்த வேலையாட்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

2

## 2.2 மொத்த உள்நாட்டு உற்பத்தி,[1] மொத்தத் தேசிய வருமானம் மற்றும் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான மோசமான தாக்கங்களை பிரதிபலிக்கும் வகையில், நிலையான சந்தை விலைகளில் (நிலையான விலைகள்) மொ.உ.உற்பத்தி ரூ.9,530.6 பில்லியனைப் பதிவுசெய்து 2019இல் பதிவுசெய்யப்பட்ட 2.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 3.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. அதேவேளை, நடைமுறைச் சந்தை விலைகளில் (நடைமுறை விலைகள்) மொ.உ.உற்பத்தி 2020இல் ரூ.14,973.0 பில்லியனாக (ஐ.அ.டொலர் 80.7 பில்லியன்) மதிப்பிடப்பட்டதுடன் இது ரூ.15,013.0 பில்லியனாக (ஐ.அ.டொலர் 84.0 பில்லியன்) காணப்பட்ட 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 0.3 சதவீதம் கொண்டதொரு வீழ்ச்சியாகும். இதன்படி, மொ.உ.உற்பத்தி உள்ளடக்கச் சுருக்கி 2019இல் பதிவுசெய்யப்பட்ட 2.7 சதவீதத்திலிருந்து 2020இல் 3.4 சதவீதத்திற்கு அதிகரித்தது.

1 தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், மொ.உ.உற்பத்தியை உற்பத்தி, செலவினம் மற்றும் வருமான அணுகுமுறைகளில் மதிப்பிடுகிறது.

வரைபடம் 2.1
மொ.உ.உற்பத்தி ஆண்டு வளர்ச்சி வீதம் (அ)




(அ) தரவானது மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 அடியாண்டு)

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 2.1
நிலையான விலைகளில் (2010) கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ)(ஆ)

| பொருளாதார நடவடிக்கை | வளர்ச்சி (%) | | மாற்றத்திற்கான பங்களிப்பு (%) | | மொ.உ.உ இன் சதவீதமாக (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2019 (இ) | 2020 | 2019 (இ) | 2020 | 2019 (இ) | 2020 |
| **வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடித்தல்** | **1.0** | **- 2.4** | **0.1** | **- 0.2** | **6.9** | **7.0** |
| தானியங்களின் வளர்ச்சி (அரிசி நீங்கலாக) | - 10.5 | 41.3 | - 0.01 | 0.04 | 0.1 | 0.2 |
| அரிசியின் வளர்ச்சி | 5.4 | 5.7 | 0.04 | 0.04 | 0.8 | 0.8 |
| காய்கறிகளின் வளர்ச்சி | - 3.6 | 10.1 | - 0.02 | 0.05 | 0.5 | 0.6 |
| கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய நீண்ட காலமல்லாத பயிர்களின் வளர்ச்சி | 9.9 | 17.0 | 0.00 | 0.00 | 0.0 | 0.0 |
| பழவகைகளின் வளர்ச்சி | 8.5 | 6.2 | 0.05 | 0.04 | 0.6 | 0.7 |
| எண்ணெய்ப்பசை கொண்ட பழவகைகளின் வளர்ச்சி (தேங்காய், செவ்விளநீர், கமுகு) | 17.7 | - 10.2 | 0.11 | - 0.07 | 0.7 | 0.6 |
| தேயிலையின் வளர்ச்சி (பச்சை இலைகள்) | - 1.3 | - 7.1 | - 0.01 | - 0.05 | 0.7 | 0.6 |
| ஏனைய குடிப்பானப் பயிர்களின் வளர்ச்சி (கோப்பி, கொக்கோ போன்றவை) | - 25.8 | 21.6 | - 0.00 | 0.00 | 0.0 | 0.0 |
| வாசனைத்திரவியங்கள், நறுமணப்பயிர்கள், மருந்து மற்றும் மருந்தாக்க பயிர்களின் வளர்ச்சி | - 1.0 | 3.3 | - 0.01 | 0.02 | 0.7 | 0.7 |
| இறப்பரின் வளர்ச்சி | - 9.5 | 4.6 | - 0.02 | 0.01 | 0.2 | 0.3 |
| ஏனைய நீண்டகாலப் பயிர்களின் வளர்ச்சி | 0.5 | 1.8 | 0.00 | 0.00 | 0.2 | 0.2 |
| விலங்கு உற்பத்தி | 2.1 | - 4.9 | 0.01 | - 0.03 | 0.7 | 0.6 |
| தாவர இனவிருத்தி மற்றும் வேளாண்மைக்கான துணை நடவடிக்கைகள் | - 9.2 | - 0.5 | - 0.01 | - 0.00 | 0.1 | 0.1 |
| காடாக்கலும் குத்திகளும் | - 0.1 | - 8.1 | - 0.00 | - 0.05 | 0.6 | 0.6 |
| மீன்பிடித்தல் | - 4.3 | - 16.6 | - 0.05 | - 0.19 | 1.1 | 1.0 |
| **கைத்தொழில்** | **2.6** | **- 6.9** | **0.7** | **- 1.8** | **26.4** | **25.5** |
| சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் | 2.8 | - 12.5 | 0.07 | - 0.29 | 2.3 | 2.1 |
| தயாரிப்பு | 1.8 | - 3.9 | 0.28 | - 0.60 | 15.6 | 15.5 |
| மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் | 4.0 | - 1.6 | 0.04 | - 0.02 | 1.1 | 1.1 |
| நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் | 5.5 | 4.8 | 0.01 | 0.01 | 0.2 | 0.2 |
| சாக்கடை, கழிவுப்பொருள் சுத்திகரிப்பு மற்றும் அகற்றும் நடவடிக்கைகள் | 7.3 | - 1.0 | 0.02 | - 0.00 | 0.3 | 0.3 |
| கட்டடவாக்கம் | 4.0 | - 13.2 | 0.27 | - 0.91 | 6.9 | 6.2 |
| **பணிகள்** | **2.2** | **- 1.5** | **1.3** | **- 0.8** | **57.5** | **58.7** |
| மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியம் மற்றும் தங்குமிடம் மற்றும் உணவுப்பணி நடவடிக்கைகள் | 1.7 | - 5.0 | 0.40 | - 1.15 | 23.0 | 22.7 |
| தகவல் மற்றும் தொடர்பூட்டல் | 15.7 | 13.7 | 0.10 | 0.10 | 0.7 | 0.9 |
| நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட சொத்துரிமை உள்ளடங்கலாக உண்மைச் சொத்துக்கள் நடவடிக்கைகள் | 2.4 | 5.0 | 0.34 | 0.71 | 14.2 | 15.4 |
| தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய ஆளணி பணி நடவடிக்கைகள் | 2.2 | - 5.9 | 0.25 | - 0.67 | 11.4 | 11.1 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனிதநலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 2.3 | 2.0 | 0.19 | 0.17 | 8.1 | 8.6 |
| **அடிப்படை விலையில் கூட்டப்பட்ட மொத்த பெறுமதிகளுக்கு சமனானவை** | **2.2** | **- 3.1** | **2.0** | **- 2.8** | **90.8** | **91.2** |
| உற்பத்திகள் மீதான மானியங்கள் கழித்த வரி | 2.4 | - 8.0 | 0.22 | - 0.74 | 9.2 | 8.8 |
| **சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமனானவை** | **2.3** | **- 3.6** | **2.3** | **- 3.6** | **100.0** | **100.0** |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் | - 6.3 | - 44.2 | | | | |
| **சந்தை விலையிலான மொத்த தேசிய வருமானம்** | **2.1** | **- 5.0** | | | | |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 2.2

தேசிய வெளியீடு, செலவினம், வருமானம் மற்றும் தொழில்நிலை வரைபடம் - 2020



2

**வெளிநாடுகளிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானத்திற்கு மொ.உ.உற்பத்தியைச் சீராக்கம் செய்ததன் மூலம் பெறப்பட்ட மொத்தத் தேசிய வருமானம் நடைமுறை விலைகளில் 2019இல் பதிவுசெய்யப்பட்ட 4.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 0.1 சதவீதம் கொண்ட சிறிதளவுச் சுருக்கத்தினைப் பதிவுசெய்தது.** மொத்தத் தேசிய வருமானத்தில் ஏற்பட்ட இச்சுருக்கத்திற்கு 2020இல் தேறிய முதலாந்தர வருமானத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்களுக்கிடையிலும் கூட நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக இருந்தது.

**தலைக்குரிய மொ.உ.உற்பத்தி 2019இன் ரூ.688,573 (ஐ.அ.டொலர் 3,852) உடன் ஒப்பிடுகையில் 2020இல் ரூ.683,106 (ஐ.அ.டொலர் 3,682)ஆக மதிப்பிடப்பட்டது.** நடைமுறை விலைகளில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட சுருக்கத்தின் காரணமாக ரூபா நியதிகளில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தி வீழ்ச்சியடைந்த அதேவேளையில், ஐ.அ.டொலர் நியதிகளில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தி வீழ்ச்சியடைந்தமை நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தி சுருக்கமடைந்தமையினதும் ஆண்டுச் சராசரி அடிப்படையில் ஐ.அ.டொலருக்கெதிராக உள்நாட்டு நாணயம் நலிவடைந்தமையினதும் இணைந்த விளைவாகும். அதேவேளையில், தலைக்குரிய மொத்தத் தேசிய வருமானம் 2019இன் ரூ.668,748 (ஐ.அ.டொலர் 3.741) உடன் ஒப்பிடுகையில் 2020இல் ரூ.664,620 (ஐ.அ.டொலர் 3,582) ஆக மதிப்பிடப்பட்டது.

## 2.3 நிறுவன ரீதியான துறைகளிலிருந்தான பங்களிப்பு

**வீட்டுத்துறை மற்றும் வீட்டுத்துறைக்குப் பணியாற்றும் இலாபமீட்டாத நிறுவனங்கள் துறை 2020இல் நடைமுறை விலைகளில் பொருளாதாரத்தின் கூட்டப்பட்ட மொத்தப் பெறுமதிக்கு முக்கியமான பங்களிப்பாளராகத் தொடர்ந்தும் காணப்பட்டது.** இதன்படி, வீட்டுத்துறை மற்றும் வீட்டுத்துறைக்குப் பணியாற்றும் இலாபமீட்டாத நிறுவனங்கள் துறை 2020இல் 0.4 சதவீதத்தினால் சிறிதளவு வீதத்தில் அதிகரித்துப் பொருளாதாரத்தின் கூட்டப்பட்ட மொத்தப் பெறுமதியில் 48.6 சதவீதத்திற்கு வகைகூறியது. அதேவேளை, நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் துறை 2.5 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் பதிவுசெய்த வேளையில் பொது அரசாங்கம் மற்றும் நிதிக் கூட்டுத்தாபனங்கள் துறைகள் முறையே 7.7 சதவீதம் மற்றும் 17.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன. முக்கிய பொருளாதார நடவடிக்கைகளுக்கு நிறுவன ரீதியான துறைகளின் பங்களிப்பினைப் பரிசீலனையில் கொள்கையில் வீட்டுத்துறை மற்றும் வீட்டுத்துறைக்குப் பணியாற்றும் இலாபமீட்டாத நிறுவனங்கள் துறை 2020இல் வேளாண்மை மற்றும் பணிகள் நடவடிக்கைகளின் கூட்டப்பட்ட பெறுமதிக்கான முக்கிய பங்களிப்பாளராக தொடர்ந்தும் காணப்பட்ட அதேவேளையில், பெறுமதிகூட்டப்பட்ட கைத்தொழில் நடவடிக்கைகள் முக்கியமாக நிதியல்லாக் கூட்டுத்தாபன துறையால் தூண்டப்பட்டன.

## 2.4 வெளியீடு, கொள்கைகள், நிறுவன ரீதியான ஆதரவு மற்றும் பிரச்சனைகள்

### வேளாண்மை

**வேளாண்மை நடவடிக்கைகள் 2019இல் பதிவுசெய்யப்பட்ட 1.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 2.4 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் பதிவுசெய்தமைக்கு மீன்பிடி, எண்ணெய் பசையுள்ள பழவர்க்கங்களின் வளர்ப்பு (தெங்கு உட்பட) காடாக்கல் மற்றும் மரங்களை குத்திகளாக்குதல், தேயிலை மற்றும் விலங்கு வளர்ப்பு உள்ளிட்ட முக்கிய வேளாண்மை நடவடிக்கைகள் சிலவற்றில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகள் காரணங்களாக அமைந்தன.** வேளாண்மை நடவடிக்கைகளில் ஏற்பட்ட இப்பின்னடைவிற்கு, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று தொடர்பில் குறிப்பிட்ட பெருந்தோட்டங்கள் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் மீது ஏற்பட்ட மோசமான

வரைபடம் 2.3
2020இல் நிறுவனத்துறையினரின் மொத்த பெறுமதி சேர்ப்பின் பங்குச் சதவீதம் (நடைமுறைச் சந்தை விலைகளில்) (அ)




(அ) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 அடியாண்டு)

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

தாக்கமே பெருமளவிற்குக் காரணமாகும். இது தொடர்பில் தேயிலை உற்பத்தி, குறிப்பாக நோய்த்தொற்றின் முதல் அலை ஆரம்பமான மாச்சு காலப்பகுதியில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வேளையில் மீன்பிடி நடவடிக்கைகள் நோய்த்தொற்றின் முதலாவது மற்றும் இரண்டாவது அலையினைத் தொடர்ந்தான ஆண்டின் இறுதிக் காலாண்டில் கடுமையாக பாதிக்கப்பட்டது. அதேவேளையில், காய்கறிகள், அரிசி, தானியங்கள் (அரிசி தவிர), பழவர்க்கங்கள், வாசனைத்திரவியங்கள் இவ்வாண்டுப்பகுதியில் அதிகரித்து ஒட்டுமொத்த வேளாண்மை நடவடிக்கைகளுக்குச் சாதகமாகப் பங்களித்த வேளையில் தூண்டுதலளிக்கும் கொள்கைச் சூழல், அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் மற்றும் சாதகமான வானிலை நிலைமைகள் என்பன நோய்த்தொற்று தொடர்பான வீழ்ச்சிகளைக் குறைப்பதற்கு உதவின.

## வேளாண்மை உற்பத்தி

**வேளாண்மை மற்றும் மீன்பிடித் துறைகளின் வெளியீட்டினை மட்டும் அளவிடுகின்ற வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்[2] நெல், இறப்பர் மற்றும் ஏனைய பயிர்களின் (ஏனைய களப்பயிர்கள், காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள்) துணைச் சுட்டெண்களின் வளர்ச்சியினால் ஆதரவளிக்கப்பட்டு 2020இல் 2.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.** இருப்பினும், தேயிலை, தெங்கு, விலங்கு வளர்ப்பு மற்றும் மீன்பிடி துணைச் சுட்டெண்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தன.

## நெல்

**2020இல் நெல் உற்பத்தி முன்னொருபோதுமில்லாத மட்டத்திற்கு அதிகரித்தமைக்குச் சாதகமான வானிலை நிலைமைகளும் அரசாங்கத்தின் தூண்டுதலளிக்கும் கொள்கைகளின் ஆதரவும் காரணங்களாக அமைந்தன.** 2019இல் அபரிமிதமான அறுவடையைப் பதிவுசெய்த நெல் உற்பத்தி, 2020இல் 11.5 சதவீதத்தினால் 5.1 மில்லியன் மெ.தொன்களுக்கு மேலும் அதிகரித்தது. மொத்த ஆண்டு உற்பத்தியில் ஏறத்தாழ 62 சதவீதத்திற்கு வகைகூறிய 2019/20 பெரும்போகத்தின் உற்பத்தியானது 4.0 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், 2020 சிறுபோகத்தில் நெல் உற்பத்தி 26.6 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. உத்தரவாத நெல் கொள்வனவு விலைகள் மற்றும் நெற் செய்கைக்கான இலவச வளமாக்கி வழங்கல் போன்ற வடிவிலான அரசாங்கத்தின் தலையீடுகள் 2020இல் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க மேம்பாடுகள் ஏற்படுவதற்கு பங்களித்தன. மேலும், இவ் அரசாங்கத் தலையீடுகள் நெற் செய்கையாளர் சமூகத்தின் குடும்ப வருமான மட்டங்களை அதிகரிப்பதுடன் அதனால் அவர்களின் வாழ்க்கைத் தரங்களையும் மேம்படுத்துகின்றன. 2020இல் 3.3 மில்லியன் மெ.தொன் அரிசிக்குச் சமமான வருடாந்த நெல் உற்பத்தியானது நாட்டின் வீட்டுத்துறையினரின் அரிசிக்கான கேள்வியில் ஏறத்தாழ 17 மாத கேள்வியைப் பூர்த்திசெய்யப் போதுமானதாக இருந்தது.[3]

**2019இலும் அதேபோன்று 2020இலும் உற்பத்தியில் அதிகரிப்புக் காணப்பட்ட போதும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020இல் திறந்த சந்தையில் நெல் விலைகள் உயர்வடைந்து காணப்பட்டன.** நாட்டின் சராசரி திறந்த சந்தை நெல் விலை, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2020இல் கி.கிராமிற்கு ரூ.47.73 இற்கு 11.0 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் சம்பா நெல்லின் சராசரி திறந்த சந்தை விலையும் கி.கிராமிற்கு ரூ.50.56 இற்கு 18.2 சதவீதத்தினால் அதிகரித்தது. அரசாங்கத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட நெல் கொள்வனவு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் உறுதிப்படுத்தப்பட்ட விலைக்கு மேலே நெல் இருப்பினைக் கொள்வனவு செய்வதற்காக தனியார் ஆலைச் சொந்தக்காரர்களிடையே நிலவிய போட்டியும்

அட்டவணை 2.2

**வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (2007-2010 = 100)**

| விடயம் | 2019 (அ) | 2020 (ஆ) | வளர்ச்சி வீதம் (%) | |
|---|---|---|---|---|
| | | | 2018/19 (அ) | 2019/20 (ஆ) |
| வேளாண்மை மற்றும் மீன்பிடி | 126.0 | 129.0 | -0.1 | 2.3 |
| 1 வேளாண்மை | 120.8 | 129.1 | 1.0 | 6.9 |
| 1.1 வேளாண்மை பயிர்கள் | 113.3 | 124.0 | 0.7 | 9.5 |
| நெல் | 122.8 | 136.9 | 16.9 | 11.5 |
| தேயிலை | 96.3 | 89.5 | -1.3 | -7.1 |
| இறப்பர் | 55.7 | 58.3 | -9.5 | 4.6 |
| தெங்கு | 108.9 | 98.6 | 17.6 | -9.5 |
| ஏனைய பயிர்கள் | 136.3 | 167.9 | -10.8 | 23.2 |
| இதில் மரக்கறிகள் | 123.0 | 142.7 | -15.3 | 16.0 |
| பழங்கள் | 150.1 | 199.6 | -18.4 | 33.0 |
| ஏனைய களப்பயிர்கள் | 118.9 | 141.1 | -11.4 | 18.6 |
| 1.2 கால்நடை வளர்ப்பு | 180.5 | 169.5 | 2.3 | -6.1 |
| 2 மீன்பிடி | 151.6 | 128.5 | -4.0 | -15.2 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2.4

அரிசி : நிரம்பல் மற்றும் கேள்வி




*மூலங்கள் :* இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்

2 வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் காடாக்கல் மற்றும் குற்றிகளாக்குதல் துறையினை உள்ளடக்கவில்லை.

3 வீட்டுத்துறையினரின் அரிசிக்கான கேள்வியானது வீட்டுத்துறை வருமானம் மற்றும் செலவின அளவீடு - 2016 அடிப்படையிலான வீட்டுத்துறையினரின் சராசரி அரிசி நுகர்வு மற்றும் 2020இன் நடுவாண்டுக் குடித்தொகை என்பனவற்றினைப் பயன்படுத்தி கணிக்கப்படுகிறது.

அட்டவணை 2.3
நெல்த்துறை புள்ளிவிபரங்கள்

| விடயம் | அலகு | 2019 (அ) | | | 2020 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 748 | 369 | 1,117 | 752 | 456 | 1,208 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 724 | 346 | 1,070 | 740 | 451 | 1,191 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 647 | 310 | 958 | 663 | 403 | 1,066 |
| உற்பத்தி | '000 மெற்றிக்தொன் | 3,073 | 1,519 | 4,592 | 3,197 | 1,924 | 5,121 |
| | '000 புசல்கள் | 147,256 | 72,822 | 220,078 | 153,207 | 92,218 | 245,425 |
| எக்டேயர் ஒன்றுக்கான விளைச்சல் (,) | கி.கி./ எக்டேயர் | 4,747 | 4,896 | 4,795 | 4,821 | 4,770 | 4,802 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ.மில் | 4,471 | 2,865 | 7,336 | 4,230 | 2,998 | 7,228 |
| அரிசி ,றக்குமதிகள் (ஈ) | '000 மெற்றிக்தொன் | வி.கி | வி.கி | 24 | வி.கி | வி.கி | 16 |
| ,றக்குமதி செய்யப்பட்ட அரிசிக்கு சமனான நெல் (ஈ) | '000 மெற்றிக்தொன் | வி.கி | வி.கி | 35 | வி.கி | வி.கி | 23 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(,) எக்டேயர் ஒன்றுக்கான விளைச்சலானது உற்பத்தியை தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் கணிப்பிடப்பட்டது
(ஈ) ஆண்டுக்கான பெறுமதி

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

நெல் விலைகளில் அதிகரிப்பு ஏற்படப் பங்களித்தன. சம்பா மற்றும் கீரி சம்பா நெல் வகைகளுக்கான (உலர்) கி.கிராம் அரிசிக்கான உறுதிப்படுத்தப்பட்ட நெல் கொள்வனவு விலை 2019இன் ரூ.41.00 இலிருந்து 2020இல் ரூ.50.00 இற்கு அதிகரித்த வேளையில் நாட்டரிசிக்கான (உலர்) அவ்விலைகள் 2019இல் ரூ.38.00 இலிருந்து 2020இல் ரூ.50.00 இற்கு அதிகரித்தது. அதேவேளை, உயர்ந்த ஈரலிப்புத்தன்மையினைக் கொண்ட நெல்லிற்கான உறுதிப்படுத்தப்பட்ட விலை கி.கிராமிற்கு ரூ.44.00 ஆக நிர்ணயிக்கப்பட்டது. ஒரு சில ஆலை உரிமையாளர்கள் உயர்ந்த சந்தை சக்தியைக் கொண்டிருந்தமையின் காரணமாக அரிசியின் சில்லறை விலைகள் அரசினால் விதிக்கப்பட்ட உயர்ந்தபட்ச சில்லறை விலைகளை விட உயர்வாகக் காணப்பட்டன. சம்பா அரிசியின் சராசரி சில்லறை விலை 2019இன் கி.கிராமொன்றிற்கு ரூ.102.29 உடன் ஒப்பிடுகையில் 2020இல் கி.கிராமொன்றிற்கு ரூ.104.37 இற்கு அதிகரித்தது. அதேவேளை, நாட்டு அரிசியின் சராசரி சில்லறை விலை முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட கி.கிராமொன்றிற்கான ரூ.93.48 உடன் ஒப்பிடுகையில் 2020இல் கி.கிராமொன்றிற்கு ரூ.100.01 ஆக அதிகரித்தது. மேலும், 2020இல் அரிசி இறக்குமதிகள் 15,770 மெ.தொன்களுக்கு வீழ்ச்சியடைந்து முன்னைய ஆண்டினைவிட 34.8 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு உயர்ந்த உற்பத்தியும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு வழிமுறைகளும் காரணங்களாக அமைந்தன.

## தேயிலை

**மோசமான வானிலை நிலைமைகளும் கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளின் காரணமாக தொழிலாளர் வழங்கலில் ஏற்பட்ட தடங்கல்களினதும் காரணமாக 2020இல் தேயிலை உற்பத்தி 7.1 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.** ஆண்டின் முதலரைப்பகுதியில் 18.0 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்ட போதும், ஆண்டின் பின்னரைப்பகுதியில் தேயிலை உற்பத்தி மீட்சியடைந்து 4.9 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. மொத்த தேயிலை உற்பத்தியில் முறையே ஏறத்தாழ 22 சதவீதத்தினையும் 17 சதவீதத்தினையம் 61 சதவீதத்தினையும் பங்களித்த உயர், மத்திய மற்றும் தாழ் நிலத் தேயிலை வகைகள் 2020இல் முறையே 1.3 சதவீதத்தினாலும் 0.9 சதவீதத்தினாலும் 10.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. அதேநேரம், சிறுஉடமையாளர் துறையின் சராசரி விளைவு 2019இல் பதிவுசெய்யப்பட்ட எக்டேயரொன்றிற்கான 1,938 கி.கிராமுடன் ஒப்பிடுகையில் எக்டேயரொன்றிற்கு 1,765 கி.கிராம்களுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு தேயிலை வளரும் பிரதேசங்களில் நிலவிய வரண்ட நிலைமைகளே முக்கிய காரணமாகும்.

**கொழும்பு தேயிலை ஏலங்களில் தேயிலையின் விலைகள் 2019இன் தொடர்பான விலைகளுடன் ஒப்பிடுகையில் ஆண்டு முழுவதும் உயர்வாகவே காணப்பட்டன.** தேயிலையின் சராசரி விலை முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட கி.கிராமொன்றிற்கான ரூ.546.67 இலிருந்து 2020ஆம் ஆண்டுப்பகுதியில் கி.கிராமொன்றிற்கு ரூ.633.85 இற்கு 15.9 சதவீதத்தினால் அதிகரித்தது. உயர், மத்திய மற்றும் தாழ் நிலத் தேயிலைகளுக்கான சராசரி விலைகள் 2020இல் முறையே 15.5 சதவீதம், 18.7 சதவீதம் மற்றும் 16.0 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. மேலும், பச்சைத் தேயிலைக்காக சிறுஉடமையாளர்களினால் பெறப்பட்ட சராசரி விலைகள் 2019இன் கி.கிராமொன்றிற்கான ரூ.80.15 இலிருந்து 2020இல் கி.கிராமொன்றிற்கு ரூ.94.36 இற்கு அதிகரித்தது. தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை (க.ஏ.பெ) முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட கி.கிராமொன்றிற்கான ஐ.அ.டொலர் 4.60 உடன் ஒப்பிடுகையில் 2020இல் கி.கிராமொன்றிற்கு ஐ.அ.டொலர் 4.67 இற்கு 1.6 சதவீதத்தினால் அதிகரித்தது. தேயிலை விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு குறைவடைந்த உள்நாட்டு உற்பத்திகளின் காரணமாக கொழும்பு தேயிலை ஏலங்களில் நிரம்பல் செய்யப்பட்ட அளவில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாயிருந்த போதிலும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக ஏற்பட்ட பின்னடைவினால்

உலகளாவிய போட்டியாளர்களிடமிருந்தான தேயிலை ஏற்றுமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி, உள்நாட்டு ஏற்றுமதியாளர்கள் 2020இல் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த விலைகளைக் கவர்ந்து கொள்வதனை இயலச்செய்தது.

## இறப்பர்

**ஆண்டின் பின்னரைப்பகுதியில் நிலவிய கவர்ச்சிகரமான சந்தை விலைகள் மற்றும் சாதகமான வானிலை நிலைமைகள் காரணமாக 2020இல் இறப்பர் உற்பத்தி 4.6 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.** கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் முதலாவது அலையின் போதான பயணக் கட்டுப்பாடுகளின் காரணமாக பாலெடுக்கும் நாட்களின் எண்ணிக்கை குறைவடைந்தமை மற்றும் இறப்பர் வளரும் பிரதேசங்களில் காணப்பட்ட வரண்ட வானிலை நிலைமைகள் காரணமாக 2020இன் முதலரைப்பகுதியில் இறப்பர் உற்பத்தி 10.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த போதும், ஒப்பீட்டு ரீதியில் சிறந்த வானிலை நிலைமைகளின் காரணமாக ஆண்டின் பின்னரைப் பகுதியில் இறப்பர் உற்பத்தி 23.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டது. உற்பத்தி செய்யப்பட்ட இறப்பரின் முக்கிய வகைகளிடையே, மொத்த இறப்பர் உற்பத்தியில் ஏறத்தாழ 50 சதவீதத்திற்கு வகைகூறும் தட்டை இறப்பர் உற்பத்தி 4.6 சதவீதத்தினால் 39.1 மில்லியன் கி.கிறாம்களுக்கு அதிகரித்தது. எனினும், 2020இல் மொத்த இறப்பர் உற்பத்தியில் 17 சதவீதத்திற்குப் பங்களிக்கும் கிறேப் இறப்பரின் உற்பத்தி 10.2 சதவீதத்தினால் 13.0 மில்லியன் கி.கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, மொத்த இறப்பர் உற்பத்தியில் ஏறத்தாழ 33 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தும் குறித்துரைக்கப்பட்டாத இறப்பர் வகைகளின் உற்பத்தி இவ்வாண்டுப்பகுதியில் 14.0 சதவீதத்தினால் 26.1 மில்லியன் கி.கிறாம்களுக்கு குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. 2020இல், கைத்தொழில் துறையில் மூலப்பொருள் வடிவிலான இறப்பரின் உள்நாட்டு நுகர்வு 112.1 மில்லியன் கி.கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்த அதேவேளையில், மொத்த இறப்பரின் ஏற்றுமதிகள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 15.8 மில்லியன் கி.கிறாம்களாக 21.3 சதவீதத்தினால் அதிகரித்தது.

**கொழும்பு இறப்பர் ஏலங்களில் இறப்பர் விலைகள், குறிப்பாக ஆண்டின் இறுதிப்பகுதியில் அதிகரித்தமைக்கு உலகளாவிய சந்தைகளில் இயற்கை இறப்பர் விலைகள் உயர்வடைந்தமை ஆதரவாக அமைந்தது.** கொவிட்-19 நோய்த்தொற்றின் காரணமாக ஏற்பட்ட குறைவான உலகளாவிய கேள்வியின் விளைவாக 2020 ஏப்பிறலிலிருந்து ஓகத்து வரை கொழும்பு இறப்பர் ஏலங்களில் நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்பட்ட தட்டை இறப்பர் வர்த்தகப்படுத்தப்படாத போதும், நாடாவாக்கப்பட்டு பூகையூட்டப்பட்ட தட்டை இறப்பரின் சராசரி விலைகள் 2020இல் கி.கிறாமொன்றிற்கு ரூ.351.46 இற்கு 21.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. 2020 காலப்பகுதியில் லேட்டெக்ஸ் கிறேப்பின் சராசரி விலை ரூ.359.04 இற்கு 18.8 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, 2020 திசெம்பரில் நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்பட்ட தட்டை இறப்பர் 1 மற்றும் லேட்டெக்ஸ் கிறேப் என்பனவற்றின் சராசரி ஏல விலைகள் முறையே கி.கிறாமொன்றிற்கு ரூ.440.00 ஆகவும் ரூ.462.17 ஆகவும் விளங்கின. இறப்பரின் சராசரி க.ஏ.பெ. விலை 2019இன் கி.கிறாமொன்றிற்கான ஐ.அ.டொலர் 1.86 உடன் ஒப்பிடுகையில் 2020இல் கி.கிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 1.91 இற்கு 2.6 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. 2020ஆம் ஆண்டின் பின்னரைப்பகுதியில் சீன நாட்டின் கேள்வி மீட்சியடைந்தமை, பயணத் தடைகளின் காரணமாக தாய்லாந்தின் தாழ்ந்த உற்பத்தி,

அட்டவணை 2.4
முதன்மை வேளாண்மைப் பயிர்களின் போக்குகள்

| வகை | அலகு | 2019 (அ) | 2020 (ஆ) | மாற்றம் (%) 2018/19 (அ) | மாற்றம் (%) 2019//20 (ஆ) |
|---|---|---|---|---|---|
| 1. தேயிலை | | | | | |
| 1.1 உற்பத்தி (இ) | மில் கி.கி | 300.1 | 278.9 | -1.2 | -7.1 |
| 1.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 200 | 200 | - | - |
| 1.3 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 193 | 193 | - | - |
| 1.4 உற்பத்திச் செலவு (ஈ) | ரூபா/கி.கி | 483.79 | வி.கி | 1.8 | - |
| 1.5 சராசரி விலை | | | | | |
| - கொழும்பு ஏலம் | ரூபா/கி.கி | 546.67 | 633.85 | -6.0 | 15.9 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 822.25 | 866.70 | 0.2 | 5.4 |
| 1.6 மீள்நடுகை | எக்டேயர்கள் | 638 | 907 | -37.9 | 42.2 |
| 1.7 புதிய பயிரிடுகை | எக்டேயர்கள் | 296 | 424 | -32.0 | 43.2 |
| 1.8 மொ.உ.உ.,இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.7 | 0.6 | | |
| 2. இறப்பர் | | | | | |
| 2.1 உற்பத்தி | மில் கி.கி | 74.8 | 78.2 | -9.4 | 4.6 |
| 2.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 138 | 138 | 0.4 | 0.2 |
| 2.3 பாலெடுக்கப்பட்ட நிலப்பரப்பு (ஊ) | '000 எக்டேயர்கள் | 114 | 117 | 6.2 | 3.0 |
| 2.4 உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி | 210.00 | 213.50 | 2.4 | 1.7 |
| 2.5 சராசரி விலை | | | | | |
| - கொழும்பு ஏலம் (ஆர்எஸ்எஸ்1) | ரூபா/கி.கி | 288.51 | 351.46 | 2.5 | 21.8 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 332.29 | 353.84 | -8.7 | 6.5 |
| 2.6 மீள்நடுகை (ஊ) | எக்டேயர்கள் | 1,040 | 955 | 19.5 | -8.2 |
| 2.7 புதிய பயிரிடுகை (ஊ) | எக்டேயர்கள் | 1,103 | 720 | 12.6 | -34.7 |
| 2.8 மொ.உ.உ இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.2 | 0.3 | | |
| 3. தெங்கு | | | | | |
| 3.1 உற்பத்தி | காய்கள் மில் | 3,086 | 2,792 | 17.6 | -9.5 |
| 3.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 503 | 506 | 0.9 | 0.5 |
| 3.3 உற்பத்திச் செலவு | ரூபா/காய் | 18.33 | வி.கி | -2.7 | - |
| 3.4 சராசரி விலை | | | | | |
| - உற்பத்தியாளர் விலை | ரூபா/காய் | 47.04 | 63.52 | -22.5 | 35.0 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) (எ) | ரூபா/காய் | 41.60 | 58.91 | -39.1 | 41.6 |
| 3.5 மீள்நடுகை/கீழ்பயிரிடுகை (ஏ) | எக்டேயர்கள் | 5,931 | 5,333 | -21.4 | -10.1 |
| 3.6 புதிய பயிரிடுகை (ஐ) | எக்டேயர்கள் | 6,842 | 8,000 | -32.8 | 16.9 |
| 3.7 மொ.உ.உ இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.7 | 0.6 | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பச்சைத் தேயிலை உட்பட
(ஈ) பச்சைத் தேயிலை வழங்குனர்களின் இலாபவீச்சு உட்பட
(உ) வளர்த்தல் மற்றும் பதனிடுதல் மட்டும்
(ஊ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிர்ச்செய்கை உதவித் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு
(எ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்
(ஏ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயிர்ச்செய்கை உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு
(ஐ) புதிதாக நடுகையிடப்பட்ட பரப்பானது ஒரு எக்டேயருக்கு 158 விதைகள் என்ற மாற்றல் வீதத்தில் தெங்குப் பயிர்ச்செய்கை சபையால் விநியோகிக்கப்பட்ட தெங்கு விதைகளின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது.

*மூலங்கள்:* இலங்கைத் தேயிலைச் சபை
தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி அதிகார சபை
பெருந்தோட்ட அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத்திணைக்களம்
இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்
தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை
தெங்கு அபிவிருத்தி அதிகாரச்சபை
பெருந்தோட்ட கம்பனிகள்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

தென்கிழக்காசியாவின் இறப்பர் பெருந்தோட்டங்களில் பரவிய பங்கசு நோய் என்பன உலகளாவிய சந்தைகளில் இயற்கை இறப்பரின் விலைகள் உயர்வடைய முக்கிய காரணங்களாக அமைந்தன.

## தெங்கு

2

**தெங்கினதும் தெங்கு உற்பத்திகளினதும் வழங்கல் 2020இல் சுருக்கமொன்றினைக் கொண்டிருந்தன.** 2019இல் முக்கிய தெங்கு வளரும் பிரதேசங்களில் பெறப்பட்ட குறைவான மழைவீழ்ச்சியின் காலம் கடந்த தாக்கத்தின் விளைவாக 2020இல் தெங்கு உற்பத்திகள் 9.5 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டின. கொவிட்-19 நோய்த்தொற்றின் காரணமாகத் தோன்றிய தேங்காய் உற்பத்திகளின் சுருக்கமும் வழங்கல் பக்க தடங்கல்களும் தெங்குடன் தொடர்பான கைத்தொழில்களின் மீது மோசமான தாக்கத்தினை ஏற்படுத்தின. இதன்படி, தேங்காய்த் துருவல் உற்பத்தி 2019இன் 44,081 மெ.தொன்களிலிருந்து 2020இல் 25,255 மெ.தொன்களுக்குக் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. எண்ணெய் ஆலைகளுக்கான உடன்காய்களின் மட்டுப்படுத்தப்பட்ட வழங்கல் காரணமாக தேங்காய் எண்ணெயின் உற்பத்தியும் 19,759 மெ.தொன்களுக்கு 55.7 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்த அதேவேளை வேர்ஜின் தேங்காய் எண்ணெய்யின் உற்பத்தி 2020இல் 18.1 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளையில், தேங்காய் எண்ணெய்யின் இறக்குமதி 2019இன் 4,628 மெ.தொன்களிலிருந்து 2020இல் 79,060 மெ.தொன்களுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. உள்நாட்டுத் தேங்காய் எண்ணெய் கைத்தொழிலுக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் 2020ஆம் ஆண்டுப்பகுதியில் தேங்காய் எண்ணெய், வேர்ஜின் தேங்காய் எண்ணெய் மற்றும் தாவர எண்ணெய் இறக்குமதிகள் மீதான சிறப்புப் பண்டத் தீர்வையினை அரசாங்கம் பல தடவைகள் சீராக்கியது. மேலும், உள்நாட்டு எண்ணெய்த் தயாரிப்பாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டும் தெங்கினை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்காகவும் தேங்காய் எண்ணெய்யினை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக உலர்த்திய தேங்காய்த் துண்டுகளை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2019 உடன் ஒப்பிடுகையில் உலர்த்திய தேங்காய் ஏற்றுமதிகளும் உடன் தேங்காய்களின் ஏற்றுமதிகளும் 2020இல் முறையே 72.4 சதவீதத்தினாலும் 25.2 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. தேங்காய் உற்பத்திகளில் வீழ்ச்சி காணப்பட்ட போதும் தேங்காய் கிறீம் மற்றும் தேங்காய் பால் உற்பத்திகள் 2020இல் வளர்ச்சியடைந்த போதும் தேங்காய்ப் பால்மா உற்பத்தி வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

**குறைந்தளவான உள்நாட்டு உற்பத்தியின் காரணமாக ஏற்பட்ட நுகர்வு மற்றும் கைத்தொழில் பயன்பாட்டிற்கான தேங்காயின் கடுமையான பற்றாக்குறை 2020இல் தேங்காய் மற்றும் தேய்காயினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் விலைகளில் அதிகரிப்புக்களைத் தோற்றுவித்தன.** இதற்கமைய, தேங்காயின் சராசரி சில்லறை விலைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேங்காயொன்றிற்கு ரூ.73.82 இற்கு 45.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. கொழும்பு தெங்கு ஏலத்தில் தேங்காயின் சராசரி ஏல விலையும் 2019இன் தேங்காயொன்றிற்கு ரூ.27.55 இலிருந்து தேங்காயொன்றிற்கு ரூ.48.89இற்கு அதிகரித்தது. உடன் தேங்காயின் சந்தை விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு தேங்காயினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் செலவினை மேல் நோக்கி அதிகரித்தன. இதற்கமைய, தேங்காய் எண்ணெயின் சராசரி விலை 2020இல் 750 மி.லீற்றர் போத்தலொன்றிற்கு ரூ.343.18 இலிருந்து 31.9 சதவீதத்திற்கு கணிசமாக அதிகரித்த வேளையில் தேங்காய்த் துருவலின் சராசரி உள்நாட்டுச் சந்தை விலைகளும் 2019இன் கி.கிறாமொன்றிற்கான ரூ.251.03 இலிருந்து 2020இல் கி.கிறாமொன்றிற்கு ரூ.447.56 இற்கு அதிகரித்தது. மேலும், தேங்காய் துருவல் ஏற்றுமதிகளில் 36.5 சதவீதம் கொண்ட வீழ்ச்சி அவதானிக்கப்பட்ட வேளையில் தேங்காய்த் துருவலின் ஏற்றுமதி விலை இவ்வாண்டுப்பகுதியில் 37.3 சதவீதத்தினால் அதிகரித்தது. 2020 செத்தெம்பரில் தேங்காயின் சுற்றளவினை அடிப்படையாகக் கொண்டு காயொன்று ரூ.60 இலிருந்து ரூ.70 வரையான வீச்சிற்குள் தேங்காய்க்கான உயர்ந்தபட்ச சில்லறை விலைகளை அரசாங்கம் அமுல்படுத்திய போதிலும் மட்டுப்படுத்தப்பட்ட வழங்கல் காரணமாக உள்நாட்டுச் சந்தைகளில் தேங்காய்கள் கட்டுப்பாட்டு விலைகளுக்கு மேலேயே விற்கப்பட்டன.

## சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

**வேளாண்மை ஏற்றுமதித் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி, சிறு ஏற்றுமதிப் பயிர்களின் செயலாற்றம் 2020இல் மீட்சியுற்று 23.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** இவ்வாண்டுப்பகுதியில் இஞ்சி, மஞ்சள், கறுவா, மிளகு, கொக்கோ, ஏலக்காய் மற்றும் பாக்கு என்பனவற்றின் உற்பத்தி அதிகரித்த வேளையில், கராம்பு மற்றும் சாதிக்காய் உற்பத்திகள் வீழ்ச்சியடைந்தன. இஞ்சி, மிளகு மற்றும் மஞ்சள் போன்ற ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்களின் உற்பத்தி மீது அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் காரணமாக அத்தகைய பயிர்களைப் பயிரிடுவதில் வேளாண்மையாளர்கள் குறிப்பிடத்தக்க ஈடுபாட்டினைக் காட்டினர். இதற்கமைய, பச்சை மஞ்சள் உற்பத்தி 2020இல் 25,506 மெ.தொன்களாக விளங்கி 170.9 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்த அதேவேளையில், இஞ்சியின் உற்பத்தி 22,705 மெ.தொன்களுக்கு 64.7 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வாண்டுப்பகுதியில் மிளகு உற்பத்தியும் 23,970 மெ.தொன்களுக்கு 8.2 சதவீதத்தினால் அதிகரித்தது. கறுவாவின் உற்பத்தி 2020இல் 20,866 மெ.தொன்களுக்கு சிறிதளவால் அதிகரித்த வேளையில் பாக்கின் உற்பத்தி 20,526 மெ.தொன்களுக்கு 15.7 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, கராம்பு மற்றும் சாதிக்காய் உற்பத்தி 2020இல் முறையே 26.6 சதவீதத்தினாலும்

46.3 சதவீதத்தினாலும் 3,512 மெ.தொன்களுக்கும் 2,751 மெ.தொன்களுக்கும் வீழ்ச்சியடைந்தமைக்கு பயிர் சுழற்சி தாமதடைந்தமையின் காரணமாக அறுவடைக்காலம் தாமதடைந்தமையே காரணமாகும்.

## ஏனைய களப் பயிர்கள்

**குறிப்பிட்ட ஏனைய களப் பயிர்களின் இறக்குமதி மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுடன் உள்ளூர் உற்பத்தியாளர்கள் உயர்ந்த விலைகளைப் பெற்றுக் கொண்டமை உள்ளூர் உற்பத்திகள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரிக்க வழிவகுத்தன.** இதற்கமைய, ஏனைய களப் பயிர்களின் ஒட்டுமொத்த உற்பத்தி 2020இல் 664,380 மெ.தொன்களுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 21.7 சதவீதத்தினால் அதிகரித்தன. இது, 2019/2020 பெரும்போகத்தில் ஏற்பட்ட 13.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியினதும் 2020 சிறுபோகத்தில் காணப்பட்ட 38.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியினதும் இணைந்த விளைவாகும். சோளம், குரக்கன், பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், பயறு, உழுந்து, நிலக்கடலை, இறுங்கு மற்றும் தட்டைப் பயறு என்பனவற்றின் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020இல் அதிகரித்தது. அதேவேளை 2019இல் 33.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த பெரிய வெங்காயத்தின் உற்பத்தி இவ்வாண்டுப்பகுதியில் 131.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தமையின் மூலம் மீண்டும் மீட்சியுற்றது. எனினும், பெரிய வெங்காயத்தின் இறக்குமதி 2020இல் 265,863 மெ.தொன்களுக்கு 10.7 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், 2020இல் உருளைக்கிழங்கு உற்பத்தி 65,085 மெ.தொன்களுக்கு 36.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் உருளைக்கிழங்கின் இறக்குமதியும் 10.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஏனைய களப் பயிர்களின் மேம்பட்ட உள்ளூர் வழங்கல், அத்தகைய உற்பத்திகளைப் பயன்படுத்தும் உள்ளூர் கைத்தொழில்களுக்கு ஆதரவாக விளங்கி இறுக்குமதிக்கான கேள்வியைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டு உணவுப் பாதுகாப்பினை வலுப்படுத்தும் பொருட்டு, விதை உற்பத்தி, பூச்சிகொல்லி முகாமைத்துவம், களஞ்சிய இடவசதி இயலளவினை விரிவாக்குதல், காலநிலைக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய வேளாண்மை தொடர்பில் சிறந்த நடைமுறைகளை பின்பற்றுதல் மற்றும் சிறந்த விலைகளைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் சந்தைகளைப் பன்முகப்படுத்துவதற்கான அணுகுமுறைகளை அதிகரித்தல் என்பனவற்றை ஊக்குவிப்பதன் மூலம் ஏனைய களப்பயிர்களின் வழங்கலை மேம்படுத்துவதற்கான மேலதிக முயற்சிகளை எடுப்பது அவசியமாகிறது.

## காய்கறிகள்

**தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் மதிப்பீடுகளின்படி, கொவிட்-19 உடன் தொடர்பான வழங்கல் சங்கிலி தடங்கல்களுக்கு மத்தியிலும் 2020இல் காய்கறிகளின் உற்பத்தி 1.7 மில்லியன் மெ.தொன்களுக்கு அதிகரித்து 13.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** இவ்வதிகரிப்பிற்கு, 2019/2020 பெரும்போக உற்பத்தியில் ஏற்பட்ட 7.0 சதவீதம் கொண்ட அதிகரிப்பினாலும் 2020 சிறுபோக உற்பத்தியில் ஏற்பட்ட 20.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியினாலும் ஆதரவளிக்கப்பட்டது. எனினும், கொவிட்-19 உடன் தொடர்பான முடக்கல் நிலைமைகள் மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக வழங்கல் சங்கிலி தடங்கல்களின் விளைவாக இவ்வாண்டுப்பகுதி முழுவதிலும் காய்கறிகளின் விலைகளில் பரந்தளவு தளம்பல்கள் காணப்பட்டன. ஆகவே, பொருளாதார நிலையங்களுக்கு வேளாண்மை உற்பத்திகளை தாமதமாக கொண்டு செல்வது பண்ணைகளிலும் பொருளாதார நிலையங்களிலும் அறுவடைக்குப் பின்னரான பாரிய இழப்புக்களைத் தோற்றுவித்து சில்லறைச் சந்தைகளில் அடிக்கடி விலைத்தளம்பல்களை உருவாக்குகிறது. 2020ஆம் ஆண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 36.6 மில்லியன் பெறுமதி கொண்ட 33,206 மெ.தொன் காய்கறிகள் ஏற்றுமதி செய்யப்பட்ட வேளையில் ஐ.அ.டெலர் 352.9 மில்லியன் பெறுமதியான 716,494 மெ.தொன் காய்கறிகள் இறக்குமதி செய்யப்பட்டன. களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தலை மேம்படுத்தல், வளமாக்கி மற்றும் பூச்சிகொல்லிகள் போன்ற வேளாண்மை உள்ளீடுகளை சரியான அளவில் பயன்படுத்தல் மற்றும் காலநிலைகளுக்கு தாக்குப்பிடிக்கக்கூடியதும் நீடித்துநிலைத்திருக்கக்கூடியதுமான வேளாண்மை நடைமுறைகள் என்பன வேளாண்மையாளர்கள் உயர்ந்த வருமானத்தினைப் பெறுவதனை உறுதிப்படுத்துவதற்கும் நுகர்வோரைப் பாதுகாப்பதற்கும் துறையின் நீடித்துநிலைத்திருக்கும் தன்மைகளை அதிகரிப்பதற்கும் தவிர்க்க முடியாதவைகளாக காணப்படுகின்றன.

## பழவர்க்கங்கள்

**மாம்பழம், வாழைப்பழம், பப்பாப்பழம், கொய்யாப்பழம், வத்தகைப்பழம் என்பனவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட கணிசமான மேம்பாடுகளின் காரணமாக பழவர்க்கங்களின் உற்பத்தி முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 3.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் பழவர்க்கங்களின் உற்பத்தி 3.1 சதவீதத்தினால் அதிகரித்தது.** ஆய்விற்குரிய ஆண்டுப்பகுதியில், ஐ.அ.டொலர் 33.1 மில்லியன் பெறுமதியான 38,725 மெ.தொன் பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட வேளையில், ஐ.அ.டொலர் 58.1 மில்லியன் பெறுமதியான 52,778 மில்லியன் மெ.தொன் கொண்ட அப்பிள், மண்டறின், தோடம்பழம் மற்றும் திராட்சை என்பனவற்றை உள்ளடக்கிய பழங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. சிறந்த ஏற்றுமதிகளுக்கு உள்நாட்டு பழங்களும் காய்கறிகளும் தேவைப்படுகின்ற போதும், உள்நாட்டு உற்பத்தியாளர்களினால் தொடர்ச்சியான அடிப்படையில் சிறந்த தரமான உற்பத்திகளைப் பெருமளவில் வழங்க முடியாமலுள்ளமை பழவர்க்கங்களின் ஏற்றுமதித் துறையினை அபிவிருத்தி செய்வதற்கு பெரும் தடையாகக் காணப்படுகின்றது. வேளாண்மை

உள்ளீடுகளைப் பயன்படுத்துவது மற்றும் அறுவடை செய்வது, உற்பத்தியாளர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்குமிடையில் நேரடி இணைப்புக்களை உருவாக்குவது என்பன தொடர்பில் சிறந்த வேளாண்மை நடைமுறைகளை மேம்படுத்துவதும் ஒப்பந்த ரீதியான பயிர்ச்செய்கை முறைமைகளை மேலும் அபிவிருத்தி செய்வதும் பழவர்க்கங்களின் ஏற்றுமதிகளை மேம்படுத்துவதற்கு முக்கியமானவையாகும்.

2

## சீனி

**2020இல் சீனி உற்பத்தி 59,869 மெ.தொன்களுக்கு 14.5 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பும் பிழியப்பட்ட கரும்பின் அளவும் அதிகரித்தமை உதவியாக அமைந்தன.** கல்லோயா மற்றும் செவனகல சீனி தொழிற்சாலைகளின் உற்பத்தி 81.3 சதவீதத்தினாலும் 0.6 சதவீதத்தினாலும் முறையே 20,173 மெ.தொன்களுக்கும் 16,114 மெ.தொன்களுக்கும் அதிகரித்தது. எனினும், மொத்த உள்நாட்டுச் சீனி உற்பத்தியில் ஏறத்தாழ 39 சதவீதத்திற்கு வகைகூறும் பெல்வத்தை சீனி தொழிற்சாலையின் வெளியீடு 2020இல் 6.3 சதவீதத்தினால் 23,582 மெ.தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு வரண்ட வானிலை நிலைமைகளினால் ஏற்பட்ட குறைந்த விளைவு வீதமும் குறைந்த சீனி பெறல் வீதமும்[4] காரணமாக அமைந்தன. கந்தளாய் சீனித் தொழிற்சாலையினையும் கரும்பு தோட்டத்தினையும் மீள நிறுவுவது தொடர்பில் இவ்வாண்டுப்பகுதியில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. அதேவேளை, எதிமாலே பிளாண்டேஷன் (பிறைவேற்) லிமிடெட் அண்மைய எதிர்காலத்தில் தயாரிப்புத் தொழிற்பாடுகளை ஆரம்பிக்கும் நோக்குடன் கரும்புச் செய்கையினை தொடங்கியது. பொதுவாக, சீனிபெறல் வீதம் முன்னைய ஆண்டின் 7.2 சதவீதத்திலிருந்து 2020இல் 6.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன் 2020இல் சீனி உற்பத்தி நாட்டின் மொத்த சீனித் தேவைப்பாட்டில் ஏறத்தாழ 9 சதவீதத்தினைப் பூர்த்திசெய்யப் போதுமானதாக இருந்தது. 2020இல் சீனி இறக்குமதி குறிப்பாக, 2020 ஒத்தோபரில் சீனி இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை குறைக்கப்பட்டமையின் பின்னர், 682,553 மெ.தொன்களுக்கு 22.7 சதவீதத்தினால் அதிகரித்தது. உள்நாட்டுச் சீனி உற்பத்தியை விரிவாக்குவதற்குப் போதுமானளவு உள்ளார்ந்த வளம் காணப்படுவதனையும் சீனி இறக்குமதியுடன் வெளிநாட்டுச் செலாவணி கணிசமானளவிற்கு தொடர்புபட்டிருப்பதனையும் பரிசீலனையில் கொள்கையில் நவீன தொழில்நுட்பவியல், உயர் விளைச்சல் தரும் கரும்பு வகைகள் மற்றும் சிறந்த பயிர் முகாமைத்துவ நடைமுறைகள் என்பனவற்றையும் பயன்படுத்துவதன் மூலம் சீனிக் கைத்தொழிலுக்குப் புத்துயிரளிப்பது இன்றியமையாததாகும்.

4 $\text{சீனி பெறல் வீதம்} = \dfrac{\text{உற்பத்தி செய்யப்பட்ட சீனி}}{\text{பிழியப்பட்ட கரும்பின் அளவு}} \times 100$

## விலங்கு வளர்ப்பு

**பால் உற்பத்தி தவிர்ந்த, உள்நாட்டு விலங்கு வளர்ப்புத் துறையின் வெளியீடு 2020இல் வீழ்ச்சியடைந்தது.** தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் மதிப்பீடுகளின்படி, 2020இல் மொத்தத் தேசிய பால் உற்பத்தி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 492 மில்லியன் லீற்றர்களுக்கு 9.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு வேளாண்மையாளர்கள் பாலுக்கு கவர்ச்சிகரமான விலைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதும் பால் சேகரிப்பாளரிடமிருந்து பாலுக்கான கேள்வி அதிகரித்து வருவதும் மற்றும் நோய்த்தொற்று காலப்பகுதியில் பகுதிநேர வேளாண்மையாளர்கள் விலங்கு வளர்ப்பில் முனைப்பாக ஈடுபட்டமையும் காரணங்களாக அமைந்தன. ஒரு லீற்றர் பாலுக்கான சராசரி உற்பத்திச் செலவு 2019இன் ரூ.48.32 இலிருந்து ரூ.49.28 இற்கு அதிகரித்தது. கோழி வளர்ப்புத் துறையினைப் பொறுத்தவரை, 2020இல் முட்டை உற்பத்தி 10.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு வர்த்தக ரீதியாக முட்டையிடும் கோழிகளை நேரகாலத்துடன் கொன்றமை, கோழித்தீனின் மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவு என்பனவற்றின் விளைவாக ஏற்பட்ட உற்பத்தி இழப்புக்களே காரணமாகும். மேலும், விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் தற்காலிகத் தரவுகளின்படி, கோழி இறைச்சி உற்பத்தி 3.5 சதவீதத்தினால் 216,160 மெ.தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. புறொயிலர் பேரன்ஸ் கோழியின் உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த அதேவேளையில் உயிருடனான விலங்கு இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக 2020ஆம் ஆண்டுப்பகுதியில் புறொயிலர் பேரன்ஸ் கோழியின் இறக்குமதி வீழ்ச்சியடைந்து, 2020இல் ஒரு நாள் புறொயிலர் கோழிக் குஞ்சின் கிடைப்பனவில் குறைப்பினைத் தோற்றுவித்தது. எனினும், முட்டை உற்பத்திக்காக, முட்டையிடும் கோழிக் குஞ்சுகளுக்கான உயர்ந்த கேள்விக்குப் பதிலிறுத்தும் விதத்தில் முட்டையிடும் பேரன்ஸ் கோழியின்

அட்டவணை 2.5
கால்நடைத்துறை புள்ளி விபரங்கள்

| துணைத்துறை | 2019 (அ) | 2020 (ஆ) | மாற்றம் (%) 2018/19 (அ) | மாற்றம் (%) 2019/20 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. மொத்த மந்தைகள் (எண்ணிக்கை) (மில்) | 1.4 | 1.4 | -2.5 | 3.0 |
| கறவைப் பசுக்கள் | 1.1 | 1.1 | -2.2 | 1.6 |
| எருமைகள் | 0.3 | 0.3 | -3.4 | 8.2 |
| 2. தேசிய பால் உற்பத்தி (மில். லீற்றர்கள்) | 447.6 | 491.5 | -6.3 | 9.8 |
| பசும்பால் | 374.0 | 413.6 | -4.5 | 10.6 |
| எருமைப்பால் | 73.6 | 77.9 | -3.4 | 5.9 |
| 3. பால் உற்பத்திகள் (மில். லீற்றர்கள்) (இ) | 220.3 | வி.கி | - | - |
| 4. உற்பத்தியாளர் விலை - பசும்பால் (ரூ./லீற்றர்) | 69.96 | 74.62 | 4.6 | 6.7 |
| 5. தேசிய முட்டை உற்பத்தி (எண்ணிக்கை) (மில்) | 2,084.2 | 1,869.7 | 5.7 | -10.3 |
| 6. தேசிய கோழி இறைச்சி உற்பத்தி ('000 மெ.தொ) | 224.0 | 216.2 | 4.6 | -3.5 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் தகவல்களின்படி

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

இறக்குமதி அதிகரித்தது. அதேவேளை, 2020இல் மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி மற்றும் ஆட்டிறைச்சியின் உற்பத்தி 54.5 சதவீதத்தினாலும் 4.7 சதவீதத்தினாலும் 11.0 சதவீதத்தினாலும் முறையே 13,580 மெ.தொன்களுக்கும் 8,580 மெ.தொன்களுக்கும் 1,610 மெ.தொன்களுக்கும் வீழ்ச்சியடைந்தன. பொழுதுபோக்குத் துறையிலிருந்தான குறைவடைந்த கேள்வி மற்றும் நோய்த்தொற்றின் காரணமாக சமூக செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டமை என்பன உள்நாட்டு விலங்கு வளர்ப்புத் துறையின் செயலாற்றத்திற்கு எதிர்க்கணியமாகப் பங்களித்தன.

## மீன்பிடி

**2020இல் மீன்பிடித் துறை பின்னடைவொன்றைக் கொண்டிருந்தது. மொத்த மீன் உற்பத்தி 2020இல் 15.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு, மொத்த மீன் உற்பத்தியில் 76 சதவீதத்திற்கு வகைகூறும் கடல் மீன் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும்.** அடிக்கடி ஏற்பட்ட வானிலை இடையூறுகள் மற்றும் நோய்த்தொற்றுக் காலப்பகுதியில், மீன்பிடியின் மீதும் ஏனைய வழங்கல் சங்கிலி நடவடிக்கைகளின் மீதும் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் விசேடமாக கொவிட்-19 கொத்தணிக்குள் மீன் வழங்கல் சங்கிலித் தோற்றம் காரணமாக ஆழ்கடல் மற்றும் கரையோர மீன்பிடி நடவடிக்கைகளில் கணிசமானளவு சுருக்கம் ஏற்பட்டது. மாறாக, மொத்த நன்னீர் மீன் உற்பத்தி 12.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியைக் காட்டியமைக்கு உள்நாட்டு மீன்பிடியும் கூனி இறால் வளர்ப்பு உற்பத்தியுமே ஆதரவாக அமைந்தன. மீன் குஞ்சுகளை மேம்பட்ட முறைகளில் இருப்பில் வைத்திருப்பதும் அவற்றை உள்நாட்டு நீர்நிலைகளுக்கு விடுவித்தமையும் உள்நாட்டு மீன் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்குப் பங்களித்தன. அதேவேளை, உள்நாட்டு மற்றும் உலகளாவிய முடக்கல் வழிமுறைகள் காரணமாக வீட்டுத்துறை மற்றும் சுற்றுலாவிடுதி துறைகளின் உள்நாட்டு மீன் நுகர்வு பாதிக்கப்பட்டமையும் மீன் வைரஸ்சைக் காவுகின்றது என்ற பயமும் ஆண்டு முழுவதும் விலைத்தளம்பல்கள் தோன்ற காரணமாகியது. சராசரியாக பெரிய மீன் வகைகள் 0.4 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் சிறிய மீன் வகைகள் இவ்வாண்டுப்பகுதியில் 19.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தன.

அட்டவணை 2.6
மீன் உற்பத்தி

| | | | | ‘000 மெற்றித்தொன்கள் |
|---|---|---|---|---|
| துணைத்துறை | 2019 | 2020 (அ) | மாற்றம் (%) | |
| | | | 2018/19 | 2019/20 (அ) |
| கடல் | 415 | 327 | -5.4 | -21.3 |
| கரையோரம் மற்றும் களப்பு | 243 | 183 | -2.6 | -24.7 |
| கடற்கரையிலிருந்து தொலைவில் | 173 | 144 | -9.2 | -16.5 |
| நன்னீர் மீன்பிடி | 90 | 102 | 3.0 | 12.7 |
| பிடிப்பு | 73 | 84 | 3.1 | 15.1 |
| பண்ணை மீன் வளர்ப்பு | 11 | 10 | 26.1 | -5.3 |
| இறால் வளர்ப்பு பண்னை | 6 | 7 | -21.8 | 15.0 |
| மொத்தம் | 506 | 429 | -4.0 | -15.2 |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* கடற்தொழில் அமைச்சு

அதேவேளை, முக்கிய ஏற்றுமதி நாடுகளிலிருந்தான குறைந்த கேள்வி மற்றும் உலகளாவிய வசதி ஏற்பாட்டு சங்கிலிகளுக்கு ஏற்பட்ட தடங்கல்கள் என்பனவற்றின் விளைவாக கடலுணவு ஏற்றுமதிகள் 2020இல் 29.5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

## வேளாண்மைக் கொள்கைகள் மற்றும் நிறுவன ரீதியான ஆதரவு

**நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் நெல் விலைகளை உறுதிப்படுத்துவதற்கும் அரசாங்கம் பல்வேறு வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது. இதற்கமைய, வளமாக்கி உதவுதொகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 2019/2020 பெரும்போகத்தில் 50 கி.கிறாம் கொண்ட பொதியொன்று ரூ.500 கொண்ட உதவுதொகை விலையில் வேளாண்மையாளர்களுக்கு வழங்கப்பட்டது.** இதற்கமைய ஏறத்தாழ 193,322 மெ.தொன் வளமாக்கி இக்குறிப்பிட்ட பருவகாலத்தின் போது நெற் செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும், அரசாங்கம் 2020 சிறுபோகத்திலிருந்து நெற்செய்கையாளர்களுக்கு உயர்ந்தபட்சம் இரண்டு எக்டேயர் நிலப்பரப்பிற்கு இலவசமாக வளமாக்கியை வழங்குவதற்குத் தீர்மானித்திருப்பதுடன் 2020 சிறுபோகத்தில் 131,309 மெ.தொன் வளமாக்கி வழங்கப்பட்டது. நெல் வேளாண்மையாளர்கள் இலாபமீட்டக்கூடிய விலைகளைப் பெற்றுக்கொள்வதையும் நெற் சந்தை விலைகளில் தளம்பலின்மையை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் அரசாங்கம் உத்தரவாதப்படுத்தப்பட்ட விலைகளில் நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைளை மேற்கொண்டது. நெற் சந்தைப்படுத்தும் சபை 2019/2020 பெரும்போக அறுவடையிலிருந்து ஏறத்தாழ 26,000 மெ.தொன் நெல் இருப்பினைக் கொள்வனவு செய்ததெனினும், நெற்சந்தைப்படுத்தும் சபையினால் முன்வைக்கப்பட்ட உத்தரவாத விலையினை விட சந்தையில் நிலவும் விலைகள் உயர்வாக இருந்தமையின் காரணமாக 2020 சிறுபோகத்தில் ஏறத்தாழ 4,000 மெ.தொன்னை மட்டுமே கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்தது. அதேவேளை, அரிசி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் வரட்சிக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய விதத்தில் மாற்றியமைக்கப்பட்ட புதிய குறுகிய கால கலப்பு அரிசி வகைகளை உருவாக்கியது. மேலும், வேளாண்மை அமைச்சு விரிவாக்கல் பணிகள், பயிர்க் காப்புறுதி, பூச்சிகொல்லி முகாமைத்துவம் உள்ளிட்ட அதன் ஆதரவுப் பணிகளைத் தொடர்ந்தும் வழங்கிய வேளையில் காலநிலைத் திறன் கொண்ட வேளாண்மை நடைமுறைகளைப் பிரபல்யப்படுத்துகின்ற விதத்தில் சிறப்பு நடுப்பருவகால பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

**இலங்கை தேயிலைச் சபை, தேயிலை சிறுஉடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் என்பன உற்பத்தியாக்கம் மற்றும் தொழில்நுட்பவியல் மேம்பாடுகளை இலக்காகக் கொண்டு அவற்றின் அபிவிருத்தி**

**நடவடிக்கைளைத் தொடர்ந்தன.** தொற்றுக் காலப்பகுதியில் தேயிலை ஏலங்கள் பாரம்பரியமான நேரில் சமூகமளிக்கும் முறையிலிருந்து விலகி மின்-ஏல தளத்திற்கு தூர இடங்களிலிருந்து கொண்டே விலைக்குறிப்பீடுகளை மேற்கொள்ளக்கூடிய தன்மைக்கு மாற்றமடைந்தது. இதன்படி, ஆய்விற்குரிய காலப்பகுதியில் மின்-ஏலங்களினூடாக 200 மில்லியன் கி.கிறாம்களுக்கும் கூடுதலான தேயிலை விற்பனை செய்யப்பட்டது. அதேவேளை, அரசாங்கம், பெருந்தோட்டத் துறையில் நீண்ட காலங்களாகக் காணப்படும் கூலிப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டு கூலி நிர்ணயச்சபையினூடாக இத்துறையிலுள்ள தொழிலாளர்களுக்கான நாளாந்தக் கூலிகளை ரூ.1,000 வரையில் அதிகரிப்பதற்குத் தீர்மானித்திருக்கிறது. மாதிரித் தேயிலை தோட்டங்களில் ஒவ்வொரு எக்டேயருக்கும் ரூ.1 மில்லியனை வழங்கியதன் மூலம் நடுத்தரளவு தேயிலைத் தோட்டங்களுக்காக மாதிரித் தேயிலைத் தோட்டச் செயற்றிட்டமொன்றினை ஆரம்பித்தது. இலங்கை தேயிலைச் சபையின் தேயிலைத் துறைக்கு புத்துயிரளித்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2020இல் 56 தேயிலைத் தொழிற்சாலைகளுக்காக ரூ.168 மில்லியன் வழங்கப்பட்டது. தேயிலை சிறுஉடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை தேயிலை மீள்நடுகை மற்றும் புது நடுகை நிகழ்ச்சித்திட்டங்களிலும் பயிர் புத்தாக்க உதவுதொகை நிகழ்ச்சித்திட்டத்திலும் தொடர்ந்தும் அதன் முயற்சிகளை மேற்கொண்டது. 2020இல் ஏறத்தாழ 648 எக்டேயர் தேயிலை நிலங்களும் ஏறத்தாழ 424 எக்டேயர் புதிய நிலங்களும் தேயிலை நிலங்களுக்கு மாற்றப்பட்ட வேளையில் 2.1 மில்லியன் தேயிலைக் கன்றுகள் தேயிலை நிலங்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காகப் பயன்படுத்தப்பட்டன.

**உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்துவதற்காகவும் இறப்பர் பயிர்ச்செய்கை நிலப்பரப்பினை விரிவுபடுத்துவதற்காகவும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினாலும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தினாலும் பல்வேறு வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.** இதன்படி, புதிய பயிரிடல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2020இல் 720 எக்டேயர்கள் புதிய இறப்பர் பயிர்ச்செய்கை நிலங்கள் பயிரிடப்பட்டன. அதேவேளை, 815 எக்டேயர்கள் உற்பத்தியாக்க முன்னேற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட வேளையில் இவ்வாண்டுப்பகுதியில் 955 எக்டேயர்கள் மீளப் பயிரிடப்பட்டன. 2020இல் 300 எக்டேயர் பால் எடுக்கப்படாத நிலங்கள் பாலெடுக்கும் நிலப்பரப்பிற்குள் கொண்டு வரப்பட்டன. அதேவேளை, மரமொன்றிற்கு மழைத்தடுப்பியைப் பொருத்துவதற்கான உதவுதொகை சிறுஉடமையாளர் துறை மற்றும் கம்பனி துறைகள் இரண்டிற்கும் 2020இல் அதிகரிக்கப்பட்டது. இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் இறப்பர் பயிர்ச்செய்கை, பதனிடல் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி ஆகிய அனைத்து அம்சங்களிலும் அதன் ஆராய்ச்சியையும் அபிவிருத்தியையும் தொடர்ந்தது. இதற்கமைய, இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் சிறியளவு பயிர்ச்செய்கையாளர், நடுத்தரளவு பயிர்ச்செய்கையாளர், பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள்/ தோட்டங்கள் மற்றும் பாலெடுத்தலை கைவிட்ட பயிர்ச்செய்கையாளர் என நான்கு வகையினரின் கீழ் இறப்பர் பயிர்ச்செய்கையாளர்களுக்காக சிறப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தது. இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம், இறப்பரின் தொழில்நுட்ப ஆய்வுகூடங்களினைத் தரமுயர்த்தல் மற்றும் இணைத்தல், குறைந்தளவில் வளமாக்கியைப் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல் மற்றும் இறப்பர் தொழிலினை சூழல் முறையில் நீடித்துநிலைத்திருக்கும் தொழில்துறையாக மேம்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

**தெங்கு உற்பத்திக்கும் தெங்கை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களுக்கும் ஆதரவளிப்பதற்காக அரசாங்கம் பல்வேறு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது.** வரட்சி நிலைமைகள் மற்றும் பயணக் கட்டுப்பாடுகளின்

அட்டவணை 2.7
முக்கிய உணவுப் பண்டங்களின் கிடைப்பனவு

| விடயம் | அலகு | 2010 | | | 2019 | | | 2020 (அ) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உற்பத்திபு | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) |
| அரிசி (ஆ) | மெ.தொ'000 | 3,011 | 126 | 152 | 3,214 | 24 | 149 | 3,585 | 16 | 164 |
| சோளம் | மெ.தொ'000 | 162 | 16 | 9 | 246 | 118 | 17 | 314 | 44 | 16 |
| கோதுமை | மெ.தொ'000 | - | 1,051 | 51 | - | 1,159 | 53 | - | 1,404 | 64 |
| பெரிய வெங்காயம் | மெ.தொ'000 | 59 | 158 | 10 | 19 | 240 | 12 | 43 | 266 | 14 |
| சீனி | மெ.தொ'000 | 31 | 548 | 28 | 52 | 556 | 28 | 60 | 683 | 34 |
| உருளைக் கிழங்கு | மெ.தொ'000 | 52 | 130 | 9 | 102 | 142 | 11 | 65 | 127 | 9 |
| உடன் மீன் | மெ.தொ'000 | 385 | 14 | 19 | 506 | 19 | 24 | 429 | 13 | 20 |
| பசும்பால் | மில்லியன் லீற்றர்கள் | 192 | - | 9 (இ) | 374 | - | 17 (இ) | 414 | - | 19 (இ) |
| தேங்காய் எண்ணெய் | மெ.தொ'000 | 65 | 3 | 3 | 45 | 5 | 2 | 20 | 79 | 5 |

(அ) தற்காலிகமானது
(ஆ) 1 மெற்றிக்தொன் நெல் = 0.7 மெற்றிக்தொன் அரிசி
(இ) ஆண்டொன்றிற்கான லீற்றர்கள்

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
லங்கா சீனிக் கம்பனி லிமிட்டெட் - செவனகல அலகு
லங்கா சீனிக் கம்பனி (தனியார்) லிமிட்டெட் - பெல்வத்தை அலகு
கல்லோயா (ஹிங்குரான) சீனிக் கைத்தொழில் லிமிட்டெட்
கடற்றொழில் அமைச்சு
தெங்கு அபிவிருத்தி அதிகார சபை

காரணமாக வழங்கல் சங்கிலியில் ஏற்பட்ட இடையூறுகள், சந்தை மூடப்பட்டமை, தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் வசதிகளை வழங்கும் ஏற்பாட்டில் காணப்பட்ட இடர்ப்பாடுகள் போன்றவற்றினால் ஏற்பட்ட அதிகரித்த விரயங்கள் காரணமாக 2020இல் தெங்குத் துறை மோசமாகப் பாதிக்கப்பட்டது. ஆகவே, தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தெங்குத் துறை மீதான கொவிட்-19இன் தாக்கத்தினை குறைக்கின்ற கட்டுப்பாட்டு வழிமுறைகளுக்கு மத்தியில் உற்பத்தி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தது. தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை பரிவர்த்தனைச் செய்முறைகளைத் தொடர்வதனை இயலச்செய்வதற்காகவும் நியாயமான விலை மட்டங்களைப் பேணுவதற்காகவும் மின்-ஏல வசதிகளை முன்னெடுத்தது. நீடித்துநிலைத்திருக்கும் தெங்குப் பயிர்ச்செய்கை உபாயங்களை நிறுவுகின்ற நோக்குடன் தெங்கு பயிர்ச்செய்கைச் சபையினால் முறைமை சார்ந்த பயிர்ச்செய்கைக்காகவும் வீட்டுத்தோட்டச் செய்கைக்காகவும் தென்னங் கன்றுகளுக்காக (கன்றொன்று ரூ.100) உதவுதொகை வழங்கப்பட்ட பொதுவான விலை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் முறைமை சார்ந்த நீர்ப்பாசன முறைமையை நடைமுறைப்படுத்துவதற்காகவும் பூச்சிகளையும் நோய்களையும் கட்டுப்படுத்துவதற்காகவும் நிதியிடல் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டதுடன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தினால் நேரகாலத்துடன் பயனளிக்கும் உயர் விளைச்சல் தரக்கூடிய சிறப்பம்சங்களுடைய புதிய தெங்கு கலப்பினமொன்றை அறிமுகப்படுத்திய அதேவேளையில் குருநாகல் பிளாண்டேஷன் லிமிடெட்டுடன் இணைந்து உயர் விளைச்சலைத்தரும் கப்சுவாயா கலப்பு இனத் தென்னைகளை உற்பத்தி செய்வதற்காக புதிய தென்னம் விதைத் தோட்டமொன்றினை நிறுவுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம் கொவிட்-19 நோய்த்தொற்றிற்கு மத்தியிலும் பயிர்ச்செய்கையாளர்,** சேகரிப்பவர்கள், பதனிடுபவர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் உட்பட, ஏற்றுமதி வேளாண்மைத் துறையின் ஆர்வலர்களுக்கு பல்வேறு வழிகளிலும் உதவிகளை வழங்கியது. இதற்கமைய, புதிய பயிரிடல் நடவடிக்கைகளை விரிவுபடுத்தியதன் மூலம் ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பல்வேறு வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில் தற்போதுள்ள பயிச்செய்கைகளின் விளைச்சலை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மீள்பயிர்ச்செய்கையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம் பல்வேறு பயிர்களுக்காக பெறுமதிகூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்திய வேளையில், 2021இல் மஞ்சளில் தன்னிறைவினை அடையும் நோக்குடன் “விரைவுபடுத்தப்பட்ட மஞ்சள் பயிர்ச்செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்” ஆரம்பிக்கப்பட்டது.

**2020 - 2022 காலப்பகுதிக்கான, உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டமானது, பயிர் பன்முகப்படுத்தல் மற்றும் உற்பத்தியாக்க மேம்பாடுகள் என்பனவற்றினூடாக சோளம், வெங்காயம் மற்றும் உருகிளைக்கிழங்கு போன்ற பயிர்களில் நாட்டினைத் தன்னிறைவு அடையச்செய்வது உட்பட்ட பல்வேறு இலக்குகளில் கவனம் செலுத்தியது.** இதற்கமைய, வேளாண்மைத் திணைக்களம் சிறந்த வேளாண் நடைமுறைகளைப் பிரபல்யப்படுத்தல், ஏனைய களப்பயிர்களின் பயிர்ச்செய்கையின் கீழான நிலப்பரப்பினை விரிவுபடுத்தல், மண் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல், வினைத்திறன் மிக்க பயிர் முகாமைத்துவ உத்திகளை மேம்படுத்தல், உயர் விளைச்சலைத்தரும் விதைகளின் பயன்பாட்டினை உறுதிப்படுத்தல் மற்றும் நீர் முகாமைத்துவத்தினை மேம்படுத்தல் என்பன தொடர்பில் அதன் முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. மேலும், வேளாண்மை அமைச்சு, ஏனைய களப்பயிர்களின் உற்பத்தியை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், ஊட்டச்சத்து நிறைந்த வீட்டுத்தோட்டங்களை அமைக்கும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கொத்தணிக் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பனவற்றைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. எனினும், பயிர்செய்கை நிலப்பரப்பினை அதிகரிப்பதனூடாக மாத்திரம் உணவில் சுயநிறைவினை எய்துவதற்கு முயற்சிப்பதிலும் பார்க்க வேளாண்மை உள்ளீடுகளை வினைத்திறன்மிக்க விதத்தில் பயன்படுத்தல், காலநிலைத் தாக்கங்களுக்கு தாக்குப்பிடிக்கும் நடைமுறைகள் மற்றும் அறுவடைக்குப் பின்னரான நடைமுறைகள் என்பனவற்றினூடாக அனைத்து உணவு வகைகளினதும் உற்பத்தித்திறனை அதிகரிக்கக்கூடிய நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட அனைத்தையும் உள்ளடக்கிய அணுகுமுறையொன்றினைப் பின்பற்றுவதே நாட்டிற்கு அவசியமானதாகும்.

**இவ்வாண்டுப்பகுதியில் சீனி ஆராய்ச்சி நிறுவகம் உள்நாட்டுச் சீனி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் பல ஆராய்ச்சி நடவடிக்கைகளையும் விரிவாக்கப் பணிகளையும் மேற்கொண்டது. இதற்கமைய, சீனி ஆராய்ச்சி நிறுவகம் வர்த்தக பயிரிடலுக்காக உயர் சீனி உள்ளடக்கத்தினைக் கொண்ட இறக்குமதி செய்யப்பட்ட கரும்பு இனங்களை அறிமுகப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடங்கியுள்ளது.** முக்கியமாக கருப்பட்டி மற்றும் கருப்பஞ்சாறு உற்பத்திக்காக, கிளிநொச்சியில் கரும்பு பயிரிடுவதனை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வவுனியாவிலும் வெலியோவிலும் புதிய சீனித் தொழிற்சாலைகளை நிறுவுவதற்காக சீனி ஆராய்ச்சி நிறுவகம் புதிய முதலீட்டாளர்களுக்கு அதன் தொழில்நுட்பத் தகவல்களையும் உதவிகளையும் வழங்கி வருகின்றது.

**கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தேசிய விலங்குத் தொகையினையும் உற்பத்தித்திறனையும் மேம்படுத்துவதற்காக 2020இல் பல அபிவிருத்தி**

**நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.** விலங்கு வளர்ப்பு (பாற்பண்ணை) இனப்பெருக்க செயற்றிட்டத்தின் கீழ் உள்நாட்டு பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு தற்போதுள்ள பசுக்களின் தொகையினைத் தரமுயர்த்துவதற்காக செயற்கை முறையிலான கருத்தரிப்பு பணிகளை நடைமுறைப்படுத்தல், செயற்கை முறையிலான கருத்தரிப்பு மையங்களை வலுப்படுத்தல் மற்றும் பேணுதல், இயற்கையான இனப்பெருக்கத்திற்காக எருதுக்கன்றுகளின் கருவளத்தினை பரீட்சித்தல் மற்றும் மேய்ச்சல் தரைகளை அபிவிருத்தி செய்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய, 2020இல் பிரதேச விலங்கு மருத்துவ அலுவலகங்களினூடாக பசுக்களுக்கும் எருமைகளுக்கும் 202,516 செயற்கை முறையிலான கருத்தரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. கள விலங்கு மருத்துவப் பணிகள் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தினூடாக விலங்கு வளர்ப்புத் துறையின் அபிவிருத்திக்காக நிறுவன ரீதியான ஆதரவு தொடர்ந்தும் வழங்கப்பட்டது. மேலும், 2020இல் பரவுகின்ற மற்றும் தொற்றுநோய்க் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டங்களின் கீழ் 410,459 விலங்குகளுக்கு பாதம் மற்றும் வாய் நோய்களுக்கான தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டதுடன் 178,243 விலங்குகளுக்கு கருங்காநோய்க்கான தடுப்பு மருந்துகளும் 279,407 விலங்குகளுக்கு தொண்டையடைப்பான் நோய்க்கான தடுப்பு மருந்துகளும் வழங்கப்பட்டன.

**மீன்பிடித் துறைக்கான அரசாங்கத்தின் கொள்கை வழிமுறைகள் தோற்றம் பெற்றுவருகின்ற சவால்களின் பின்னணியில் மீன் உற்பத்தியினை அதிகரிப்பதற்கான அவசியத்தினை வலியுறுத்துகின்றன.** தேசிய நீரியல் அபிவிருத்தி அதிகாரசபை நீர்நிலைகளின் முறையான முகாமைத்துவம் மற்றும் இருப்பு மேம்பாட்டினூடாக நன்னீர் மீன்படி உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டது. உயர்தர மீன்குஞ்சுகளின் இருப்புக்களை உற்பத்தி செய்தல், மீன் முட்டைகளின் தரத்தினை அதிகரித்தல் மற்றும் சுதேச இனங்களைக் கொண்ட புதிய இனவகைகளை அபிவிருத்தி செய்தல் என்பனவற்றை இலக்காகக் கொண்ட தம்புள்ளை நன்னீர் மீன் இன அபிவிருத்தி மையமொன்றின் கட்டுமான வேலைகள் 2020இல் நிறைவடைந்தன. ஆய்விற்குரிய காலப்பகுதியில், தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகாரசபையால் 77.7 மில்லியன் நன்னீர் இறால் குடம்பிகளும் 92.9 மில்லியன் மீன் குஞ்சுகளும் நீர்நிலைகளில் விடப்பட்டது. மேலும், பொலனறுவையில் அலங்கார மீன் பெருக்க நிலையத்தினை தொடங்கியமை, அம்பாந்தோட்டையில் இரண்டு நண்டு நகரங்களை நிறுவியமை, திருகோணமலையில் பாரியளவிலான கடல் மீன் வளர்ப்பு தொடங்கப்பட்டமை மற்றும் கிளிநொச்சியிலும் யாழ்ப்பாணத்திலும் கடல் அட்டை ஏற்றுமதிக் கிராமங்கள் நிறுவப்பட்டமை என்பனவற்றை உள்ளடக்கிய ஏற்றுமதி சார்ந்த மீன்பிடித்துறையினை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும், புத்தளத்தில் பால் மீன் முட்டையிடும் இடத்திற்கான கட்டுமான வேலைகள் தொடங்கின. தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகாரசபை நீர்மீன் சுற்றோட்ட முறைமை மற்றும் மீன்வளர்ப்புப் பிரதேசங்களின் உயிரின பாதுகாப்பினை அதிகரித்தல் என்பனவற்றை அறிமுகப்படுத்தியதனூடாக வடமேல் மாகாணத்தில் கூனி இறால் வளர்ப்பு நடவடிக்கையினைத் தீவிரப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும், போதுமானதற்ற முதலீடு, நவீன மீன்பிடி தொழில்நுட்பங்கள் குறைந்தளவில் பின்பற்றப்பட்டமை, மீன்வளர்ப்புச் செயற்றிட்டங்களுக்காக குத்தகை அடிப்படையில் நிலம் மற்றும் கடல் பிரதேசங்களைப் பெறுவதில் காணப்படும் தாமதம் மற்றும் ஏற்றுமதியில் பெறுமதிகூட்டல் குறைவாக இருக்கின்றமை என்பன மீன்பிடித்துறையின் விரிவாக்கத்திற்கு தொடர்ந்தும் தடையாக காணப்படுகின்றன.

## கைத்தொழில்

**கட்டடவாக்கம், தயாரிப்பு மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் மீது கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மோசமான தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், கைத்தொழில் நடவடிக்கைகள் 2019இல் பதிவுசெய்யப்பட்ட 2.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் பெறுமதிகூட்டல் நியதிகளில் 2020இல் 6.9 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன.** முக்கியமான ஏற்றுமதிச் சந்தைகளுக்கு நோய்தொற்றினால் ஏற்பட்ட மோசமான தாக்கம் இலங்கைக்கும் கசிந்ததுடன் கேள்வியைக் குறிப்பாக, புடவை மற்றும் அணியும் ஆடைகள் தொடர்பான நடவடிக்கைகள் மீதான கேள்வியை நலிவுறச் செய்தது. அதேநேரம், மின்வலு, வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் நடவடிக்கைகள் மற்றும் வடிகால்கள், கழிவு முகாமைத்துவம் மற்றும் அகற்றல் நடவடிக்கைகள் இவ்வாண்டுப்பகுதியில் சிறிதளவில் சுருக்கமடைந்தன. எனினும், நீர்ச் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள் 2020இல் கைத்தொழில் நடவடிக்கைகளுக்குச் சாதகமாகப் பங்களித்தன. கைத்தொழில் நடவடிக்கைகளில் காணப்பட்ட சுருக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் கைத்தொழில் துறையுடன் தொடர்பான வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின் கேள்வி மற்றும் உற்பத்தி துணைச் சுட்டெண்கள் இவ்வாண்டுப்பகுதியில், சராசரியாக வீழ்ச்சியடைந்துள்ளன.

## தயாரிப்பு

**நோய்த்தொற்றுடன் தொடர்பான இடையூறுகளின் காரணமாக, தயாரிப்பு நடவடிக்கைகளிலிருந்தான பெறுமதிகூட்டல் 2019இல் பதிவுசெய்யப்பட்ட 1.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 3.9 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் பதிவுசெய்தது.** 2020 மாச்சு நடுப்பகுதி முதல் இலங்கையில் பரவிய கொவிட்-19 நோய்த்தொற்றும் அதனைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட கடுமையான கட்டுப்பாடுகள் தயாரிப்பு நடவடிக்கைகளை, குறிப்பாக, ஆண்டின் முதலரைப்பகுதியில் மோசமாகப் பாதித்தன. அவற்றைத் தவிர இது உலகளாவிய நோய்த்தொற்றாக இருப்பதனால், முக்கிய

வரைபடம் 2.5
கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு (அ)




(அ) கொ.மு.சுட்டெண்ணானது கடந்த மாதத்துடன் ஒப்பிட்டு மாதாந்த அபிவிருத்திகளை வெளிக்காட்டும் மனோபாவ அளவீட்டு அடிப்படையில் அமைந்ததாகும். இது ஓர் வியாபித்தல் சுட்டெண் (diffusion index) ஆவதுடன் 0 மற்றும் 100 இற்கு இடையிலான பெறுமதியை கொண்டிருப்பதோடு நடுநிலையான 50இற்கு மேலான சுட்டெண் பெறுமதி பொருளாதார நடவடிக்கைகளில் ஓர் விரிவாக்கத்தைக் குறிக்கும் அதேவேளையில் 50இற்க கீழான சுட்டெண் பெறுமதியானது சுருக்கத்தினையும் குறிக்கின்றது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வர்த்தகப்படுத்தல் பொருளாதாரங்களுக்கான கொவிட்-19 நோய்த்தொற்றின் மோசமான தாக்கம் இலங்கையின் பொருளாதாரத்திற்கும் கசிந்திருக்கிறது. நலிவடைந்த வெளிநாட்டுக் கேள்வி அதேபோன்று உள்ளீடுகளின் உலகளாவிய வழங்கல் சங்கிலிக்கு ஏற்பட்ட இடையூறுகள் என்பன முழுதளவில் இயலளவுப் பயன்பாட்டினையும் தயாரிப்பு நிறுவனங்களின் உற்பத்தி செய்யப்பட்ட அளவினையும் மேலும் மோசமடையச் செய்தன. இதற்கமைய, குறிப்பிடத்தக்க சுருக்கங்கள் தயாரிப்பின் இரண்டாவது மிகப்பெரிய துணை நடவடிக்கையான புடவைகள் அணியும் ஆடைகள் மற்றும் தோலுடன் தொடர்பான உற்பத்தியாக்கத்தில், குறிப்பாக, இரண்டாம் காலாண்டுப்பகுதியில் அவதானிக்கப்பட்டன. மேலும், ஏனைய தயாரிப்புத் துணை நடவடிக்கைகள் பெரும்பாலானவற்றில் பதிவுசெய்யப்பட்ட சுருக்கங்களும் 2020இல் தயாரிப்பு நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த சுருக்கத்திற்குப் பங்களித்தன. எனினும், தயாரிப்பின் மிகப்பெரும் துணை நடவடிக்கையாக விளங்கும், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலைத் தயாரிப்புக்கள் இவ்வாண்டுப்பகுதியில் வளர்ச்சியைப் பதிவுசெய்தன. தயாரிப்புடன் தொடர்பான குறிகாட்டிகளைப் பரிசீலனையில் கொள்கையில், தொகைமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 2020இல் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. மேலும், மாதாந்த அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியினால் தொகுக்கப்பட்ட தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணானது தயாரிப்புத் துறை நடவடிக்கைகள் மீதான கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் முதலாவது அலையின் மோசமான தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற வகையில் 2020 ஓகத்தில் வரலாற்றிலேயே மிகக் குறைந்த சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது. எனினும், இது பின்னர் மூன்றாம் காலாண்டுப் பகுதியிலிருந்து மீட்சியடைவதற்கான அறிகுறிகளை எடுத்துக்காட்டியது.

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்

**கொவிட்-19 பரவலின் காரணமாக, முக்கிய தயாரிப்புத் துறைகள் முழுவதும் அவ்வப்போது மூடப்பட்டமையானது,** கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் ஒட்டுமொத்த வருடாந்த செயலாற்றத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு வழிவகுத்த போதும் ஆண்டின் பின்னரைப் பகுதியில் குறிப்பிடத்தக்க மீட்சி அவதானிக்கப்பட்டது. கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் பிரதிபலிக்கப்பட்டவாறு, தயாரிப்புத் துறை நடவடிக்கைகள் 2019இல் பதிவுசெய்யப்பட்ட 1.3 சதவீதம் கொண்ட விரிவுடன் ஒப்பிடுகையில், 2020இல் 10.2 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன. குறிப்பிட்ட முக்கிய துணைத் துறைகளிடையேயான தயாரிப்பு நடவடிக்கைகள் 2020இல் மோசமடைந்த அதேவேளையில், உணவுத் தயாரிப்புக்கள், அடிப்படை மருந்தாக்கல் உற்பத்திகள் மற்றும் மருந்தாக்கல் தயாரிப்புக்கள் மற்றும் அச்சிடல் மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடக துணைத் துறைகளின் மீள்தயாரிப்பு என்பனவற்றின் நடவடிக்கையில் விரிவொன்றினைப் பதிவு செய்தது. உணவு உற்பத்திகள் மற்றும் அடிப்படை மருந்தாக்கல் உற்பத்தி வகைகளில் விரிவாக்கம் பதிவுசெய்யப்பட்டமைக்கு கொவிட்-19 நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் இத்துறைகளின் இன்றியமையாத தேவைப்பாட்டுத் தன்மையே தூண்டுதலாக அமைந்தது. கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட தேசிய ரீதியான முடக்கல் நிலை மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக 2020இன் இரண்டாம் காலாண்டுப்பகுதியில் தயாரிப்பு நடவடிக்கைகள் தடங்கல்களைக் கொண்டிருந்த போதும் பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையாலும் பொருளாதாரம் படிப்படியாக வழமைக்குத் திரும்பியமையாலும் தயாரிப்பு நடவடிக்கைகள் 2020 யூலை அளவில் உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னருள்ள நிலைக்குத் திரும்பின. குறிப்பாக, மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுப்பகுதியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சிக்கு, தொழிற்சாலைகளில் ஏற்பட்ட கொவிட்-19 நோய்த்தொற்று உட்பட பல்வேறு பின்னடைவுகளினால் பாதிக்கப்பட்ட

2

வரைபடம் 2.6
கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்




*மூலம் :* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 2.7
இயலளவுப் பயன்பாடு




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

அணியும் ஆடைகள் துறையே காரணமாக அமைந்தது. இப்பின்னடைவுகளுக்கு மத்தியிலும், 2020 ஒத்தோபர் மற்றும் நவெம்பரில் சுருக்கங்கள் பதிவுசெய்யப்பட்ட போதும், தயாரிப்பு நடவடிக்கைகள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2020 திசெம்பரில் நேர்க்கணிய செயலாற்றத்தினைப் பதிவுசெய்தன.

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று காரணமாக ஏற்பட்ட இடையூறுகள் உணவு தயாரிப்புத் துறை உற்பத்திகளின் அத்தியாவசியத் தன்மை காரணமாக அவற்றின் மீது குறைந்த தாக்கத்தினைக் கொண்டிருந்த போதும், குடிபானத் தயாரிப்பு நடவடிக்கைகள் 2020ஆம் ஆண்டுப்பகுதியில் சுருக்கத்தினைக் கொண்டிருந்தன.** 2020ஆம் ஆண்டுப்பகுதியில், கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் மிகப்பெரும் துணைத் துறையாக விளங்கும் உணவு உற்பத்தி துணைத் துறையின் தயாரிப்பு 3.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு, உணவு உற்பத்திகளின் அத்தியாவசியத் தன்மை மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் நுகர்வோர் இருப்புக்களை அதிகரித்தமையின் காரணமாக ஏற்பட்ட அதிகரித்த கேள்வி என்பன முக்கிய தூண்டுதல்களாக அமைந்தன. துறையின் நேர்க்கணியச் செயலாற்றத்திற்கு பால்மா, கோதுமைமா, யோகட் மற்றும் பிஸ்கட் என்பனவற்றின் அதிகரித்த உற்பத்திகள் தூண்டுதலாக அமைந்தன. மாறாக, குடிபானங்கள் துணைத் துறையின் தயாரிப்பானது பியர், சாராயம் மற்றும் மென்குடிபானங்களின் குறைவடைந்த உற்பத்தியின் காரணமாக இவ்வாண்டுப்பகுதியில் 6.7 சதவீதமான சுருக்கத்தினைப் பதிவுசெய்தது. உணவகங்கள் மற்றும் குடிபானசாலைகள் மூடப்பட்டமை, சுற்றுலா விடுதிகளிலிருந்தான குறைந்த கேள்வி, குறைவடைந்த பொழுதுபோக்கு நடவடிக்கைகள் என்பன குடிபானத் தயாரிப்பினை மோசமாகப் பாதித்தன. எனினும், 2020இன் பின்னரைப்பகுதியில் பொருளாதார நடவடிக்கைகள் மீளெழுச்சியுற்றதுடன் குடிபான தயாரிப்பு நடவடிக்கைகள் 2020இன் முதலரைப்பகுதியில் காணப்பட்ட 23.9 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 11.5 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. ஆண்டின் பின்னரைப்பகுதியில் துறையின் மீட்சயானது 2019இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 1.8 சதவீதம் கொண்ட சிறிய விரிவிற்கெதிராக கணிசமானதாகவே காணப்பட்டது.

**உலகளாவிய வழங்கல் சங்கிலியில் காணப்பட்ட தடங்கல்கள், உள்நாட்டுப் பயணத் தடைகளின் காரணமாக தொழிலாளர் கிடைப்பனவு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை என்பன மூலப்பொருட்களின் உள்நாட்டுக் கிடைப்பனவு போதாமல் இருந்தமையுடன் சேர்ந்து 2020இல் அணியும் ஆடைகள் மற்றும் புடவைக் கைத்தொழிலத் தயாரிப்பினை மோசமாகப் பாதித்தன.** கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் பிரதிபலிக்கப்பட்டவாறு, அணியும் ஆடைகள் துறையின் தயாரிப்பு முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 1.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 30.8 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் பதிவுசெய்தமைக்கு, கொவிட்-19 தொடர்பான கட்டுப்பாட்டு வழிமுறைகள் மற்றும் ஏற்றுமதி நாடுகளிலிருந்தான கட்டளைகள் வீழ்ச்சியடைந்தமை என்பன பெருமளவிற்குக் காரணங்களாக அமைந்தன. ஏப்பிறல் மாதம் முழுவதும் விதிக்கப்பட்ட நாடளாவிய முடக்க வழிமுறைகள் இம்மாத காலத்தில் இத்துறை கடுமையாக சுருக்கமடைவதற்கு வழிவகுத்தது. எனினும், மே மாதத்தின் பிற்பகுதியிலிருந்து தொழிற்சாலைகள் படிப்படியாக வழமையான தொழிற்பாடுகளுக்குத் திரும்பியமையினால், இத்துறைக்குள் பல குறுங்கால மூடல்களைத் தோற்றுவித்த இரண்டாவது அலையின் விளைவாக அவ்வப்போது ஏற்படும் வீழ்ச்சியுடன் இத்துறையின் தயாரிப்பு செயலாற்றத்தில் வலுவான மீட்சியொன்று அவதானிக்கப்பட்டது. அணியும் ஆடைகள் துறையில் காணப்பட்ட வீழ்ச்சி, பல முக்கிய ஆடை உற்பத்தியாளர்கள் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய சந்தைகளை இலக்காகக் கொண்டு தனியார் பாதுகாப்புச் சாதனங்களை உற்பத்தி செய்வதற்கு மாறிக் கொண்டமையின் மூலம் குறிப்பிட்டளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டது.

வரைபடம் 2.8
2020இல் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் முக்கிய பிரிவுகளின் ஆண்டுக்காண்டு மாற்றத்திற்கான பங்களிப்பு




*மூலம் :* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 2.8
கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்
2015=100

| பிரிவு (அ) | 2019 | 2020 (ஆ) | மாற்றம் (%) 2018/19 | மாற்றம் (%) 2019/20 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. உணவு உற்பத்திகள் (35.2%) | 105.6 | 109.1 | -0.4 | 3.3 |
| 2. குடிபானங்கள் (3.8%) | 103.4 | 96.5 | 3.6 | -6.7 |
| 3. புகையிலை உற்பத்திகள் (1.7%) | 81.0 | 72.1 | -12.6 | -11.0 |
| 4. புடவை (3.3%) | 108.3 | 102.2 | -1.7 | -5.6 |
| 5. அணியும் ஆடைகள் (19.8%) | 117.2 | 81.2 | 1.9 | -30.8 |
| 6. தோல் மற்றும் தொடர்பான உற்பத்திகள் (0.3%) | 116.7 | 77.6 | -0.2 | -33.5 |
| 7. தளபாடம் தவிர்ந்த மரம் மற்றும் மரசார் உற்பத்திகள், அடைப்பான்கள் தயாரித்தல், வைக்கோல் பொருட்கள் மற்றும் பின்னல் பொருட்கள் தயாரிப்பு (0.2%) | 101.9 | 71.8 | 3.3 | -29.5 |
| 8. தாள் மற்றும் தாள் உற்பத்திகள் (1.7%) | 96.7 | 81.8 | 11.4 | -15.5 |
| 9. அச்சுப் பதிப்பு மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடகத்தின் மீள் தயாரிப்பு (1.4%) | 102.9 | 112.6 | -3.4 | 9.4 |
| 10. சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் (7.4%) | 106.8 | 97.2 | 9.6 | -9.0 |
| 11. இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள் (4.1%) | 102.2 | 94.2 | 10.3 | -7.8 |
| 12. மருந்தாக்கற் பொருட்கள், மருத்துவ இரசாயனவியல் மற்றும் தாவரவியல் உற்பத்திகள் (0.1%) | 98.2 | 104.7 | -2.0 | 6.6 |
| 13. இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் (5.7%) | 106.4 | 75.8 | -5.0 | -28.7 |
| 14. ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் (7.8%) | 117.8 | 111.7 | 8.2 | -5.2 |
| 15. அடிப்படை உலோகங்கள் (2.4%) | 124.2 | 110.7 | -3.2 | -10.9 |
| 16. பொறி மற்றும் இயந்திரம் தவிர்ந்த உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (1.3%) | 110.7 | 100.9 | -11.7 | -8.9 |
| 17. இலத்திரனியல் சாதனங்கள் (2.0%) | 86.9 | 67.5 | 6.3 | -22.3 |
| 18. பொறி மற்றும் இயந்திரங்களின் உற்பத்தி (0.7%) | 99.3 | 102.9 | -2.6 | 3.6 |
| 19. தளபாட உற்பத்தி (0.8%) | 90.3 | 77.0 | -0.4 | -14.8 |
| 20. ஏனைய உற்பத்திகள் (0.3%) | 66.0 | 65.7 | -30.7 | -0.5 |
| **கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்** | **108.1** | **97.1** | **1.3** | **-10.2** |

(அ) ஒவ்வொரு பிரிவுகளுக்கும் பொருந்தக்கூடிய நிறையிடல்கள் அடைப்புக்குறிக்குள் உள்ளன
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

இவ்வாண்டுப்பகுதியில், புடவைத் தயாரிப்புத் துறை ஒட்டுமொத்தச் சுருக்கமொன்றினைப் பதிவுசெய்த போதும், துறையானது 2020இன் பின்னரைப் பகுதியில் 11.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து, பொருளாதார நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்புவதற்கும் சுகாதாரத் துறையிலிருந்து எழும் புதிய கேள்விகளை, குறிப்பாக தனியாள் பாதுகாப்புச் சாதன உற்பத்திகளில், பூர்த்தி செய்வதற்கு உற்பத்தி தொடரை பன்முகப்படுத்துவதற்குமான சமிக்ஞைகளைக் காட்டியது. முடிவடைந்த துணிகள், கயிற்றுத் தும்பு மற்றும் துணிகளின் அச்சிடல் என்பன 2020இன் பின்னரைப்பகுதியின் வளர்ச்சி உத்வேகத்திற்குப் பெருமளவிற்குப் பங்களித்தன.

**ஏனைய உலோகமல்லா கனிப்பொருட்களின் தயாரிப்பு, அடிப்படை உலோகங்களின் தயாரிப்பு மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் தயாரிப்பு துணைத் துறைகள் 2020இல் ஒட்டுமொத்த சுருக்கத்தினைப் பதிவுசெய்த போதும் ஆண்டின் பின்னரைப்பகுதியில் மீட்சிக்கான சமிக்ஞைகள் அவதானிக்கப்பட்டன.** தரை ஓடுகள், புறோசலின் மேசைப்பொருட்கள் மற்றும் கண்ணாடிப் போத்தல்களின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி ஏனைய உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் தயாரிப்புத் துணைத் துறையின் மெதுவானபோக்கிற்குப் பெருமளவிற்குப் பங்களித்தன. உள்நாட்டு கட்டடவாக்கத் துறை மற்றும் உலகளாவிய சந்தைகளிலிருந்தான குறைவடைந்த கேள்வி இறக்குமதிக் கட்டுப்பாடுகளுடன் சேர்ந்து ஏனைய உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்தி துணைத் துறையின் குறைவடைந்த உற்பத்திக்குப் பங்களித்தன. குறைவடைந்த கேள்வி காரணமாக ஈயம் மற்றும் அலுமினிய சட்டங்களின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி, அடிப்படை உலோகங்களின் தயாரிப்பு மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் தயாரிப்புத் துணைத் துறைகளின் ஒட்டுமொத்தச் சுருக்கத்திற்குப் பங்களித்தன.

**கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் தயாரிப்பு துணைத் துறை 2020இன் முதலரைப்பகுதியில் 20.3 சதவீத சுருக்கத்தினைக் காட்டியதெனினும் ஆண்டின் பின்னரைப் பகுதியில் 1.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன.** ஆரம்பத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி உள்நாட்டுச் சந்தையில் பெற்றோல், தன்னியக்க டீசல், உலை எண்ணெய் மற்றும் பிட்டுமன் ஆகிய சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளுக்கான குறைவடைந்த கேள்வியும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தூய்மி 2020 பெப்புருவரி 15 இலிருந்து 45 நாட்களுக்குப் பகுதியளவில் மூடப்பட்டிருந்தமையும் காரணங்களாக அமைந்தன.

**புகையிலை உற்பத்தித் தயாரிப்புத் துணைத் துறை 2020இல் தொடர்ந்தும் குறைவடைந்த நிலையிலேயே காணப்பட்டது.** இதற்கமைய, புகையிலை உற்பத்திகள் தயாரிப்புத் துணைத் துறை 2018 மற்றும் 2019இல் அவதானிக்கப்பட்ட சுருக்கப் போக்கினைப் பின்பற்றி 2020இல் 11.0 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் பதிவுசெய்தது. புகையிலை உற்பத்திகள் மீதான உயர்ந்த மட்ட வரிகள் மற்றும் கொவிட்-19 நோய்த்தொற்றிலிருந்து தோன்றிய குறைக்கப்பட்ட நுகர்வோர் கேள்வி என்பன 2020இல் புகையிலை உற்பத்திகள் தயாரிப்புக்களில் குறைப்பு ஏற்பட வழிவகுத்தது.

**இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகளின் தயரிப்பு, தோல் மற்றும் தொடர்பான உற்பத்திகள், மற்றும் இரசாயன மற்றும் இரசாயன உற்பத்திகள் துணைத் துறைகள் 2020இல் சுருக்கமடைந்தன.** இறப்பர் விரிப்புக்கள், பிளாத்திக்கு போத்தல்கள், டயர்கள், இறப்பர் போத்தல்கள் மற்றும் பன்னாட்டுச் சந்தைகளுக்கு வழங்குவதற்கான தயாரிப்புக்கள் என்பனவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் துணைத் துறையின் மெதுவான போக்கிற்குக் காரணமாக விளங்கியது. தோல் மற்றும் தொடர்பான உற்பத்திகளின் துணைத் துறை 2020இல் 33.5 சதவீதமான சுருக்கத்தினைப் பதிவுசெய்தமைக்கு தோலின் முடிந்த உற்பத்தி தோல் பைகள், பாடசாலை

2

சப்பாத்துக்கள், தோலிலான மேல் அங்கிகள் என்பனவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணங்களாக விளங்கின. இரசாயனங்கள் மற்றும் இரசாயன உற்பத்திகளின் தயாரிப்புத் துணைத் துறையானது தீந்தைகள், வளமாக்கி மற்றும் பொலித்தீன் பைகள் என்பனவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக 2020இன் முதலரைப்பகுதியில் 23.2 சதவீதத்தினால் சுருக்கத்தைக் காட்டிய போதும் நாடளாவிய முடக்கல் வழிமுறைகள் தளர்த்தப்பட்டதன் காரணமாக பொருளாதார நடவடிக்கைகள் மீளெழுச்சியுற்றதன் விளைவாக 2020இன் பின்னரைப்பகுதியில் 6.7 சதவீதம் கொண்ட விரிவாக்கத்தினைப் பதிவுசெய்தன.

**அடிப்படை மருந்தாக்கல் உற்பத்திகளின் தயாரிப்பு மற்றும் மருந்தாக்கல் தயாரிப்புத் துணைத் துறை 2020இல் விரிவாக்கத்தினைக் காட்டியது.** கொவிட்-19 தொற்றினைத் தொடர்ந்து மருந்துகள் மற்றும் ஏனைய சுகாதாரத்துடன் தொடர்பான உற்பத்திகளுக்கான அதிகரித்த கேள்விக்குப் பதிலிறுத்தும் விதத்தில் வில்லைகளினதும் ஆயள்வேத களிம்புகளினதும் உற்பத்திகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. இத் துணைத் துறையானது 2024ஆம் ஆண்டளவில் உள்நாட்டு மருந்துத் தேவையில் அரைப்பங்கினைப் உள்நாட்டு உற்பத்தி மூலம் பூர்த்தி செய்தல் என்ற அரசாங்கத்தின் இலக்குடன் தொடர்ந்தும் வளர்ச்சி உத்வேகத்துடன் தொழிற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டு மருத்துவத் துறை, உள்நாட்டு மருந்தாக்கல் தயாரிப்பு மற்றும் அம்பாந்தோட்டை, அநுராதபுரம் மற்றும் கொறணையில் புதிய மருந்தாக்கல் தயாரிப்பு வலயங்களை நிறுவுதல் போன்றவற்றிற்கு ஆதரவளிக்கும் அரசின் கடப்பாடுகள் எதிர்காலத்தில் இக் கைத்தொழிலுக்கு ஆதரவளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தாள் மற்றும் தாள் உற்பத்திகள், மற்றும் மர உற்பத்திகள் (தளபாடம் தவிர), மின்னியல் சாதனங்கள், பொறி மற்றும் கருவிகள் மற்றும் தளபாடங்கள் என்பவற்றின் தயாரிப்புடன் தொடர்பான துணைத் துறைகளின் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 2020இல் குறைந்த செயலாற்றத்தினைப் பதிவுசெய்தன.** நெளிக்கப்பட்ட தாள்கள், அட்டைப் பெட்டிகள், தாள் பைகள் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் என்பனவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக தாள் மற்றும் தாள் உற்பத்திகள் தயாரிப்புத் துணைத் துறை 2020இல் நலிவடைந்தது. அதிகரித்த நுகர்வோர் தளமும் நுகர்வோர் நீண்டகால பாவனைப்பொருட்கள் பிரிவில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட இலத்திரனியல் பொருட்களின் நுழைவும் காணப்பட்ட போதும், இவ்வாண்டுப்பகுதியில் கொவிட்-19 தொற்று இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் தளபாடங்களின் வளர்ச்சி உத்வேகத்தினை தடங்கலுறச் செய்துவிட்டன.

## கைத்தொழில் கொள்கைகளும் நிறுவன ரீதியான ஆதரவும்

**2020இல் கொவிட்-19 பரவலின் காரணமாக கைத்தொழில் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்கின்ற அரச முகவர்களின் நடவடிக்கைகள் மெதுவான வேகத்தில் காணப்பட்டன.** திறன் விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சும் சுற்றாடல் மற்றும் வனஜீவராசிகள் மூலவளங்கள் அமைச்சும் கனிப்பொருள் மூலவளங்கள் தொடர்பான தேசிய கொள்கையினை இறுதிப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. கொள்கையானது கனிப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களின் பெறுமதிகூட்டலுக்கான அவற்றின் செயற்பரப்பினை விரிவுபடுத்துவதற்கான சூழலை இயலுமைப்படுத்துகின்ற தன்மையை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கிறது. வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு அமைச்சின் ஒத்துழைப்புடன் திறன் விருத்தி, தொழிற்கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தைகள் மாற்றமடைந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வாய்ப்புக்களுக்காக தொழிற்கல்வியை விரிவாக்கிக் கொள்வதற்கான வழிமுறைகளை மேற்கொண்டது. மேலும், அமைச்சு *தேசிய தொழில்நுட்பவியல் மற்றும் புத்தாக்கப் பொருட்காட்சி - இனோடெக்* 2020இனை 2020 மாச்சில் கோமகமவில் வெற்றிகரமாக நடாத்தியது. இப் பொருட்காட்சியானது சமூகத்தின் அனைத்துப் பிரிவினரிடையேயும் விஞ்ஞான அறிவினை மேம்படுத்துவதை எதிர்பார்த்து நடாத்தப்பட்டது. இராஜாங்க அமைச்சு அரச துறை தொழில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ள குறைந்த வருமான வீட்டுத் துறையினரிலிருந்தான 100,000 தேர்ச்சியற்ற தனிப்பட்டவர்களுக்கு தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையூடாக பல்நோக்கு அபிவிருத்தி செயலகக் குழுவின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தது. அதேநேரம் கைத்தொழில்கள் அமைச்சு, இத்துறையிலுள்ள தொடர்பான அரச முகவர்கள், முன்னணி கைத்தொழில் அதிபர்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்களின் உதவியுடன் இலங்கையில் ஊர்திகள் தயாரிப்பு, பொருத்தல் மற்றும் உதிரிப்பாகங்கள் தயாரிப்புக் கைத்தொழில்களுக்காக நியம தொழிற்பாட்டு நடைமுறை வழிகாட்டல்களை உருவாக்கியிருக்கிறது. 2021இன் தொடக்கத்தில் அமைச்சரவை குறிப்பிட்ட வழிகாட்டுதலில் தெரிவிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஒப்புதலை வழங்கியுள்ளது.

**உற்பத்திப் பொருளாதாரத்தினை உருவாக்கும் நோக்குடன் பல அரச அதிகாரசபைகளும் உள்நாட்டுக் கைத்தொழில் துறையினை மேம்படுத்துவதற்கும் மற்றும் வலுப்படுத்துவதற்குமான வழிமுறைகளை மேற்கொண்டன.** தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை 2020இல் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு

தொழில்முயற்சியாண்மையாளர்களுக்கு சந்தை வசதிகளை வழங்குவதற்காக மின்-வணிக வர்த்தக நுழைவாயிலொன்றினை நிறுவியிருக்கிறது. இச்செயற்றிட்டமானது பரந்து மற்றும் சிதறி தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் தொழில்முயற்சியாண்மையாளர்கள் அதிகளவிற்குச் சந்தைகளை அணுகுவதற்கு வசதியளிக்குமெனவும் இணையவழித் தளத்துடன் அவர்களது நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதனூடாக அவர்களது தொழில்முயற்சிகளை நவீனமயப்படுத்தவும் எதிர்பார்க்கிறது. தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையும் நாடளாவிய ரீதியில் பல குறுங்கால இயலாற்றல் அபிவிருத்தி பயிற்சி, நிதியியல் உதவிகள், சந்தை வசதிப்படுத்தல் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்திப் பணிகள் போன்றவற்றை மேற்கொண்டது. 2020இல் தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை 4,855 தொழில்முயற்சியாண்மையாளர்களுக்குப் பயிற்சிகளை வழங்கியதுடன் தெரிவுசெய்யப்பட்ட கைத்தொழில் கொத்தணியாளர்களுக்காக கொத்தணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தியது. தேசிய உற்பத்தியாக்கச் செயலகம் சிறியளவு தொழில்முயற்சியாண்மையாளர்களுக்காக உற்பத்தியாக்க மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்தும் நடத்தியது. மேலும், தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை ஒவ்வொரு மாகாணத்திலும் தொழில்நுட்பவியல் பரிமாற்றல் மையங்களையும் நிறுவுவதற்கான வழிமுறைகளை மேற்கொண்ட அதேவேளையில், உள்நாட்டு மூலத்தினையும் உற்பத்தியின் நம்பகத்தன்மையையும் உறுதிப்படுத்தும் விதத்தில் "இலங்கையில் தயாரிக்கப்பட்டது" என்ற சின்னம் ஆரம்பிக்கப்பட்டது. அதேவேளை, கைத்தொழில் அபிவிருத்தி சபை, கைத்தொழில்கள் அமைச்சு மற்றும் அரச வங்கி ஒன்றினதும் ஒத்துழைப்புடன் ஏற்றுமதிகள், இறக்குமதிப் பதிலீடு, உள்நாட்டு பெறுமதிகூட்டல் மற்றும் தொழில் வாய்ப்பு உருவாக்கம் என்பன தொடர்பில் பெருமளவு வாய்ப்புக்களைக் கொண்ட உள்நாட்டு கைத்தொழில்களுக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் அரச தேசிய கொள்கைக் கட்டமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் "இலங்கையில் தயாரிக்கப்பட்டது" என்ற கடன் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இக்கடன் நிகழ்ச்சித்திட்டம் உள்நாட்டு ஏற்றுமதி சார்ந்த மற்றும் இறக்குமதிக்குப் பதிலீடான கைத்தொழில்களின் அபிவிருத்தியை உத்வேகப்படுத்துமென எதிர்பார்க்கப்பட்ட அதேவேளையில், உள்ளூர் உற்பத்திகளின் தரத்தினையும் மேம்படுத்தும். கைத்தொழில் அபிவிருத்திச் சபை தேவையான தொழில்நுட்பவியல் மற்றும் முகாமைத்துவ ஆதரவுகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கின்ற வேளையில் அரச வங்கி, அவற்றின் வியாபாரங்களினது நீண்டகாலம் நிலைபெறக்கூடிய தன்மையை உறுதிப்படுத்துவதற்கு சிறப்பியல்பு வாய்ந்த நிதியியல் ஆதரவினை வழங்குகிறது. 2020 இறுதியிலுள்ளவாறு, ஏறத்தாழ 600 நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் இச்சிறப்புக் கடன் திட்டத்திற்காகப் பதிவுசெய்திருக்கின்றன. கைத்தொழில் அபிவிருத்திச் சபை, கைத்தொழில் அமைச்சின் உதவியுடன் சிறிய மற்றும் நடுத்தரளவு உள்நாட்டு உணவு தயாரிப்பாளர்களுக்கு ஊக்கமளிக்கும் விதத்தில் புதிய உற்பத்திகளைப் பரீட்சிப்பதனையும் அபிவிருத்தி செய்வதனையும் கவனத்தில் கொண்டு கட்டுப்பெத்தையில் அதிகாரம்பெற்ற உணவு ஆய்வுகூடமொன்றினை நிறுவியுள்ளது. இச்செயற்றிட்டத்தினூடாக ஏறத்தாழ 112 சிறிய மற்றும் நடுத்தரளவு கைத்தொழிலாளர்களுக்கு வசதியளிக்கப்பட்ட வேளையில் 246 உணவு உற்பத்தி மாதிரிகளுக்கு ஆய்வுகூட அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. அதேவேளை, இவ்வாண்டுப்பகுதியில், கொவிட்-19 இலிருந்து தோன்றிய புதிய தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக மூலிகைகளை அடிப்படையாகக் கொண்ட இருபது உற்பத்திகளையும் உணவினை அடிப்படையாகக் கொண்ட பத்து உற்பத்திகளையும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் அபிவிருத்தி செய்தது. கைத்தூய்மிப்படுத்தி தயாரிப்புடன் தொடர்புடைய அபிவிருத்தியடைந்த தொழில்நுட்பங்களை கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனம் சிறியளவு வியாபாரக் கைத்தொழில்களுக்கு அறிமுகப்படுத்தியது. இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவகம் தற்பொழுது வரை பதினைந்து ஆக்கவுரிமைகளை கோப்பிட்டிருப்பதுடன் 2020/21 இற்கான ஏழு காப்புரிமைகள் ஆயத்த நிலையிலுள்ளன. இலங்கை நனோ தொழில்நுட்பவியல் நிறுவகம் வருமான உருவாக்கச் செயற்றிட்டங்களுக்கு முன்னுரிமையளிக்கின்ற விதத்தில் 2020இல் 100 இற்கு மேற்பட்ட ஆராய்ச்சி செயற்றிட்டங்களை மதிப்பீடு செய்துள்ளது.

**கொவிட்-19 தொற்றின் காரணமாக ஏற்பட்ட இடையூறுகளுக்கு மத்தியிலும் உள்நாட்டுக் கைத்தொழில் துறையினை மேம்படுத்துவதற்கு கைத்தொழில் சம்மேளனத்தினாலும் ஏனைய தொடர்பான நிறுவனங்களினாலும் பல முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.** இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம் 2020இல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலம் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியகளுக்கு அறிவூட்டுவதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்குமான அதன் முயற்சிகளை தொடர்ந்தது முன்னெடுத்தது. இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம் இலங்கை ஏற்றுமதியாளர்களையும் உலகளாவிய சந்தைகளையும் இணைக்கின்ற டிஜிட்டல் பீ-2-பீ (வியாபாரத்திலிருந்து வியாபாரத்திற்கு) தளமொன்றினை அறிமுகப்படுத்துவதற்குரிய முக்கிய நடவடிக்கைகளை எடுத்தது. இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம் மாவட்ட மற்றும் மாகாண மட்டங்கள் இரண்டிலும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான வேலைகளைத் தொடர்ந்ததுடன் நிதி, சந்தை மற்றும் தொழில்நுட்பத்தினைப் பெற்றுக்கொள்வது உட்பட்ட பல முக்கியமான தொழில்முயற்சியாண்மையுடன் தொடர்பான பிரச்சனைகளையும் வலியுறுத்தியது. இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம் பல்வேறுபட்ட வியாபாரத்

2

துறைகளிடையேயான ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்காக கைத்தொழில் சங்கங்கள் மற்றும் மாகாண சம்மேளனங்களுடன் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்திருக்கின்றது. அதேவேளை, இலங்கை வர்த்தக சம்மேளனம், வர்த்தகம் மற்றும் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக வர்த்தகத்துடன் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், வலைத்தள கருத்தரங்குகள் மற்றும் வர்த்தக அரங்கம் போன்ற வசதிகளைத் தொடர்ந்தும் வழங்கிய வேளையில் பொருளாதார மீட்சியை விரைவுபடுத்துவது தொடர்பில் அரசாங்கத்திற்கு பல்வேறு முன்மொழிவுகளையும் சமர்ப்பித்தது. இலங்கை வர்த்தக சம்மேளனம் கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் தொழில்முயற்சியாளர்களுக்கு அறிவூட்டுவதற்காகவும் வலுவூட்டுவதற்காகவும் நம்பிக்கையளிப்பதற்காகவும் வலைத்தள கருத்தரங்கு தொடர்களை நடாத்தியது. இலங்கை வர்த்தக சம்மேளனம், கொவிட்-19 பின்னணியில் முக்கிய அரச முகவர்களினால் வழங்கப்படும் வர்த்தக சேவைகள் தொடர்பில் தனியார் துறைக்கு தொடர்ந்து இற்றைப்படுத்தும் வகையில் அர்ப்பணிக்கப்பட்ட பக்கமாக "வர்த்தகப் பார்வை" என்ற வலைப்பக்கத்தினை ஆரம்பித்தது.

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும் இலங்கை முதலீட்டுச் சபையும் முடக்கல் நிலைமைக்கு மத்தியிலும் தொழில்முயற்சிகளின் தடங்கலற்ற வியாபாரத் தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக பல்வேறு வழிமுறைகளையும் மேற்கொண்டன.** இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது முடக்கல் காலப்பகுதியின் தொழிற்பாடுகள் தொடர்பான விசாரணைகளுக்கு பதிலிறுத்துவதற்காக 24 மணிநேர உதவிப்பீடங்களை நிறுவியது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தொடர்பான அதிகாரிகளுடன் இணைந்து முடக்கல் காலம் முழுவதும் சரக்குப் போக்குவரத்துக்களுக்கு வசதியளிப்பதற்கான வழிமுறைகளை மேற்கொண்டது. அத்துடன், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை புதிய வாய்ப்புக்கள் தொடர்பில் ஏற்றுமதியாளர்களுடன் புலனாய்வு அறிக்கைகளை விரைவாகப் பகிர்ந்து கொள்வதற்காக வெளிநாட்டு அமைச்சுடன் வாராந்த இணையவழி கூட்டங்களை ஒழுங்குசெய்தமையின் மூலம் வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களுடன் முன்கூட்டிய செயற்பாடு சார்ந்த விதத்தில் இணைப்புக்களை மேற்கொண்டது. விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்காக இணையவழிப் பொறிமுறையினை நிறுவுகின்றதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட ஏற்றுமதிக் கட்டளைகளுக்கான இன்றியமையாத மூலப்பொருட்களின் கொள்வனவுகளுக்கு வசதியளித்தது. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இணையவழி வியாபாரத்தினை ஊக்குவித்ததுடன் வர்த்தக நாமம், சந்தைப்படுத்தல் மற்றும் நிதியியல் பிரச்சனைகள் தொடர்பில் ஏற்றுமதியாளர்களுக்கும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கும் அறிவூட்டுவதற்காக கிரமமான வெப்தள ஆய்வரங்குகளையும் ஒழுங்குபடுத்தியது. அதேவேளை, உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் ஊக்குவிப்புப் பணிகள் இரண்டின் மீதும் நேரடியான தாக்கத்தினைக் கொண்டிருக்கும் பயணக் கட்டுப்பாடுகளின் விதிப்புடன் முதலீட்டுச் சபை மெய்நிகர் தளம்களை நோக்கிய ஊக்குவிப்பு உபாயங்களை நோக்கி நகர்ந்தது. கொவிட்-19 நோய்த்தொற்றின் விளைவாக, குறிப்பிட்ட உற்பத்திகளுக்கான மாற்றமடைந்து வருகின்றதும் உயர்வடைந்து வருகின்றதுமான கேள்வியை நிறைவு செய்யும் விதத்தில் மேலதிக உற்பத்தி வகைகளில் ஈடுபடுவதற்கு முதலீட்டுச் சபை தொழில்முயற்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. 2020இல் முதலீட்டுச் சபை, மேலதிக நடவடிக்கையொன்றாக தனிப்பட்ட பாதுகாப்புச் சாதனங்களின் உற்பத்தியில் ஈடுபடுவதற்கு 50 கம்பனிகளுக்கு ஒப்புதலளித்தது. முதலீட்டுச் சபை வலய தொழில்முயற்சிகளுக்கான வசதியளிப்பவர் என்ற முறையில் தொடர்பான அதிகாரிகளிடமிருந்து தேவையான ஒப்புதல்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் முடக்கல் காலப்பகுதியில் அவர்களது தொழிற்பாடுகளை மீள ஆரம்பிப்பதில் வியாபாரங்களுக்கு உதவுவதற்காக பல்வேறு வழிமுறைகளையும் மேற்கொண்டது. முதலீட்டுச் சபை இலங்கை சுங்கத்தின் ஆலோசனையுடன் முதலீட்டுச் சபை ஏற்றுமதியாளர்களுக்காக காகிதாதிகளற்ற இறக்குமதி, ஏற்றுமதி ஆவணப்படுத்தல் செய்முறைகளை நடைமுறைப்படுத்தியது. இறப்பரை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புக்களின் உள்நாட்டுப் பெறுமதிகூட்டல்களை உயர்த்துவதற்காக இலங்கை முதலீட்டுச் சபை இரண்டு முக்கிய செயற்றிட்டங்களுக்கு வசதியளித்தது. இவை, ஐ.அ.டொலர் 550 மில்லியன் கொண்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவருமென எதிர்பார்க்கப்படுகிறது. பயணி உந்து ஊர்திகளுக்கான டயர்களை உற்பத்தி செய்வது தொடர்பாக ஐ.அ.டொலர் 100 மில்லியன் கொண்ட முதலீட்டு செயற்றிட்டத்தின் முதலாவது கட்டம் 2020இல் முடிவடைந்ததுடன் தொழிற்பாடுகள் 2021 சனவரியில் தொடங்கப்பட்டது. இதே செயற்றிட்டத்தின் இரண்டாவது கட்டம் 2022 மாச்சு நடுப்பகுதியில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேநேரம், அம்பாந்தோட்டை பன்னாட்டுத் துறைமுகத்திற்குள் 121 ஏக்கர் பரப்பில் டயர் தயாரிப்புப் பொறிகளை நிறுவுவதற்காக 2020 நவெம்பரில் ஒப்பந்தமொன்று கையெழுத்திடப்பட்டது. இச்செயற்றிட்டமானது ஐ.அ.டொலர் 300 மில்லியன் கொண்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டினைக் கவருமென எதிர்பார்க்கப்படுகிறது.

**அரசாங்கம், இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து கொவிட்-19 நோய்த்தொற்றினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், சுயதொழில்புரியும் சங்கங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு படுகடன் நிவாரணம், படுகடன் சட்ட இசைவுத்தாமதம், தொழிற்படு மூலதனக் கடன் வசதிகள் என்பனவற்றை உள்ளடக்கிய பரந்தளவான வசதிகளை வழங்கியது.** கொவிட்-19 உடன்

தொடர்பான இடையூறுகளினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு தொழிற்படு மூலதனக் கடன்களை வழங்குவதற்காக மூன்று கட்டங்களில் “சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் திட்ட வசதியை” மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது. இவ்வசதியின் கீழ், மத்திய வங்கி பங்கேற்கும் வங்கிகளுக்கு சலுகை வட்டி வீதத்தில் நிதிகளை வழங்கியதுடன் இது வர்த்தக வங்கிகளினால் ஆண்டிற்கு 4 சதவீத வட்டியில் கடனாக வழங்கப்பட்டது. இவை, 6 மாத சலுகைக் காலத்துடன் 24 மாதங்களில் மீளச்செலுத்தப்பட வேண்டியவையாகும். ஆண்டின் இறுதியில், கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களிடமிருந்து பெறப்பட்ட 59,854 கடன் விண்ணப்பங்கள் தொடர்பில் ரூ.173.9 பில்லியனுக்கு ஒப்புதலளிக்கப்பட்டது. 2020இல் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கான கொடுகடன் திட்டங்களுக்கும், கூரை மீதான சூரிய வலு உருவாக்கக் கடன் திட்டங்களுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி தொடர்ந்தும் நிதியளித்தது. 2020 இறுதியில் இவ்விரு கடன் திட்டங்களின் கீழும் ரூ.32.8 பில்லியன் வழங்கப்பட்டது. மேலும், “தொழில்முயற்சிகள் இலங்கை” கடன் நிகழ்ச்சித்திட்டத்திற்கான அரசின் மொத்த உதவுதொகைக் கொடுப்பனவுகள் 2020இல் ரூ.6.0 பில்லியனாகக் காணப்பட்டன.

## கட்டடவாக்கம், மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்

**2020இல் சுகாதாரம் தொடர்பான கரிசனைகள் கட்டடவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளின் செயலாற்றத்தினைக் கடுமையாகப் பாதித்து முறையே 13.2 சதவீத, 12.5 சதவீதச் சுருக்கத்திற்கு வழிவகுத்தன. இவை 2019இல் முறையே 4.0 சதவீதத்தினாலும் 2.8 சதவீதத்தினாலும் வளர்ச்சியுற்றிருந்தன.** சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் கட்டடவாக்க நடவடிக்கைகளுக்கு உள்ளீடுகளை வழங்குகின்ற மணல் மற்றும் ஏனைய சுரங்கமகழ்தல் நடவடிக்கைகள், மற்றும் இரத்தினக்கல் சுரங்கமகழ்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. கொவிட்-19 நோய்த்தொற்றின் மோசமான தாக்கத்தின் காரணமாக கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட பின்னடைவும் அவை தொடர்பிலான பயணக் கட்டுப்பாடுகளும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளிலும் சுருக்கத்தினை ஏற்படுத்தின. கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட சுருக்கம் நாட்டின் மொத்த சிமெந்துக் கிடைப்பனவில் பிரதிபலிக்கப்பட்டது. இது, 2020இல் 11.5 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க சுருக்கத்தினைப் பதிவு செய்தது. மேலும், கட்டட மூலப்பொருட்களின் இறக்குமதி சுருக்கமடைந்தமைக்கு, இறக்குமதி பதிலீட்டுக் கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்காகப் பின்பற்றப்பட்ட கொள்கை வழிமுறைகளும் ஓரளவிற்குக் காரணமாக அமைந்தன. எனினும், இது உள்ளூர் வழங்கலுக்கான கேள்வியை அதிகரித்திருக்கிறது. அதேவேளை, கட்டடவாக்க நடவடிக்கைகளிலும் அதன் விளைவாக சுரங்கமகழ்தல் நடவடிக்கைகளிலும் ஆண்டின் பின்னரைப் பகுதியில் மீட்சி அவதானிக்கப்பட்டது. இம்மீட்சிகளை எடுத்துக்காட்டுகின்ற விதத்தில், தனிப்பட்ட கட்டடவாக்க நடவடிக்கைகள் உட்பட, கட்டடவாக்க நடவடிக்கைகளுக்காக, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2020 திசெம்பர் இறுதியில் கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன், இவ்வாண்டுப்பகுதியில் நிலவிய தாழ்ந்த வட்டி வீத சூழலும் இதற்கு ஆதரவாக அமைந்தது. அதேவேளை, இலங்கை மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட கட்டடவாக்கத் துறையுடன் தொடர்பான வியாபார அளவீடு பெரும்பாலான கட்டடவாக்க நிறுவனங்கள் விசேடமாக ஆண்டின் பின்னரைப் பகுதியில் குறைவான செயலாற்றத்தினைக் கொண்டிருந்தமையினை எடுத்துக்காட்டியமைக்கு உலகளாவிய நோய்த்தொற்றுடன் தோன்றிய சுகாதாரத்துடன் தொடர்பான கரிசனைகளே காரணமாகும்.

2

## மின்வலு, நீர் மற்றும் கழிவுச் சுத்திகரிப்பு

**பொருளாதாரத்தில் காணப்பட்ட குறைந்த செயலாற்றத்தின் காரணமாக பெறுமதிகூட்டப்பட்ட மின்வலு, நீர் மற்றும் கழிவு சுத்திகரிப்பு நடவடிக்கைகள் 2019இல் பதிவுசெய்யப்பட்ட 4.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 0.8 சதவீதத்தினால் சிறிதளவு சுருக்கமடைந்தன.** துணைப் பொருளாதார நடவடிக்கைகளிடையே, மின்வலு, வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி நடவடிக்கைகளின் வழங்கல் 2019இல் பதிவுசெய்யப்பட்ட 4.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 1.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. மின்வலு உருவாக்கத் தரவுகளைப் பரிசீலனையில் கொள்கையில், 2020இல் மொத்த மின்வலு உருவாக்கம் சிறிதளவு சுருக்கத்தினைப் பதிவுசெய்தமைக்கு, குறைந்தமட்ட பொருளாதார நடவடிக்கைகளுடன், குறிப்பாக ஆண்டின் பின்னரைப் பகுதியில் கைத்தொழில் துறையிலிருந்து மின்வலுவுக்கான கேள்வி வீழ்ச்சியடைந்தமையே பெருமளவிற்குக் காரணமாகும். இவ்வகையிலுள்ள ஏனைய துணைப் பொருளாதார நடவடிக்கைகளைப் பரிசீலனையில் கொள்கையில், பெறுமதிகூட்டப்பட்ட நீர்ச் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள் 2020இல் 4.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் வடிகால்கள், கழிவு சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கைகள் இவ்வாண்டுப்பகுதியில் 1.0 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் பதிவுசெய்தன.

## பணிகள்

**கொவிட்-19 உலகளாவிய தொற்று சில பணிகள் நடவடிக்கைகளின் மீது, குறிப்பாக தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத்தொடர்பூட்டல்கள் மீது சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்த அதேவேளையில், பயணம் மற்றும் சுற்றுலா தொடர்பான பணி நடவடிக்கைகளுக்கு ஏற்பட்ட கடுமையான**

வரைபடம் 2.9
கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள் (அ)




(அ) கொ.மு.சுட்டெண்ணானது கடந்த மாதத்துடன் ஒப்பிட்டு மாதாந்த அபிவிருத்திகளை வெளிக்காட்டும் மனோபாவ அளவீட்டு அடிப்படையில் அமைந்ததாகும். இது ஓர் வியாபித்தல் சுட்டெண் (diffusion index) ஆவதுடன் 0 மற்றும் 100 இற்கு இடையிலான பெறுமதியை கொண்டிருப்பதோடு நடுநிலையான 50இற்கு மேலான சுட்டெண் பெறுமதி பொருளாதார நடவடிக்கைகளில் ஓர் விரிவாக்கத்தைக் குறிக்கும் அதேவேளையில் 50இற்க கீழான சுட்டெண் பெறுமதியானது சுருக்கத்தினையும் குறிக்கின்றது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**இடையூறுகள் 2019இல் பதிவுசெய்யப்பட்ட 2.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் பெறுமதிகூட்டப்பட்ட நியதிளில் 1.5 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த சுருக்கத்திற்கு வழிவகுத்தன.** குறிப்பாக, நோய்த்தொற்றால் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக 2020 மாச்சு நடுப்பகுதியிலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் கடுமையாக வீழ்ச்சியடைந்தமை சுற்றுலா தொடர்பான பணி நடவடிக்கைகளைப் பாதித்தது. இதன்படி, பயணக் கட்டுப்பாடுகளினால் கடுமையான இடையூறுகளுக்குட்பட்ட போக்குவரத்து, ஏனைய தனியாள் பணிகள் மற்றும் தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிவகைகளின் சேவை நடவடிக்கைகள் என்பன ஒட்டுமொத்த பணி நடவடிக்கைகளின் சுருக்கத்திற்கு பெருமளவிற்குப் பங்களித்தன. எனினும், டிஜிட்டல் தளம் மற்றும் தொடர்பூட்டல் பணிகளுக்கான கேள்வியில் ஏற்பட்ட உத்வேகத்திலிருந்து தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டப்படுத்தலும் தொடர்பூட்டல் பணிகளும் நன்மையடைந்தன. மேலும், நிதியியல் பணிகள், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், மனித சுகாதாரம், பொது நிருவாகம் மற்றும் கல்விப் பணிகள் இவ்வாண்டுப்பகுதியில் விரிவடைந்தன. நோய்த்தொற்றின் காரணமாக பணிகள் நடவடிக்கைகளில் காணப்பட்ட ஒட்டுமொத்த குறைவடைந்த செயலாற்றத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இலங்கை மத்திய வங்கியினால் தொகுக்கப்பட்ட பணிகள் நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், கொவிட்-19 நோய்த்தொற்றினால் நாடு கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாதங்களில், மாதத்திற்கு மாத அடிப்படையில், சுருக்கமடைந்தமையினை எடுத்துக்காட்டியது. மேலும், பணி நடவடிக்கைகளுடன் தொடர்பான வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின் கேள்வி மற்றும் விற்பனை துணைச் சுட்டெண்கள் இவ்வாண்டுப்பகுதியில் எதிர்க்கணியமான வீச்சில் காணப்பட்டன. 2020இல் மேலும், கூகிள் சமூக பயண மாற்றங்களும் சில முக்கிய பணி நடவடிக்கைகளில் வீழ்ச்சி ஏற்பட்டமையினை எடுத்துக்காட்டின.

## மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம்

**குறைவடைந்த கேள்வி நிலைமைகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளின் பின்னணியில், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளின் பெறுமதிகூட்டல், 2019இல் பதிவுசெய்யப்பட்ட 3.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 1.4 சதவீதத்தினால் மாத்திரம் வளர்ச்சியடைந்தது.** 2020இல் கேள்விப்பக்கத்தில் ஏற்பட்ட அபிவிருத்திகளுக்குப் புறம்பாக, அத்தியாவசியமல்லா இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துகின்ற அரசாங்கத்தின் கொள்கை, கொவிட்-19 நோய்த்தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளுடன் சேர்ந்து, குறிப்பாக முக்கிய பண்டிகைக் காலப்பகுதிகளில் வர்த்தக நடவடிக்கைகளின் இம்மெதுவான வளர்ச்சிக்குப் பெருமளவு பங்களித்தன. மொத்த இறக்குமதி அளவுச் சுட்டெண் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சிக்கும் மேலாக இவ்வாண்டுப்பகுதியில் வீழ்ச்சியைப் பதிவுசெய்து வர்த்தகத்திற்கான வாய்ப்பினை மட்டுப்படுத்தியது. இறக்குமதி அளவுச் சுட்டெண்ணின் துணை விலைகளைப் பரிசீலனையில் கொள்கையில், நுகர்வுப்பொருள் இறக்குமதி அளவுகள் இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தமைக்கு உணவல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கிய தூண்டுதலாக அமைந்தது. அதேவேளை, இடைநிலைப்பொருட்களினதும் முதலீட்டுப்பொருட்களினதும் இறக்குமதி அளவுகளும் 2020இல் வீழ்ச்சியடைந்தன.

## போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல்

**களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகள் உட்பட, பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து, 2019இல் பதிவுசெய்யப்பட்ட 1.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 2020இல் 6.7 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு கொவிட்-19 நோய்த்தொற்றுடன் தொடர்பான பயணங்கள் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் சுற்றுலாத் தொழில்துறையில் காணப்பட்ட பின்னடைவு என்பன காரணங்களாக அமைந்தன.** போக்குவரத்து நடவடிக்கைகளுடன் தொடர்பான குறிகாட்டிகள் போக்குவரத்துப் பணிகளில் ஏற்பட்ட தடங்கல்களை எடுத்துக்காட்டின. தரைவழிப் போக்குவரத்தினைப் பரிசீலனையில் கொள்கையில் பேருந்து தொழிற்பாட்டாளர்களினாலும் அதேபோன்று இலங்கைப் புகைவண்டிப் பகுதியினாலும் தொழிற்படுத்தப்பட்ட மொத்த கி.மீற்றர்கள் 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் கடுமையாக வீழ்ச்சியடைந்தன. குறைவடைந்த பயணிகள் போக்குவரத்தானது பொதுப் போக்குவரத்து தொடர்பில் இலங்கைக்கான கூகிள் சமூக போக்குவரத்திலும் பிரதிபலிக்கப்பட்டது. அதேவேளை,

வான் போக்குவரத்து நடவடிக்கைகளும் இவ்வாண்டுப்பகுதியில் கணிசமாக குறைவடைந்தமைக்கு உலகளாவிய தொற்றினைக் கட்டுப்படுத்துமொரு வழிமுறையாக 2020 மாச்சு நடுப்பகுதியிலிருந்து இலங்கை வானூர்தி நிலையங்களின் தொழிற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டமையே முக்கிய காரணமாகும். அதற்கிணங்க, சிறிலங்கன் எயார்லைன்சால் பறந்த பயணிகள் கி.மீற்றர்கள் இவ்வாண்டுப்பகுதியில் கணிசமாக குறைவடைந்தது. நீர்வழிப் போக்குவரத்து நடவடிக்கையுடன் தொடர்பான குறிகாட்டிகளைப் பரிசீலனையில் கொள்கையில், கொள்கலன் போக்குவரத்தும் (இருபது அடிகளுக்குச் சமமான நியதிகளில் அளவிடப்பட்ட) இலங்கை துறைமுகங்களினால் கையாளப்பட்ட சரக்கு அளவும் 2019 உடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தன.

## தங்குமிட வசதி மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள்

**சுற்றுலாப் பயணகளின் வருகைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க சுருக்கத்தின் காரணமாக, தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிபான பணி நடவடிக்கைகள் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 39.4 சதவீதத்தினால் கணிசமாகச் சுருக்கமடைந்ததுடன் இது, 2019இல் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சியை விட 4.6 சதவீதம் அதிகமாகும்.** 2019இல் உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் பாதிக்கப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் வருகையானது, உலகளாவிய நோய்த்தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்காக சுற்றுலாப் பயணிகளின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் காரணமாக 2020இல் 73.5 சதவீதத்தினால் மேலும் வீழ்ச்சியடைந்தது. இதன்படி, சுற்றுலாவிலிருந்தான வருவாய்களும் அதேபோன்று, இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட தரமிடப்பட்ட சுற்றுலா விடுதிகளின் அறைகளில் தங்கும் வீதமும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020இல் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. மேலும், பயணம் செய்தல் மற்றும் ஒன்றுகூடுதல் மீதான தடைகளின் காரணமாக உள்ளூர் சமுகத்தினர் உணவகங்களில் உணவு அருந்துவதனை தவிர்த்துக் கொண்டதன் காரணமாக உணவு மற்றும் குடிபானப் பணிகளின் செயலாற்றம் மோசமாகப் பாதிக்கப்பட்டது.

## நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிடச் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள்

**நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிடச் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள் 2019இல் பதிவுசெய்யப்பட்ட 2.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 5.0 சதவீதத்தினால் விரிவடைந்தமைக்கு, இவ்வாண்டுப்பகுதியில் நிலவிய தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையிலிருந்து கிடைத்த நன்மைகள் காரணமாக நிதியியல் பணிகளிலேற்பட்ட கணிசமான வளர்ச்சியே முக்கிய ஆதரவாக விளங்கியது.** இதற்கமைய, நிதியியல் பணி நடவடிக்கைகளும் துணை நிதியியல் பணிகளும் 2019இல் பதிவுசெய்யப்பட்ட 2.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 10.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. நிதியியல் பணிகளுடன் தொடர்பான குறிகாட்டிகளைப் பரிசீலனையில் கொள்கையில் வங்கிகளிலும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களிலுமுள்ள மொத்தக் கடன்களினதும் முற்பணங்களினதும் மொத்தத் தொகை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020இல் அதிகரித்தது காணப்பட்டன. இது வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின் வங்கிக் கொடுகடன் துணைச் சுட்டெண்ணிற்கான கேள்வியில் ஏற்பட்ட விரிவாக்கத்தினாலும் பிரதிபலிக்கப்பட்டது. மேலும், இலங்கை மத்திய வங்கியினால் காலாண்டிற்கு காலாண்டு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கொடுகடன் வழங்கல் மீதான அளவீட்டின்படி, கடன் வழங்குவதற்கான வங்கிகளின் ஒட்டுமொத்த விருப்பு 2020இல் அதிகரித்துள்ளது. தற்பொழுது நிலவுகின்ற தாழ்ந்த வட்டி வீதச் சூழலுக்கு மத்தியிலும் வங்கிகளினதும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களினதும் மொத்த வைப்புத் தளம் 2020இல் வளர்ச்சியடைந்தது. அதேநேரம், காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியிடல் தொடர்பான நடவடிக்கைகள் 2020இல் 0.6 சதவீதத்தினால் சிறிதளவினால் வளர்ச்சியடைந்த அதேவேளையில், வதிவிடச் சொத்துடமை உட்பட, உண்மைச் சொத்து நடவடிக்கைகள் இவ்வாண்டுப்பகுதியில் 1.2 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் பதிவுசெய்தன.

## தகவல் மற்றும் தொடர்பூட்டல்

**தொலைத்தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் நிகழ்ச்சித்திட்டப்படுத்தல் மற்றும் ஆலோசனைப் பணிகள் 2019இல் பதிவுசெய்யப்பட்ட 16.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 14.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து ஆய்விற்குரிய ஆண்டுப்பகுதியில் சமூக இடைவெளியுடன் தொடர்பான வழிமுறைகளில் தொலைத்தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பணிகளுக்கான அதிகரித்த கேள்வியிலிருந்தான நன்மைகளைப் பெற்றுக்கொண்டன.** இதற்கமைய, கொவிட்-19 நோய்த்தொற்றுடன் தொடர்பான பயணம் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் பௌதீக இடைவெளித் தேவைப்பாடுகள் என்பனவற்றின் காரணமாக பெரும்பாலான வேலைத்தளங்களினாலும் கல்வி நிறுவனங்களினாலும் பின்பற்றப்பட்ட குறிப்பாக, வீட்டிலிருந்து பணியாற்றுதல், வீட்டிலிருந்து கல்வி பயிலுதல் என்பனவற்றின் கீழ் தொலைத்தொடர்பூட்டல் உட்கட்டமைப்பு இன்றியமையாத வகிபாகத்தினை ஆற்றியமையினால் தொலைத்தொடர்பூட்டல் நடவடிக்கைகள் 2019இல் பதிவுசெய்யப்பட்ட 17.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியை விட 2020இல் 15.4 சதவீதம் கொண்ட உயர்ந்த வளர்ச்சியைக் கொண்டிருந்தது. அதேவேளை, வியாபாரம், அரசாங்கம் மற்றும் சமூகங்களின்

தொடர்ச்சியான தொழிற்பாடுகளை இணைக்கின்ற விதத்திலும் உறுதிப்படுத்துகின்ற விதத்திலும் மின்-வர்த்தகம் மற்றும் டிஜிட்டல் தளங்கள் உட்பட தகவல் தொழில்நுட்பம் இயலுமைப்படுத்தப்பட்ட பணிகளுக்கான வளர்ந்துவரும் கேள்வியைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டப்படுத்தல் ஆலோசனை மற்றும் தொடர்பான நடவடிக்கைகள் 2019இல் பதிவுசெய்யப்பட்ட 13.1 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கு மேலாக 2020இல் உயர்ந்த வளர்ச்சி வீதமொன்றான 10.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

### ஏனைய பணி நடவடிக்கைகள்

**ஏனைய பணிகள் தொடர்பான நடவடிக்கைகளைப் பரிசீலனையில் கொள்கையில், உலகளாவிய நோய்த்தொற்றின் மோசமான தாக்கத்தின் பெருமளவு காரணமாக ஏனைய தனியாள் பணிகளும் தொழில்சார் பணிகளும் சுருக்கமடைந்த அதேவேளையில், பொது நிருவாகம், கல்வி மற்றும் மனித சுகாதாரத்துடன் தொடர்பான பணிகள் 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் விரிவடைந்தன.** பொதுச் சுகாதாரத்துடன் தொடர்பான கரிசனைகள், பயணம் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் சமூக இடைவெளித் தேவைப்பாடுகள், என்பன பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மற்றும் அழகுச் சிகிச்சை நடவடிக்கைகள் போன்ற தனியாள் பணிகளுக்கான கேள்வியைக் குறைத்த அதேவேளையில் சுற்றுலாவுடன் தொடர்பான நடவடிக்கைகளில் காணப்பட்ட பின்னடைவும் சுற்றுலாவிடுதிகள் மற்றும் உணவகங்கள் தொடர்பான தனியாள் பணிகளுக்கான கேள்வியையும் இவ்வாண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைய வழிவகுத்தன. இதன்படி, 2019இல் 2.1 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்த ஏனைய தனியாள் பணி நடவடிக்கைகள் 2020இல் 6.5 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன. அதேநேரம், தொழில்சார் பணிகளும் இவ்வாண்டுப்பகுதியில் 2.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. எனினும், அரச நிருவாகம், பாதுகாப்பு மற்றும் கட்டாய சமூகப் பாதுகாப்புப் பணிகள் மற்றும் மனித சுகாதாரத்துடன் தொடர்பான பணிகள் 2020இல் முறையே 1.6 சதவீதத்தினாலும் 4.3 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தமைக்கு, ஆண்டு முழுவதும் கொவிட்-19 நோய்த்தொற்றினை ஒழிப்பதில் அரசாங்கம் காட்டிய ஈடுபாடு உதவியாக அமைந்தது. மேலும், கல்விப் பணிகள் 2020இல் 0.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.

## 2.5 செலவினம்

**நுகர்வு மற்றும் செலவினம் இரண்டையுமுள்ளடக்கிய மொத்த உள்நாட்டுச் செலவினம் 2019இன் 3.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் நடைமுறை விலைகளில் பரந்தளவில் மந்தமான செயலாற்றமொன்றினைப் பதிவுசெய்தது.** இதன்படி, 2020இல் முதலீட்டுச் செலவினம் 6.2 சதவீதத்தினால் சுருக்கமடைந்த வேளையில் நுகர்வுச் செலவினம் 2020இல் பெயரளவு நியதிகளில் 2019 உடன் ஒப்பிடுகையில் 2.1 சதவீதத்தினால் மிதமான வேகத்தில் அதிகரித்தது. வெளிநாட்டுத் துறையில், பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் 28.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்து, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஏற்றுமதி நாடுகளிலிருந்தான குறைந்த கேள்வியைப் பிரதிபலித்தது. அதேவேளை, பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகளும் 2019 உடன் ஒப்பிடுகையில் 21.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்து தேறிய வெளிநாட்டுக் கேள்விக்கு சாதகமான முறையில் பங்களித்தமைக்கு, அத்தியாவசியமல்லாத இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு

அட்டவணை 2.9
மொத்த கேள்வி (அ)

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகள் (ரூ.மில்) 2018 (ஆ) | 2019 (ஆ)(இ) | 2020 (இ) | நிலையான (2010) விலைகள் (ரூ.மில்) 2018 (ஆ) | 2019 (ஆ)(இ) | 2020(இ) |
|---|---|---|---|---|---|---|
| அ. உள்நாட்டுக் கேள்வி | | | | | | |
| நுகர்வு | 11,086,732 | 11,902,168 | 12,146,234 | 7,453,373 | 7,739,402 | 7,556,276 |
| (% மாற்றம்) | 10.0 | 7.4 | 2.1 | 3.2 | 3.8 | -2.4 |
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 4,266,053 | 4,030,195 | 3,778,482 | 3,487,278 | 3,122,105 | 2,806,894 |
| (% மாற்றம்) | 1.3 | -5.5 | -6.2 | 3.6 | -10.5 | -10.1 |
| **மொத்த உள்நாட்டு கேள்வி** | **15,352,785** | **15,932,363** | **15,924,716** | **10,940,651** | **10,861,507** | **10,363,170** |
| **(% மாற்றம்)** | **7.4** | **3.8** | **0.0** | **3.3** | **-0.7** | **-4.6** |
| ஆ. வெளிநாட்டுக் கேள்வி | | | | | | |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 3,292,414 | 3,472,337 | 2,483,056 | 1,722,275 | 1,845,686 | 1,668,855 |
| (% மாற்றம்) | 13.2 | 5.5 | -28.5 | 0.5 | 7.2 | -9.6 |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகள் | 4,354,292 | 4,391,746 | 3,434,777 | 2,997,547 | 2,823,843 | 2,501,420 |
| (% மாற்றம்) | 12.4 | 0.9 | -21.8 | 1.8 | -5.8 | -11.4 |
| **தேறிய வெளிநாட்டுக் கேள்வி** | **-1,061,878** | **-919,410** | **-951,721** | **-1,275,272** | **-978,157** | **-832,565** |
| **(% மாற்றம்)** | **-10.3** | **13.4** | **-3.5** | **-3.5** | **23.3** | **14.9** |
| **இ. மொத்த கேள்வி** | **14,290,907** | **15,012,953** | **14,972,995** | **9,665,379** | **9,883,350** | **9,530,606** |
| **(% மாற்றம்)** | **7.2** | **5.1** | **-0.3** | **3.3** | **2.3** | **-3.6** |

(அ) தரவானது மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

எடுக்கப்பட்ட வழிமுறைகளும் இறக்குமதி பதிலீட்டுக் கைத்தொழில்களை ஊக்குவித்தமையும் ஓரளவிற்குக் காரணங்களாகும். இவ் அபிவிருத்திகளின் இணைந்த பெறுபேறாக, நடைமுறை விலைகளில் தேறிய வெளிநாட்டுக் கேள்வியும் 2019இல் 13.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 3.5 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. இதன் விளைவாக, மொ.உ.உற்பத்திச் செலவினத்தின் கூட்டுத்தொகையாக விளங்கும் நடைமுறை விலைகளிலான மொ.உ.உற்பத்தியும் தேறிய வெளிநாட்டுக் கேள்வியும் 2019இன் 5.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 0.3 சதவீதத்தினால் சிறிதளவால் சுருக்கமடைந்தது. நிலையான விலைகளில், மொத்த உள்நாட்டுச் செலவினம் 2020இல் 4.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்ததுடன் இது 2019இன் 0.7 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் உயர் வீதமாகக் காணப்பட்டமைக்கு நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினம் இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். அதேநேரம், ஏற்றுமதிகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டமைக்கிடையிலும் நடைமுறை விலைகளில் தேறிய வெளிநாட்டுக் கேள்வி 2020இல் 14.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்பட்டமையிலிருந்து கிடைத்த சாதகமான பங்களிப்புக்களே காரணமாகும். இவ் அபிவிருத்திகளின் விளைவாக நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி 2019இல் 2.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 3.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

## நுகர்வு

**2020இல் நடைமுறை விலைகளில் பொருளாதாரத்தின் மொத்தச் செலவினத்தில் 81.1 சதவீதத்திற்கு வகைகூறும் நுகர்வுச் செலவினம் 2019இன் 7.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 2.1 சதவீதத்தினால் மிதமான வேகத்தில் வளர்ச்சியடைந்து முடக்கலினாலும் நிச்சயமற்ற வருமானம் காரணமாகவும் நுகர்வோர் எச்சரிக்கை உணர்வுடன் செலவுகளை மேற்கொண்டமையைக் எடுத்துக்காட்டியது.** இம் மிதமான தன்மைக்கு, முக்கியமான நுகர்வுச் செலவின வகையான தனியார் நுகர்வுச் செலவினத்தின் கணிசமான மெதுவடைதல் காரணமான அதேவேளையில் பெரும்பாலான நுகர்வுப்பொருள் வகைகளின் விலைகள் இவ்வாண்டுப்பகுதியில் உயர்வாக விளங்கின. அதேநேரம், அரச நுகர்வுச் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020இல் 9.8 சதவீதம் கொண்ட உயர்வேகத்தில் வளர்ச்சியடைந்தது.

**கொவிட்-19 நோய்த்தொற்றிலிருந்தான நுகர்வோர் நடத்தை மீதான மோசமான தாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினம் 2019இன் 7.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 1.0 சதவீதம் கொண்ட சிறிதளவினால் மாத்திரமே வளர்ச்சியடைந்தது.** இவ்வாண்டுப்பகுதியில் நோய்த்தொற்றானது அநேக நுகர்வோர் சந்தைகளில் குறிப்பிடத்தக்க மோசமான நிலைமைகளை உருவாக்கியமைக்கு பயணங்கள் மீதான கட்டுப்பாடுகள், வீட்டிலிருந்து கொண்டே பணியாற்றுகின்ற ஏற்பாடுகள் மற்றும்

2

அட்டவணை 2.10
நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் உள்ளமைப்பு (அ)

| வகை | மொத்த தனியார் நுகர்வுச் செலவினத்தின் சதவீதமாக (%) | | | வளர்ச்சி (%) | |
|---|---|---|---|---|---|
| | 2018 (ஆ) | 2019 (ஆ)(இ) | 2020 (இ) | 2019 (ஆ)(இ) | 2020 (இ) |
| 1. உணவு மற்றும் வெறியமல்லா குடிபானங்கள் | 29.2 | 28.0 | 30.9 | 2.6 | 11.5 |
| 2. வெறியமுள்ள குடிபானங்கள், புகையிலை மற்றும் போதைப்பொருள் | 3.5 | 3.6 | 3.4 | 9.9 | - 4.0 |
| 3. புடவையும் காலணியும் | 4.1 | 4.2 | 3.6 | 10.1 | - 13.2 |
| 4. வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு, மற்றும் ஏனைய எரிபொருட்கள் | 10.3 | 10.2 | 10.4 | 6.4 | 3.5 |
| 5. தளபாடமிடுதல், வீட்டுச் சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டுத்துறையின் பராமரிப்பு | 1.1 | 1.0 | 1.0 | 2.8 | - 2.1 |
| 6. நலம் | 2.7 | 2.8 | 2.9 | 14.0 | 2.1 |
| 7. போக்குவரத்து | 23.8 | 24.2 | 20.2 | 9.3 | - 15.9 |
| 8. தொடர்பூட்டல் | 0.9 | 0.7 | 0.8 | - 11.3 | 2.5 |
| 9. பொழுதுபோக்கு மற்றும் கலாசாரம் | 1.7 | 1.7 | 1.8 | 4.9 | 5.3 |
| 10. கல்வி | 1.2 | 1.2 | 1.4 | 9.8 | 9.8 |
| 11. விடுதிகள் மற்றும் உணவகங்கள் | 4.2 | 4.0 | 2.6 | 0.1 | - 34.2 |
| 12. பல்வகைப் பொருட்களும் பணிகளும் | 21.8 | 21.6 | 21.5 | 6.4 | 0.5 |
| 13. வதிவோரினால் நேரடி வெளிநாட்டு கொள்வனவுகள் | 2.9 | 2.9 | 1.4 | 9.0 | - 52.3 |
| 14. கழிக்குக: வதிவற்றோரினால் உள்நாட்டு சந்தையில் நேரடி கொள்வனவுகள் | 7.3 | 6.2 | 1.7 | - 9.4 | - 72.5 |
| மொத்த தனியார் நுகர்வுச் செலவு | 100.0 | 100.0 | 100.0 | 7.3 | 1.0 |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

2

### சிறப்புக்குறிப்பு 2
### மேம்பட்ட உலக தரமிடல்கள்: முதலீட்டாளர்களின் முன்னேற்றத்திற்கான படிக்கல்

குறிப்பாக, கடந்த தசாப்த காலத்தில் உட்கட்டமைப்பு மற்றும் தனியார் துறைத் தொழில்முயற்சிகளுடன் தொடர்புபட்ட பாரியளவு அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஈடுபாடு குறிப்பிடத்தக்கதாகக் காணப்பட்டது. எனினும், சேமிப்பிற்கும் தேவையான முதலீடுகளுக்குமிடையில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட இடைவெளி, போதுமானளவு வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதில் காணப்பட்ட இடர்ப்பாடுகள் இலங்கையின் அபிவிருத்தியை நோக்கிய பயணத்தினை மெதுவடையச் செய்த மிகப்பெரும் தடைகளாகக் காணப்பட்டிருக்கின்றன. இதன் பல்முனைத் தாக்கமானது வளர்ச்சி, தொழில்நிலை மற்றும் வருமான பங்கீடு ஆகியவற்றைப் பாதித்திருக்கிறது. தற்போதைய சூழ்நிலையில், உலகளாவிய நோய்த்தொற்றுடன் இறுகப் பிணைக்கப்பட்டிருக்கும் நிச்சயமற்ற எதிர்காலம் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலப்பகுதிக்குள் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியையும் உறுதிப்பாட்டையும் அடையும் பொருட்டு இலங்கை வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை உருவாக்குகின்ற படுகடனின் மீது அளவுக்கதிகமாக தங்கியிருப்பதனைக் குறைக்க வேண்டிய தேவை உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளைக் கொண்ட அதிகரித்த சவால்களைக் கட்டுப்படுத்த வேண்டிய தன்மைகளை உருவாக்கியிருக்கிறது. இச் சூழ்நிலையில், நாட்டிற்கு படுகடனை உருவாக்காத முக்கிய மூலமொன்றாக வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதற்கான அதன் முயற்சிகளை மீள இரட்டிப்பாக்கியிருக்கிறது. அவ்வாறு மேற்கொள்ளும் போது, வேறுபட்ட அம்சங்களைக் கொண்ட சமூகப் பொருளாதார நிலைமைகளின் அடிப்படையில், வாய்ப்புக்களைக் கொண்ட முதலீட்டாளர்கள் முன்னுரிமையளிக்கும் சேரிடமாக நாட்டின் ஆற்றல் வாய்ந்த தன்மைக்கான உலகளாவிய தரமிடலை (அட்டவணை சி.கு. 2.1) மேம்படுத்துவதன் மீது கவனத்தினைச் செலுத்தும் விதத்தில் முதலீட்டுத் தோற்றப்பாட்டினை மேம்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகும்.

அட்டவணை சி.கு. 2.1
முதலீட்டாளர்களுக்காக தெரிவுசெய்யப்பட்ட சுட்டெண்கள்

| சுட்டெண் | இலங்கை (பிந்திய) | சிறந்தவை | |
|---|---|---|---|
| சௌகரியமாக வியாபாரம் செய்தல் சுட்டெண் (2020) | 99/190 | நியூசிலாந்து | 1/190 |
| உலகளாவிய போட்டித்தன்மைச் சுட்டெண் (2019) | 84/141 | சிங்கப்பூர் | 1/141 |
| ஊழல் உணர்வுச் சுட்டெண் (2020) | 94/180 | டென்மார்க் நியூசிலாந்து | 1/180 |

2020ஆம் ஆண்டிற்கான உலக வங்கியின் வியாபாரம் செய்தல் சுட்டெண்ணில்[1] 190 நாடுகளிடையே இலங்கை 99ஆவது இடத்தினைப் பிடித்திருக்கிறது. இது 2019இன் தர வரிசையிலிருந்து ஓரிடத்தினால் முன்னேறியிருக்கிறது. கவனத்திற்குரிய 10 துறைகளை உள்ளடக்கி புள்ளியிடலில் ஒட்டுமொத்தமாக 61.8இனைப் பெறப்பட்டிருக்கிறது. வேர்ள்ட் எக்கொனமிக் போரத்தினால் தொகுக்கப்பட்ட உலகளாவிய போட்டித்தன்மைச் சுட்டெண்ணில்[2] 2019இல் இலங்கை 141 நாடுகளிடையே 84ஆவது இடத்தினைப் பெற்றிருக்கிறது. இது முன்னைய ஆண்டினை விடவும் ஒரு நிலையினால் முன்னேற்றம் கண்டிருக்கிறது. இவ்விரண்டு அறிக்கைகளும் முதலீட்டாளர்களின் நம்பிக்கைக்கும் போட்டித்தன்மைக்கும் முட்டுக்கட்டையாக விளங்கும் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளை எடுத்துக்காட்டுகின்றன. பெறுபேறுகளின் அடிப்படையில், வாய்ப்புக்கள் நிரம்பிய முதலீட்டாளர்களைச் சிறந்த முறையில் பணியாற்றுவதற்கு கவனத்திற்குரியதும் உரிய நேரத்தில் மீளமைத்துக் கொள்ள வேண்டியதுமான முக்கிய துறைகளாகப் பின்வருவனவற்றை அடையாளம் கண்டிருக்கிறது (வரைபடம் சி.கு. 2.1).

வரைபடம் சி.கு. 2.1
முதலீட்டாளர்களைக் கவருவதற்கு மேம்படுத்தப்பட வேண்டிய முக்கிய துறைகள்




#### பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு

முதலீட்டாளர்களைக் கவர்ந்து கொள்வதற்கு தாழ்ந்ததும் உறுதிவாய்ந்ததுமான பணவீக்கம் மிக முக்கியமானதாகும். தளம்பலைக் கொண்ட சூழலில் முதலீட்டாளர்களினால் எதிர்காலச் செயலாற்றம் பற்றிய நம்பகமான எதிர்வுகூறல்களைத் தயாரிக்க முடியாமலிருக்கும். கடந்த பல ஆண்டு காலப்பகுதியில் முன்மதியுடைய நாணயக் கொள்கையின் ஆதரவுடன் பணவீக்கம் நடு ஒற்றை இலக்க மட்டத்தில் பேணப்பட்டு வருகின்ற போதும், வெளிநாட்டு மற்றும் இறைத் துறைகளின் செயலாற்ற நியதிகளில் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினைப் பேணுவது சவாலுக்குரியதாகக் காணப்படுகிறது. பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டு நியதிகளில், உலகளாவிய போட்டித்தன்மை சுட்டெண்ணில் நாடு 2019இல் 118ஆவது இடத்தினைப் பெற்றுக்கொண்டமைக்குப் படுகடன் இயக்கவாற்றல் தன்மையில் காணப்பட்ட குறைந்த புள்ளிகளே முக்கிய காரணமாகும். உலக தரமிடலில் எமது நிலையினை மேம்படுத்திக் கொள்வதற்கு கடுமையான இறை ஒழுங்குகள் தொடர்பான எமது வலுவான கடப்பாடுகள் மிக முக்கியமானவையாகும்.

#### தொழிற்சந்தை

தேர்ச்சி தொடர்பான விடயத்தில் காணப்படும் பொருத்தமற்ற தன்மை, அதிகரித்துவரும் தொழிலாளர் செலவு, தொழிற்சங்க மயப்படுத்தல் மற்றும் தொழிலாளர் சட்டங்களின் ஊடாகத்

1 சௌகரியமாக வியாபாரம் செய்தல் சுட்டெண் உலக வங்கியினால் தொகுக்கப்படுகிறது. பிந்திய அறிக்கை https://www.doingbusiness.org/en/reports/global-reports/doing-business-2020 இல் கிடைக்கத்தக்கதாகவுள்ளது.

2 உலகளாவிய போட்டித்தன்மை சௌகரியப்படுத்தல் சுட்டெண் வேர்ள்ட் எக்கொனமிக் போரத்தினால் தொகுக்கப்பட்டதுடன் https://www.weforum.org/reports/the-global-competitiveness-report-2019 இல் கிடைக்கத்தக்கதாகவுள்ளது.

தோன்றுகின்ற உயர் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் போன்றவற்றின் காரணமாக தொழிற்சந்தையில் காணப்படும் நெகிழ்ச்சித்தன்மையற்ற போக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கரிசனைக்குரிய இன்னொரு விடயமாகக் காணப்படுகிறது. தொழிற்சந்தை நியதிகளில் உலகளாவிய போட்டித்தன்மைச் சுட்டெண்ணில் இலங்கை 118ஆவது இடத்தில் தரமிடப்பட்டிருக்கிறது. இதற்கு வெளிநாட்டுத் தொழிலாளர்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளுதல், உள்ளக தொழிலாளர் நகர்வுகள் மற்றும் தேவைக்கதிகமான செலவு என்பனவற்றை சௌகரியப்படுத்துவது தொடர்பில் காணப்படும் குறைந்த புள்ளிகளே காரணமாகும். தற்பொழுது காணப்படுகின்ற தொழிலாளர் சட்டங்களின் கீழ் ஏற்கனவேயுள்ள ஒப்பந்தங்களை முடிவுறுத்துவதில் முதலீட்டாளர்கள் இடர்பாடுகளை எதிர்நோக்குகின்ற வேளையில், நாட்டிற்குள் தொழிலாளர் நகர்வுகளும் மட்டுப்படுத்தப்படுகின்றதன் மூலம் தொழிலாளர் நிரம்பலில் வெற்றிடமொன்று உருவாக்கப்படுகிறது. தொழிற்படையைப் பாதுகாத்துக் கொள்வது இன்றியமையாததாகவுள்ள அதேவேளையில், வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்ந்து கொள்வதனூடாகவும் உள்நாட்டு முதலீடுகளை அதிகரித்துக் கொள்வதனூடாகவும் தொழில்வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்வதும் அந்தளவிற்கு முக்கியமானவை என்பதனைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். நேரகாலத்துடன் திறமைகளை அடையாளம் கண்டுகொள்ளுதல் மற்றும் பல்வேறு தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் தற்பொழுது நடைபெற்றுவரும் அரசாங்கத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள் எதிர்காலத்தில், குறிப்பாக, நாடு உயர் வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வதற்குத் தயாராகும் இவ்வேளையில் பயன்மிக்கதாக அமையும். கொழும்புத் துறைமுக நகரம் மற்றும் அதனுடன் தொடர்பான அபிவிருத்திச் செயற்றிட்டங்களுடன் நாடு நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தொழிற்சந்தைச் சீர்திருததங்கள் ஆதரவாக அமையும்.

### அரசாங்கக் கொள்கைகள்

அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் வெளிநாட்டு விவகாரக் கொள்கைகள் நாடு பற்றிய முதலீட்டாளர்களின் பார்வையில் நேரடியான தாக்கத்தினைக் கொண்டிருக்கும். நிலையான கொள்கைகளுடன் கூடிய உறுதியானதும் பலமானதுமான அரசாங்க முதலீட்டாளர் உறவு முறை தொடர்பில் திடமான அத்திவாரமொன்றினை இடுவதற்கான பயன்மிக்க தன்மைகளை எப்பொழுதும் வழங்கும். ஏற்கனவேயுள்ள அல்லது தற்பொழுது இடம்பெற்று வருகின்ற வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பிலான நிலையிலிருந்து அடிக்கடி பின்வாங்குவது முதலீட்டுச் சேரிடம் என்ற ரீதியில் நாட்டின் நன்மதிப்பிற்கு தார்பூசும் செயலாக அமையும். மேலும், உலகம் முழுவதிலுமுள்ள அநேக நாடுகளில் சுமத்தப்படும் மிகப் பொதுவான விமர்சனங்களிலொன்று ஊழலாகும். 2020இல் ஊழல் உணர்வுச் சுட்டெண்ணில்[3] இலங்கை 180 நாடுகளிடையே 94ஆவது இடத்தினை வகித்தவிடத்து டென்மார்க்கும் நியூசிலாந்தும் சுட்டெண்ணின்படி ஊழல் குறைந்த நாடுகளென கூட்டாக அவ்விடத்தினைப் பெற்றுக்கொண்டன. ஆகவே, முதலீட்டாளர் சிநேகபூர்வமான தன்மையினை ஆக்கபூர்வமாக அணுகுவது ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கு விரும்பத்தக்கதொரு காரணியாகவும் மாறும்.

3 ஊழல் உணர்வுச் சுட்டெண் ரான்பரன்சி இன்ரநஷனலினால் தொகுக்கப்படுகிறது. பிந்திய அறிக்கை https://www.transparency.org/en/cpi/2020/media-kit இல் கிடைக்கத்தக்க தாகவுள்ளது.

### வரி அமைப்பு

எளிமையானதும் காத்திரமானதுமான வரி முறைமை நாட்டில் வியாபாரம் செய்வதற்கான கவர்ச்சித்தன்மையினை அதிகரிக்கும். இலங்கையின் வரி அமைப்பில் அடிக்கடி மாற்றங்களைச் செய்வது, நீண்ட காலத் திட்டமிடல் நியதிகளில், முதலீட்டாளர்களினால் எதிர்நோக்கப்படும் மிக நெருக்கடியான விடயமாகக் காணப்படுகிறது. வியாபாரம் செய்தல் சௌகரியப்படுத்தல் சுட்டெண்ணின்படி 2020இல் இலங்கையில் கம்பனியொன்றினால் ஆண்டொன்றிற்கு வரி செலுத்தப்படும் எண்ணிக்கை 36 ஆகவும் வரிகளைச் செலுத்துவதற்கு செலவிடப்பட்ட சராசரி நேரம் ஆண்டிற்கு 129 மணித்தியாலங்களாகவும் காணப்பட்டமையின் காரணமாக வரிகளைச் செலுத்தும் நியதிகளில் நாடு 142ஆவது இடத்தில் தரமிடப்பட்டிருக்கிறது. இலங்கையின் வரி முறைமைகள் அண்மையில் செய்யப்பட்ட இற்றைப்படுத்தல்களுடன் மிக எளிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் வியாபாரங்களுக்கு ஆதரவளிக்கின்ற விதத்தில் தற்போதைய வரிக் கொள்கையினை நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலம் வரை பேணுவதற்கு அரசாங்கம் ஆர்வம் கொண்டுள்ளது. கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதனையும் ஏனைய பணிகளையும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நவீனமயப்படுத்துவது வரிமுறைமைகளை எளிமைப்படுத்துவதற்கு உதவும் என்பதுடன் இதன் விளைவாக வரி ஏய்ப்புக்களின்றி வரிக் கடப்பாடுகளைக் கௌரவிப்பதற்கு வரி செலுத்துவோரை ஊக்குவிக்கும். மேலும், அரசிறை நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையினை அறிமுகப்படுத்தியதன் மூலம் வரி செலுத்தவதில் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதனை அதிகரிப்பதற்கான தற்போதைய முயற்சிகள் நன்மை பயப்பதாக இருக்கும். நிறைவேற்றுவதற்கு மேலும் பல கணிசமான வேலைகள் காணப்படுகின்றமையினைப் பரிசீலனையில் கொள்கையில் முறைமையினை எளிமைப்படுத்துவதற்குத் தேவையான சீர்திருத்தங்களிலும் வியாபாரம் செய்தல் சுட்டெண்களை மேம்படுத்துவதிலும் அதிகாரிகள் ஈடுபட்டிருக்கின்றனர்.

### திறந்த வர்த்தகம்

தீர்வை அமைப்பின் சிக்கலான தன்மை, தற்போது காணப்படுகின்ற தீர்வையல்லாத் தடைகள் மற்றும் நாடுகளிடையேயான கட்டுப்பாடுகளுக்கு தீர்வு காண்பதில் காணப்படும் வினைத்திறன் போதுமானளவில் இல்லாமை என்பன உலகளாவிய போட்டித்தன்மை சுட்டெண்ணில் 141 நாடுகளிடையே 140ஆவது மிகக் குறைந்த திறந்த வர்த்தக நிலையினைப் பெறுவதற்கு வழிவகுத்தது. மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு வர்த்தக உடன்படிக்கைகளுக்கு மத்தியில் பிராந்திய மற்றும் இருபுடை வர்த்தக நாடுகளுக்குள் நுழைவதற்கு இலங்கையின் ஆர்வம் போதுமானதாக இல்லாமை உலகளாவிய வழங்கல் சங்கிலி வலையமைப்பினை இணைப்பதில் பிரதிகூலமான தன்மைகளை ஏற்படுத்தியிருக்கிறது. தற்பொழுது காணப்படும் புவிசார் அரசியல் கரிசனைகள் காரணமாக அனைத்து வெளிநாட்டு வர்த்தக உடன்படிக்கைகளும் மீளாய்வு செய்யப்பட்டு வருவதுடன் அரசாங்கம் பிராந்தியத்திலுள்ள நாடுகளுடன் பங்குதாரர்களாவதற்கான தனது ஈடுபாடுகளையும் காட்டி வருகிறது.

2

**தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பவியலைப் பின்பற்றுதல்**

இலங்கை, தொடர்பூட்டல் தொடர்பில் பிந்திய தொழில்நுட்பங்களைப் பின்பற்றி வருகிறது. எனினும், கைத்தொழில் சார்ந்த தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பத்தினைப் பின்பற்றுவது வரவேற்கத்தக்கதொரு மட்டத்தில் இல்லை என்பதுடன் அரச துறையின் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முறைமை தனியார் துறைக்கு நிகரானதாகவும் இல்லை. தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பத்தினைப் பின்பற்றுவதில் நாடு உலகளாவிய போட்டித்தன்மை சுட்டெண்ணில் 107ஆவது நிலையில் காணப்படுகின்றமைக்கு, அகன்றபட்டை, நுண்ணிழை தகவல் அனுப்பு முறைமை மற்றும் இணையத்தள தொழில்நுட்பவியல் என்பனவற்றின் பயன்பாடு ஒப்பீட்டு ரீதியில் குறைவாகக் காணப்படுவதே காரணமாகும். இலங்கை உலகத் தரத்திலான செயற்றிட்டங்களில் ஈடுபட்டிருக்கும் தொழில்சார் நிபுணர்களையும் நிறுவனங்களையும் உருவாக்கியிருக்கிறது. ஆகவே, உள்ளக முறையில் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முறைமையினை மேம்படுத்தியிருப்பது உள்நாட்டில் திறமைகளை வளர்த்தெடுப்பதற்கும் மூளைசாலிகள் வெளியேறுவதனைத் தடுப்பதனையும் சாத்தியமாக்கியிருக்கிறது. சிறப்பு தகவல் தொழில்நுட்பக் கைத்தொழில் வலயங்கள் (தகவல் தொழில்நுட்பப் பூக்காக்கள்) மற்றும் அரச - தனியார் பங்குடமை போன்ற ஏனைய இலக்கிடப்பட்ட செயற்றிட்டங்கள் என்பன தகவல் தொழில்நுட்பத்தினைப் பின்பற்றுகின்ற ஒட்டுமொத்த மட்டம் மேம்படுவதற்கு அண்மையில் பங்களித்திருப்பதுடன் இம்முயற்சிகளைப் பலப்படுத்துவது முதலீட்டாளர்களுக்கு நன்மையளிப்பதாக இருக்கும்.

**சட்டச் செய்முறைகள்**

சட்ட ரீதியாக ஒப்பந்தங்களை நடைமுறைக்கிடும் நியதிகளில், சட்ட ரீதியான விடயங்களுக்குத் தீர்வு காண்பதற்காக எடுக்கின்ற சராசரிக் காலம் 1,318 நாட்களாக இருப்பதன் காரணமாக வியாபாரம் செய்தல் சுட்டெண்ணில் இலங்கை 164ஆவது இடத்தினைப் பெற்றிருக்கின்றது. சட்ட ரீதியான செய்முறைகளை விரைவுபடுத்துவதற்காக தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு கடந்த அண்மைக் காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், இன்னமும் மேற்கொள்ளப்படுவதற்கு கணிசமான வேலைகள் இருக்கின்றன. காணிப் பதிவு செய்முறையில் காணப்படும் நெகிழ்ச்சியற்ற தன்மை மற்றும் காணி சொத்துடமையுடன் தொடர்பான சட்டங்கள் காலங்கடந்தவையாக இருப்பது என்பனவற்றின் காரணமாக ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கு காணிகளை விடுவிப்பது வெளிநாட்டவர்களுக்குச் சலிப்பூட்டும் ஒரு நடவடிக்கையாகக் காணப்படுகிறது. ஆகவே, முதலீட்டிற்கு வசதியளிக்கும் விதத்தில் சட்ட முறைமையினை மறுசீரமைக்க வேண்டியிருக்கிறது. அவசரமான வியாபார மற்றும் முதலீட்டாளர் வழக்குகளை விரைவாகத் தீர்ப்பதற்கு இணங்கத் தீர்வு மையங்களையும் மேலதிக வர்த்தக நீதிமன்றங்களையும் நிறுவுவதும் கூட முறைமையின் ஒட்டுமொத்த வினைத்திறனை மேம்படுத்துவதற்குப் பயன்மிக்கதாக இருக்கும்.

**உட்கட்டமைப்பு வலையமைப்பு**

உட்கட்டமைப்பு என்பது முதலீடுகளுக்கு வசதியளிக்கின்ற மற்றைய அனைத்து மூலங்களையும் ஒன்று சேர்க்கின்ற மிக இன்றியமையாததொரு மூலமாகும். சிறந்த வீதிப் போக்குவரத்து வலையமைப்பு மற்றும் ஏனைய நவீன பயணிகள் போக்குவரத்து தீர்வுகள் அதிநவீனத்துவம் வாய்ந்த கடல் துறைமுகங்கள் மற்றும் வானூர்தி நிலையங்கள் மற்றும் தாமதமும் தடங்கலும் இல்லாமல் வசதிகளை வழங்குதல் என்பன மூலவளங்களைக் கவர இன்றியமையாதனவாகும். கடந்த தசாப்த காலத்தில், இலங்கை உட்கட்டமைப்பு வலையமைப்பில் விரைந்த வளர்ச்சியை அடைந்துள்ளமையினால், உட்கட்டமைப்பு நியதிகளில் உலகளாவிய போட்டித்தன்மைச் சுட்டெண்ணில் 61ஆவது இடத்தினைப் பெற்றிருக்கிறது. எனினும், வீதி இணைப்புக்கள், போக்குவரத்துப் பணிகளின் வினைத்திறன் மற்றும் பொதுவசதிகளை அணுகும் தன்மை என்பன தொடர்பில் இன்னமும் கரிசனைகள் காணப்படவே செய்கின்றன. இக்கரிசனைகளைக் கட்டுப்படுத்துவது வாய்ப்புக்களையுடைய முதலீட்டாளர்களைக் கவர்வதற்குப் பங்களிக்கும்.

**முன்னோக்கிய பாதை**

ஈடிணையற்ற அமைவிடத்தின் அனுகூலத்துடன், நாட்டிற்குள் வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதற்காக இலங்கை அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டாளர் அரங்கம், தெருவோர விளம்பரங்கள் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கு உலகளாவிய முதலீட்டாளர் சமூகத்தினரிடமிருந்து பெறப்பட்ட சாதகமான பதிலிறுப்புக்களின் சான்றுகளின்படி, இலங்கை முதலீட்டுச் சேரிடமாக உள்ளார்ந்த வளங்களைக் கொண்டிருப்பது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. எனினும், மேலே ஆராயப்பட்ட பலவீனங்களின் காரணமாக அத்தகைய சாதகமான பதிலிறுப்புக்கள் போதுமான முதலீட்டு உட்பாய்ச்சல்களைத் தோற்றுவிக்கவில்லை. நாட்டின் வியாபாரம் செய்தல் நிலைமையினை சௌகரியப்படுத்துவதற்காக அரசாங்கம் ஏற்கனவே நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்துள்ளது. இது, உலகளாவிய தரமிடலில் இலங்கையின் நிலையினை உயர்த்த உதவும். முதலீட்டாளர்களுக்கு “ஒரே கூரையின் கீழ்” வசதிகளை வழங்குவது முதலீட்டாளர்களைக் கவரும் அரசின் முயற்சிக்கு துணையளிக்கும். அதேவேளை, கொழும்புத் துறைமுக நகர ஆணைக்குழுவினை நிறுவுவது உலகம் முழுவதிலுமுள்ள முதலீட்டு வாய்ப்புக்களுக்கு நிகராக வியாபாரம் செய்யும் சூழ்நிலையினை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் முதலீட்டு உட்பாய்ச்சல்களை உயர்த்துவதற்கான வாய்ப்புக்கள் புதிய உச்சமொன்றினை எட்டும். கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான சிக்கலான சவால்களை வெற்றிகொள்கின்ற வேளையில், உபாய முதலீட்டுப் பங்காளர்களுடன் நீடித்துநிலைத்திருக்கும் உறவுகளுக்குத் தேவையான முன்னேற்ற படிக்கற்களை நிறுவுவதற்கு மிகுந்த கவனத்துடன் அடையாளம் காணப்பட்ட பலவீனங்களைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சந்தைகளிலிருந்து வாடிக்கையாளர்களை விலகியிருக்கச் செய்த சுகாதாரத்துடன் தொடர்பான ஏனைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்பன வழிவகுத்ததுடன் போக்குவரத்து, உணவகங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள், ஆடைகள் மற்றும் காலணிகள் போன்ற தனியாள் நுகர்வுச் செலவினங்களில் சுருக்கத்தை ஏற்படுத்தின. எனினும், அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் பணிகள் என்ற ரீதியில், உணவு மற்றும் வெறியமற்ற குடிபானங்கள், வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள், சுகாதாரம் மற்றும் தொடர்பூட்டல் வகைகள் நோய்த்தொற்றிற்கு மத்தியிலும் கூட இவ்வாண்டுப்பகுதியில் விரிவடைந்தன.

**நடைமுறை விலைகளில் அரச நுகர்வுச் செலவினம் 2019இன் 8.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் உயர் வீதமொன்றான 9.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** அரசாங்கத்தின் தனிப்பட்ட நுகர்வுச் செலவினத்தில் 2019இன் 28.0 சதவீதம் கொண்ட உயர்ந்த வளர்ச்சிக்கு மேலதிகமாக 2020இல் 17.8 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க விரிவு அவதானிக்கப்பட்டது. இது சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற வகைகளை உள்ளடக்கியிருந்ததுடன் அரச நுகர்வுச் செலவினத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் பங்களித்தது. மேலும், பாதுகாப்பு, பொதுப் பணிகள் மற்றும் வீட்டுத்துறையினருக்கு நன்மையளிக்கும் சமூகப் பாதுகாப்பு போன்ற பணிகள் மீதான பொதுவான அரச செலவினத்தினை உள்ளடக்கிய முக்கிய அரச நுகர்வுச் செலவின வகையின் ஒன்றுசேர்ந்து நுகர்வுச் செலவினம் 2019இன் 0.2 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 5.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. கொவிட்-19 நோய்த்தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின்

வரைபடம் 2.10
முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளின் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (அ) (ஐ.அ.டொ.மில்லியன்)




(அ) கடன்கள் உள்ளடங்கலாக

*மூலம்* : இலங்கை முதலீட்டுச் சபை

ஈடுபாடு, குறிப்பாக சுகாதாரம், பொதுமக்கள் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பு ஆகிய துறைகளில் அரச நுகர்வுச் செலவினம் அதிகரிப்புக்கு பங்களித்தது.

## முதலீடு

**உள்நாட்டு ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் நோய்த்தொற்றிலிருந்து மீண்டு கொள்வதற்கான கால வரையறை பற்றிய நிச்சயமற்ற தன்மையினால் முக்கியமாகப் பாதிக்கப்பட்டு, நடைமுறைச் சந்தை விலைகளில் முதலீட்டுச் செலவினம் 2019இன் 5.5 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2020இல் 6.2 சதவீதத்தினால் மேலும் சுருக்கமடைந்தது.** இவ் வீழ்ச்சிக்கு மொத்த நிலையான மூலதன உருவாக்கம் முன்னைய ஆண்டின் 8.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 6.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கமடைந்தமையே தூண்டுதலாக அமைந்தது. இதன்படி, கட்டடவாக்கம்,

அட்டவணை 2.11
இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சு என்பவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளிலுள்ள முதலீடும் தொழில் நிலையும்

| | செயற்றிட்ட எண்ணிக்கை | | மதிப்பிடப்பட்ட முதலீடுகள் (ரூ. மில்லியன்) | | | | | | மதிப்பிடப்பட்ட தொழிலாளர் (எண்ணிக்கை) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2019 (அ) | 2020 (ஆ) | 2019 (அ) | | | 2020 (ஆ) | | | 2019 (அ) | 2020 (ஆ) |
| | | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | | |
| முதலீட்டுச்சபை (1978ம் ஆண்டு 4ம் இல. சட்டத்தின் கீழ்) | | | | | | | | | | |
| ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 160 | 155 | 4,586,993 | 145,675 | 4,732,667 | 283,800 | 122,527 | 406.327 | 32,654 | 14,221 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 150 | 154 | 4,583,193 | 145,444 | 4,728,638 | 282,427 | 122,527 | 404,954 | 32,348 | 14,101 |
| பிரிவு 16இன் கீழ் | 10 | 1 | 3,800 | 230 | 4,030 | 1,373 | - | 1,373 | 306 | 120 |
| பிரிவு 17இன் கீழ் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் (இ) | 107 | 122 | 4,518,594 | 118,278 | 4,636,872 | 131,342 | 165,858 | 297,201 | 24,485 | 15,856 |
| பிரிவு 17இன் கீழ் அடையப்பட்ட முதலீடுகள் (ஈ)(உ) | 2,004 | 1,979 | 2,223,472 | 1,608,440 | 3,831,912 | 2,224,159 | 1,738,639 | 3,962,798 | 521,428 | வி.கி |
| வர்த்தகத் தொழிற்பாடுகளின் செயற்றிட்டங்கள் (ஈ) | 2,610 | 2,651 | 549,087 | 851,050 | 1,400,137 | 606,527 | 975,024 | 1,581,551 | 425,154 | 441,936 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 2,061 | 2,116 | 523,067 | 842,023 | 1,365,090 | 580,734 | 966,286 | 1,547,021 | 395,760 | 413,280 |
| பிரிவு 16இன் கீழ் | 549 | 535 | 26,020 | 9,027 | 35,048 | 25,793 | 8,738 | 34,530 | 29,394 | 28,656 |
| கைத்தொழில் அமைச்சு | | | | | | | | | | |
| பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் (ஈ) | 2,876 | 3,020 | - | - | 207,996 | - | - | 208,934 | வி.கி | வி.கி |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) விரிவாக்கப்பட்ட செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக
(ஈ) ஆண்டின் இறுதியில் ஒன்று சேர்ந்த தொகை
(உ) ஒன்றுசேர்ந்த உண்மையான முதலீடுகளின் பெறுமதி வழங்கப்பட்டுள்ளது

*மூலங்கள்:* இலங்கை முதலீட்டுச் சபை
கைத்தொழில் அமைச்சு

குறிப்பு : முதலீட்டுச் சபையின் 17ஆம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட மற்றும் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் முதலீட்டு மட்டம் அல்லது வேறு ஏதேனும் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பூர்த்திக்குட்பட்டு சுங்கம் மற்றும் செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் இருந்து விலக்களிக்கப்பட்டன.

போக்குவரத்துச் சாதனங்கள் மற்றும் பொறிகள், மற்றும் கருவிகள் போன்ற மொத்த நிலையான மூலதனவாக்கத்தின் முக்கிய வகைகள் 2019இல் பதிவுசெய்யப்பட்ட நேர்க்கணிய பங்களிப்பிற்கு மாறாக 2020இல் சுருக்கத்தினைப் பதிவுசெய்தன. முதலீட்டின் முக்கிய வகையான, கட்டடவாக்க நடவடிக்கைககள் நோய்த்தொற்று தொடர்பான தடங்கல்களின் காரணமாக பின்னடைவிற்குட்பட்டு முதலீட்டு வளர்ச்சியைக் கடுமையாக பாதித்தது. எனினும், தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் புலமைச்சொத்து உற்பத்திகள் என்பவற்றின் மீதான முதலீட்டுச் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மேலும், இருப்புக்களில் மாற்றங்கள் இவ்வாண்டில் குறைவடைந்தன.

**முதலீட்டுச் சபை கம்பனிகளுக்கான கடன்கள் உட்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2019இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,188.7 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இல் ஐ.அ.டொலர் 687.0 மில்லியனுக்கு[5] 42.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் காணப்பட்ட சுருக்கம் அனைத்துத் துறைகளிலும் காணப்பட்டது. அதேநேரம், 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16ஆம் மற்றும் 17ஆம் பிரிவுகளின் கீழ் 2020இல் முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்தப் பெறுமதி ரூ.406.3 பில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் இது 2019 உடன் ஒப்பிடுகையில் 91.4 சதவீதம் கொண்ட சுருக்கத்தினை எடுத்துக்காட்டியது. முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16ஆம் மற்றும் 17ஆம் பிரிவுகளின் கீழ், வர்த்தகத் தொழிற்பாடுகளைத் தொடங்கிய செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட முதலீட்டுப் பெறுமதி முறையே ரூ.1,547.0 பில்லியனாகவும் ரூ.34.5 பில்லியனாகவும் விளங்கி முன்னைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 13.0 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த வீழ்ச்சியைப் பிரதிபலித்தன.

5 இது முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுக்கான கடன்கள் உட்பட்ட பெறுகைகளை உள்ளடக்குவதுடன் முதலீட்டுச் சபையல்லா கம்பனிகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் உள்ளடக்கப்படுவதன் காரணத்தால் அத்தியாயம் 5இல் காட்டப்பட்டுள்ள மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம். அதற்கிணங்க, 2020இல் மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஐ.அ.டொலர் 670 மில்லியனாகும்.

அட்டவணை 2.12

நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும் (அ)(ஆ)

| விடயம் | சதவீதப் பங்கு % | | சதவீத வளர்ச்சி % | |
|---|---|---|---|---|
| | 2019 (இ) | 2020 | 2019 (இ) | 2020 |
| **அ. மூலவளங்கள்** | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 77.4 | 81.3 | 5.1 | -0.3 |
| பொருட்கள் மற்றும் பணிகளினது இறக்குமதிகள் | 22.6 | 18.7 | 0.9 | -21.8 |
| **மொத்தம்** | 100.0 | 100.0 | 4.1 | -5.1 |
| **ஆ. பயன்பாடு** | | | | |
| நுகர்வு | 61.3 | 66.0 | 7.4 | 2.1 |
| மொத்த நிலையான மூலதனவாக்கம் | 21.0 | 20.7 | 8.1 | -6.4 |
| பெறுமதியானவற்றின் விற்பனையைக் கழித்த கையேற்புக்கள் மற்றும் இருப்புக்களின் மாற்றம் | -0.2 | -0.2 | -108.0 | -22.2 |
| பொருட்கள் பணிகளினது ஏற்றுமதி | 17.9 | 13.5 | 5.5 | -28.5 |
| **மொத்தம்** | 100.0 | 100.0 | 4.1 | -5.1 |

(அ) தரவானது மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## மூலவளங்களின் கிடைப்பனவு மற்றும் பயன்பாடு

**நடைமுறை விலைகளில் பொருளாதார மூலவளங்களின் கிடைப்பனவு 2019இல் பதிவுசெய்யப்பட்ட 4.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 5.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.** இது தொடர்பில், உள்நாட்டு மூலவளங்களாகவும் அதேபோன்று இறக்குமதியால் பிரதிநிதித்துவப்படுத்தும் வெளிநாட்டு மூலவளங்களாகவுமுள்ள மொ.உ.உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020இல் சுருக்கமடைந்தது. இதேபோன்று, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலவளங்கள் இரண்டும் நிலையான விலைகளிலும் சுருக்கமடைந்தன. நடைமுறை விலைகளில், கிடைக்கத்தக்க மூலவளங்கள் பயன்படுத்தப்படுவதனைப் பரிசீலனையில் கொள்கையில், இது 66.0 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் பெரும்பாலான மூலவளங்கள் நுகர்வு நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளன. எனினும், 2020இல் 20.5 சதவீதமாகவிருந்த முதலீட்டு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட மூலவளங்களின் பங்கில் சிறிதளவு வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்டது. மேலும், ஏற்றுமதி நோக்கங்களுக்காகப்

வரைபடம் 2.11

2020இல் பொருளாதாரம் (நடைமுறைச் சந்தை விலைகளில்) (அ)




(அ) ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 அடியாண்டு)

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.13
நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்பு (அ)(ஆ)

| விடயம் | ரூ.மில்லியன் | | வளர்ச்சி (%) | | மொ.உ.உ.இன் சதவீதமாக (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2019 (இ) | 2020 | 2019 (இ) | 2020 | 2019 (இ) | 2020 |
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 15,012,953 | 14,972,995 | 5.1 | -0.3 | 100.0 | 100.0 |
| 2. நுகர்வுச் செலவினம் | 11,902,168 | 12,146,234 | 7.4 | 2.1 | 79.3 | 81.1 |
| தனியார் | 10,485,180 | 10,589,745 | 7.3 | 1.0 | 69.8 | 70.7 |
| அரசு | 1,416,989 | 1,556,489 | 8.1 | 9.8 | 9.4 | 10.4 |
| 3. முதலீடுகள் | 4,030,195 | 3,778,482 | -5.5 | -6.2 | 26.8 | 25.2 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 3,110,785 | 2,826,761 | -2.9 | -9.1 | 20.7 | 18.9 |
| தனியார் | 3,001,308 | 3,238,268 | 18.2 | 7.9 | 20.0 | 21.6 |
| அரசு (ஈ) | -96,162 | -169,740 | -34.1 | -76.5 | -0.6 | -1.1 |
| 5. உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி | -919,410 | -951,721 | 13.4 | -3.5 | -6.1 | -6.4 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானம் (உ) | -432,250 | -405,184 | -10.9 | 6.3 | -2.9 | -2.7 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் (உ) | 1,030,690 | 1,154,429 | 3.1 | 12.0 | 6.9 | 7.7 |
| 8. தேசிய சேமிப்புக்கள் | 3,709,225 | 3,576,005 | -2.7 | -3.6 | 24.7 | 23.9 |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது
(ஈ) நிதி அமைச்சிலிருந்து பெறப்பட்ட தரவுகளின்படி, அரசிறை, செலவினம் மற்றும் இறை மீதிகள் கொடுப்பனவு நிலுவைகளுக்கான சீராக்கங்களை உள்ளடக்குகின்றது
(உ) சென்மதி நிலுவை மதிப்பீடுகளுடனான வேறுபாடுகளிற்கு தொகுத்தலில் ஏற்படுகின்ற காலதாமதமே காரணமாகும்

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
நிதி அமைச்சு

2

பயன்படுத்தப்பட்ட மூலவளங்களின் பங்கும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, நிலையான விலைகளில் மூலவளங்களின் பயன்பாடு சுருக்கமடைந்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் நுகர்வு மற்றும் முதலீடுகளில் ஏற்பட்ட சுருக்கமே முக்கிய காரணமாகும்.

## சேமிப்புக்கள்

**பொருளாதாரத்தின் உள்நாட்டு மற்றும் தேசிய சேமிப்புக்கள் இரண்டும் நடைமுறை விலைகளில் 2020இல் மேலும் சுருக்கமடைந்தன.** 2020இல் உள்நாட்டுச் சேமிப்புக்கள் 9.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு கொவிட்-19 நோய்த்தொற்றின் காரணமாக வரிகளில் ஏற்பட்ட குறைப்பு மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றின் விளைவாக அரசிறை குறைவடைந்தமையின் முக்கிய காரணமாக அரசின் குறைச்சேமிப்புக்கள் கணிசமானளவிற்கு உயர்வடைந்தமையும் தனியாள் சேமிப்புக்களின் வளர்ச்சி மெதுவடைந்தமையும் பங்களித்தன. இதன் விளைவாக மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2019இன் 20.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2020இல் 18.9 சதவீதத்தினால் குறைவடைந்தன. அதேவேளை, தேறிய முதலாந்தர வருமானமும் அதேபோன்று உலகின் ஏனைய பகுதிகளிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்களும் ரூபா நியதிகளில் இவ்வாண்டுப்பகுதியில் வளர்ச்சியைப் பதிவுசெய்த போதும், தேசிய சேமிப்புக்கள் 3.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு உள்நாட்டுச் சேமிப்புக்கள் சுருக்கமடைந்தமையே பெருமளவிற்குக் காரணமாகும். இதன் விளைவாக, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்புக்கள் 2020இல் 23.9 சதவீதத்திற்குக் குறைவடைந்தன. மேலும், தேசிய சேமிப்புக்களில் சுருக்கம் காணப்பட்ட போதும் தேசிய சேமிப்பு - முதலீட்டு இடைவெளி 2019இன் மொ.உ.உற்பத்தியின் 2.1 சதவீதத்திலிருந்து 2020இல் மொ.உ.உற்பத்தியின் 1.4 சதவீதத்திற்கு ஒடுக்கமுற்றமைக்கு முதலீட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியே காரணமாகும்.

## 2.6 வருமானம்

**இவ்வாண்டுப்பகுதியில், மொத்த தொழிற்பாட்டு மிகை பொருளாதாரத்தின் பாரிய வருமானக் கூறாகத் தொடர்ந்தும் விளங்கியதுடன், அதனைத் தொடர்ந்து ஊழியர் இழப்பீடுகளும் உற்பத்தி மீதான உதவுதொகை கழித்த வரிகளும் காணப்பட்டன.** 2020இல் மொத்த தொழிற்பாட்டு மிகை நடைமுறை விலைகளில் 0.7 சதவீதத்தினால் சிறிதளவில் வளர்ச்சியடைந்து மொ.உ.உற்பத்தியில் 63.4 சதவீதத்திற்கு வகைகூறியது. இம்மெதுவான வளர்ச்சிக்கு இவ்வாண்டுப்பகுதியில் தேறிய தொழிற்பாட்டு மிகையில் காணப்பட்ட மெதுவான போக்கே முக்கிய காரணமாகும். வருமானத்தின் ஏனைய முக்கிய மூலங்களைப் பொறுத்தவரையில், ஊழியர்களின் இழப்பீடு வளர்ச்சியைப் பதிவுசெய்த அதேவேளையில் உற்பத்திகள் மீதான உதவுதொகையினைக் கழித்த வரிகள் இவ்வாண்டுப்பகுதியில் சுருக்கத்தினைப் பதிவுசெய்தன. நிறுவன ரீதியான துறை வகைப்படுத்தலை பரிசீலனையில் கொள்கையில், வருமானத்திற்கான உயர்ந்த பங்களிப்பு வீட்டுத்துறையினராலும் இலாபமீட்டாத நிறுவனங்களில் பணியாற்றுகின்ற வீட்டுத் துறையினராலும் உருவாக்கப்பட்ட

அட்டவணை 2.14
நடைமுறைச் சந்தை விலைகளில் நிறுவனத்துறைகளின் வருமான கூறுகள் (அ)(ஆ)

| விடயம் | சதவீதப்பங்கு (%) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2019 (இ) | | | | 2020 | | | |
| | நிதியல்லா கூட்டுத் தாபனம் | நிதிக் கூட்டுத் தாபனம் | பொது அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | நிதியல்லா கூட்டுத் தாபனம் | நிதிக் கூட்டுத் தாபனம் | மத்திய அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் |
| ஊழியர்களின் நட்டஈடு | 34.2 | 6.6 | 27.9 | 31.3 | 32.5 | 7.9 | 30.4 | 29.2 |
| மொத்த தொழிற்பாட்டு மிகை | 35.5 | 4.9 | 1.9 | 57.6 | 34.7 | 5.7 | 1.5 | 58.1 |
| தேறிய தொழிற்பாட்டு மிகை | 39.0 | 5.6 | 0.6 | 54.8 | 37.1 | 6.4 | 0.7 | 55.2 |
| கலப்பு வருமானம் | - | - | - | 100.0 | - | - | - | 100.0 |
| நிலையான மூலதனத்தின் நுகர்வு | 41.4 | 4.0 | 12.5 | 42.1 | 43.3 | 5.5 | 8.7 | 42.5 |
| உற்பத்தி மீதான மானியங்களை கழித்த ஏனைய வரிகள் | 83.7 | 15.8 | - | 0.4 | 85.5 | 14.2 | - | 0.3 |
| அடிப்படை விலைகளில் பெறுமதி சேர்ப்பு | 35.3 | 5.5 | 10.2 | 48.9 | 34.1 | 6.4 | 10.9 | 48.6 |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வேளையில் அவற்றைத் தொடர்ந்து நிதியியல்லாக் கூட்டுத்தாபனங்கள், பொது அரசாங்கம் மற்றும் நிதியியல் கூட்டுத்தாபனங்கள் என்பனவும் அவற்றிற்குத் தொடர்ந்து பங்களித்தன.

## 2.7 குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை

### குடித்தொகை

**பதிவாளர் நாயகத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட நடுவாண்டுக் குடித்தொகை மதிப்பீடுகளின்படி 2020இல் இலங்கையின் நடுவாண்டுக் குடித்தொகை 21.919 மில்லியன் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.** இதன்படி, குடித்தொகை வளர்ச்சி வீதம் 2019இல் பதிவுசெய்யப்பட்ட 0.6 சதவீதத்திலிருந்து 2020இல் 0.5 சதவீதத்திற்கு மேலும் மிதமடைந்தது. குடித்தொகை வளர்ச்சிக்கான உயர்ந்த பங்களிப்பு முறையே கிழக்கு மாகாணத்திலிருந்தும் மேல் மாகாணத்திலிருந்தும் கிடைத்தது. குடித்தொகை வளர்ச்சிக்கான குறைந்த பங்களிப்பு வட மாகாணத்திலிருந்தும் வடமத்திய மாகாணத்திலிருந்தும் கிடைத்தது. அவதானிக்கப்பட்ட அதேபோக்கினைத் தொடர்கின்ற விதத்தில் மேல் மாகாணம் 2020இல் நடுவாண்டுக் குடித்தொகையின் 28.1 சதவீதத்திற்கு வகைகூறி உயர்ந்த பங்கினைக் கொண்டிருந்த அதேவேளையில் அதனைத் தொடர்ந்து மத்திய மற்றும் தென் மாகாணங்கள் நடுவாண்டுக் குடித்தொகையில் முறையே 12.7 சதவீதத்திற்கும் 12.2 சதவீதத்திற்கும் வகைகூறின. அதேவேளை, வட மாகாணம், நடுவாண்டுக் குடித்தொகையில் 5.3 சதவீதம் கொண்ட மிகக் குறைந்த பங்கிற்கு தொடர்ந்தும் வகைகூறியது.

### தொழிற்படை

**பொருளாதார ரீதியாக தொழில்புரிகின்ற குடித்தொகையான தொழிற்படை[6] 2019இல் பதிவுசெய்யப்பட்ட 8,592 மில்லியனிலிருந்து 2020இல் 8,467 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.** இதற்கமைய, பொருளாதார ரீதியாக தொழில்புரியாத குடித்தொகை 2019இல் 7.832 மில்லியனிலிருந்து 2020இல் 8.273 மில்லியனுக்கு அதிகரித்தது. வேலைக்கு சமூகமளிக்காமையினால் தொழில் இழந்தமை மற்றும் தீவிரமாக தொழிலைத் தேடிக் கொண்டிருந்தமை என்பன தொழில்புரியாத குடித்தொகையில்

அட்டவணை 2.15
மாகாண அடிப்படையிலான குடித்தொகை மற்றும் அடர்த்தி (அ)(ஆ)

| மாகாணம் | 2019 | | 2020 | |
|---|---|---|---|---|
| | குடித்தொகை '000 நபர்கள் | அடர்த்தி | குடித்தொகை '000 நபர்கள் | அடர்த்தி |
| மேல் | 6,149 | 1,711 | 6,165 | 1,716 |
| மத்திய | 2,766 | 496 | 2,781 | 499 |
| தென் | 2,654 | 493 | 2,669 | 496 |
| வடக்கு | 1,143 | 138 | 1,152 | 139 |
| கிழக்கு | 1,729 | 185 | 1,746 | 187 |
| வடமேல் | 2,551 | 340 | 2,563 | 341 |
| வடமத்திய | 1,377 | 141 | 1,386 | 142 |
| ஊவா | 1,376 | 165 | 1,387 | 166 |
| சப்ரகமுவ | 2,058 | 418 | 2,070 | 421 |
| **மொத்தம்** | **21,803** | **348** | **21,919** | **350** |

(அ) தற்காலிகமானது
(ஆ) நடுவாண்டுக் குடித்தொகையானது 2012ஆம் ஆண்டின் குடித்தொகை மதிப்பீடு மற்றும் வீடமைப்பு மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது

*மூலம்:* பதிவாளர் நாயகம் திணைக்களம்

6 ஆய்விற்குட்படுத்தப்பட்ட ஒரு வாரக் காலப்பகுதியில் தொழிலிலுள்ள அல்லது தொழிலற்ற (15 வயதும் அதற்கு மேலும்) ஆட்களை குறிப்பிடுவதே தற்போதைய பொருளாதாரத்தில் செயற்பாட்டில் உள்ள குடித்தொகை ஆகும்.

அட்டவணை 2.16
குடும்ப அலகுகளின் குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழிற்படை பங்கேற்பு (அ)

| விடயம் | 2019 | 2020 (ஆ) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | கா1 | கா2 | கா3 | கா4 | ஆண்டு(இ) |
| **குடும்ப அலகுகளின் எண்ணிக்கை '000 ஆட்கள்** | **16,424** | **16,690** | **16,793** | **16,562** | **16,913** | **16,739** |
| **தொழிற்படை '000 ஆட்கள்** | **8,592** | **8,504** | **8,435** | **8,454** | **8,473** | **8,467** |
| தொழிலுள்ளோர் | 8,181 | 8,020 | 7,977 | 7,968 | 8,031 | 7,999 |
| தொழிலற்றோர் | 411 | 483 | 458 | 487 | 442 | 468 |
| **தொழிற்படை பங்கேற்பு வீதம் (ஈ)** | **52.3** | **51.0** | **50.2** | **51.0** | **50.1** | **50.6** |
| ஆண் | 73.0 | 72.4 | 71.7 | 72.5 | 70.9 | 71.9 |
| பெண் | 34.5 | 32.5 | 31.6 | 32.4 | 31.7 | 32.1 |

(அ) 15 வயதிற்கும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் எண்ணிக்கை
(ஆ) தற்காலிகமானது
(இ) 2020இன் நான்கு காலாண்டுகளினதும் சராசரி ஆகும்
(ஈ) குடும்ப அலகுகளின் குடித்தொகையில் தொழிற்படையின் சதவீதம்

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

2

இக்குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட வழிவகுத்திருக்கலாம். கொவிட்-19 நோய்த்தொற்று பரவியமைக்கிடையில் நிலவிய பயணங்களைக் கட்டுப்படுத்துகின்ற கட்டுப்பாட்டு வழிமுறைகள், தொழில் போதுமானளவில் கிடைக்காமை காரணமாக ஏற்பட்ட ஊக்கக் குறைவுகள மற்றும் நலம் தொடர்பான இடர்நேர்வுகள் என்பன தொழில்புரிவதற்கான ஈடுபாடுகள் குறைவடைவதற்கான காரணங்களாக இருந்திருக்கலாம்.

**தொழிற்படையில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் தொழில்புரியாத குடித்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில், வீட்டுத்துறை குடித்தொகைக்கான தொழிற்படையின் விகிதமாக விளங்கும் தொழிற்படை பங்கேற்பு வீதம் 2019இன் 52.3 சதவீதத்திலிருந்து 2020இல் 50.6 சதவீதத்திற்கு குறைவடைந்தது.** இதன்படி, ஆண் மற்றும் பெண் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் 2019இன் முறையே 73.0 சதவீதம் மற்றும் 34.5 சதவீதத்திலிருந்து 2020இல் முறையே 71.9 சதவீதத்திற்கும் 32.1 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, நோய்த்தொற்றுக் காலம் தொழிற்படையில் பால் சமத்துவமின்மையினை மேலும் தீவிரப்படுத்தியதுடன் தொழிற்படை பங்கேற்பு வீதத்தின் பால் இடைவெளியினை 2019இன் 38.5 சதவீதத்திலிருந்து 2020இல் 39.8 சதவீதத்திற்கு மேலும் அதிகரித்தது.

## தொழில்நிலை

**தொழில்புரியும் குடித்தொகை[7] 2019இன் 8.181 மில்லியனிலிருந்து 2020இல் 7.999 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.** தொழில்நிலையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு கைத்தொழில் மற்றும் பணிகள் தொழில்நிலையில், குறிப்பாக, தற்காலிக மற்றும் ஒப்பந்த வகைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிகள் காரணமாகும். மாறாக, வேளாண்மை நடவடிக்கைகளில் தொழில்நிலை வளர்ச்சி கண்டதற்கு இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் நோய்த்தொற்றின் காரணமாக இடையூறுகளுக்குள்ளாகின்ற உலகளாவிய உணவு வழங்கல் சங்கிலி என்பனவற்றிற்கு மத்தியில் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்ற நோக்குடன் முடக்கல் காலப்பகுதியிலும் வேளாண்மைத் துறைக்கு வழங்கப்பட்ட விதிவிலக்கல்கள் காரணமாயிருக்கலாம். இதற்கமைய, வேளாண்மை தொழில்நிலையின் பங்கு 2019இன் 25.3 சதவீதத்திலிருந்து 2020இல் 27.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை, மிகப்பெரும் தொழில்வாய்ப்பினை உருவாக்குகின்ற கைத்தொழில் மற்றும் பணி நடவடிக்கைகளிலுள்ள தொழில்நிலையின் பங்கு 2019இன் முறையே 27.6 சதவீதம் மற்றும் 47.1 சதவீதத்திலிருந்து 2020இல் முறையே 26.9 சதவீதத்திற்கும் 46.0 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது. இருப்பினும்கூட, உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் தோன்றிய புதிய கேள்விகளுடன் உருவான தனியாள் பாதுகாப்புச் சாதனங்களைத் தயாரிப்பவர்கள் மற்றும் விநியோக வேலையாட்கள் போன்ற சில புதிய தொழில்வாய்ப்புக்களும் உருவாகின. அதேவேளை, அனைத்து வகைகளிலும் அதாவது அரச துறை, தனியார் துறை தொழில்தருநர்கள், சொந்தமாக தொழில்புரிவோர் மற்றும் பங்களிக்கின்ற குடும்ப தொழிலாளர்கள் வகைகளிலுமுள்ள தொழில்நிலை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020ஆம் ஆண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. இலங்கையில் தனியார் துறை தொடர்ந்தும் முக்கிய தொழில்நிலை

அட்டவணை 2.17
அரசதுறை தொழில்நிலை

| துறை | 2019 (அ) | 2020 (ஆ) | சதவீத மாற்றம் 2020/2019 (ஆ) |
|---|---|---|---|
| அரசு (இ) | 1,221,735 | 1,290,370 | 5.6 |
| பகுதியளவான அரசு (ஈ) | 245,273 | 237,951 | -3.0 |
| **அரசதுறை** | **1,467,008** | **1,528,321** | **4.2** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) மத்திய அரசாங்கம், உள்ளூராட்சி மன்றம் மற்றும் மாகாண சபைகள்
(ஈ) அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள் மற்றும் அரச அதிகார சபைகள்

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

7 தொடர்பான காலப்பகுதியில் குறைந்தபட்சம் ஒரு மணித்தியாலமாவது கொடுப்பனவு பெறும் ஊழியராக, தொழில்தருநராக, சொந்தத் தொழில்புரிபவராக அல்லது பங்களிக்கின்ற குடும்ப உறுப்பினராகவுள்ள பணியாற்றும் ஆட்கள் தொழில்புரிபவர் எனக் குறிப்பிடப்படுவர். இது தொழிலிலுள்ள ஆட்களை உள்ளடக்குகிறது எனினும் தொடர்பான காலப்பகுதியில் தொழில்புரியாத ஆட்களை உள்ளடக்காது.

2

### சிறப்புக்குறிப்பு 3

### கொவிட் -19 உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட வழமையான பணிகளை வீட்டிலிருந்து மேற்கொள்வதனை நோக்கிய மாறுதல்

**அறிமுகம்**

கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றானது முன்னெப்பொழுதும் இல்லாத தாக்கத்தினை தொழிற்சந்தையில் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, வழமையான வேலைச்சூழலில் பணிகளின் செயலாற்றத்தினைத் முடக்கிய உலகளாவிய நோய்த்தொற்றுப் பரவலுடன் போராடுவதற்காக முன்னெடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை மற்றும் கட்டுப்படுத்தல் நடவடிக்கைகள் ஆழமாக வேரூன்றியிருந்த வழமையான பணிகள் மற்றும் அதன் கலாசாரங்களை உலகளாவிய நோய்த்தொற்று பாதித்தது. அதன்படி, வீட்டிலிருந்து பணியாற்றல், நெகிழ்வான வேலை மணித்தியாலங்கள் மற்றும் சுழற்சி முறைமை என்பன பரந்தளவில் பின்பற்றப்பட்டன. கைத்தொழிலின் சில பிரிவுகளிலும் தொழில்களிலும் வீட்டிலிருந்து பணியாற்றல் என்பது ஏற்கனவே பின்பற்றப்பட்டுள்ள போதிலும், உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் வியாபாரத் தொடர்ச்சிக்கான தற்காலிக நடவடிக்கையாக இது பெருமளவில் பிரபல்யமடைந்தது. பல நிறுவனங்களுக்கு அதன் இருப்பிடம், அருகாமை மற்றும் பணியிடத் திட்டமிடல் என்பவற்றின் முக்கியத்துவம் தொடர்பில் மீண்டும் சிந்திப்பதற்கு முன்னொருபோதுமில்லாத வாய்ப்பினை உலகளாவிய நோய்த்தொற்று ஏற்படுத்தியுள்ளது. அதேநேரம், வீட்டிலிருந்து பணியாற்றுதல் பல சவால்களைக் கொண்டுள்ளதுடன், வீட்டிலிருந்து பணியாற்றும் உபாயத்தின் பரந்தப்பட்ட அடிப்படையிலான பின்பற்றுகையின் வெற்றியானது பகிரப்பட்ட பொறுப்பு, அர்ப்பணிப்பு மற்றும் தொழில் வழங்குநருக்கும் ஊழியருக்கும் இடையிலான பரஸ்பர புரிந்துணர்வு உள்ளடங்கலான பல காரணிகளில் தங்கியுள்ளது.

**வீட்டிலிருந்து பணியாற்றுதலில் காணப்படும் நன்மைகள், தீமைகள் மற்றும் சவால்கள்**

வீட்டிலிருந்து பணியாற்றுதல் தொழில் வழங்குநருக்கும், ஊழியருக்கும் அதிகளவான நன்மைகளை வழங்குகிறது. ஊழியரின் பார்வையில், பயண நேரம், மற்றும் தொடர்புடைய செலவுகள் குறைக்கப்பட்டமை, இடம், வேலை நேரம் என்பவற்றின் சிறந்த நெகிழ்வுத்தன்மை, குறைந்த கவனச்சிதறல்கள் மற்றும் சிறந்த தொழில் வாழ்க்கைச் சமநிலை என்பன அவற்றால் பிரதான நன்மைகளாகும். பயன்பாட்டுக் கிரயங்கள் மற்றும் பணியிடத்துடன் தொடர்புடைய தொழிற்பாட்டுச் செலவுகள், மேலதிக நேரம் மற்றும் போக்குவரத்துக் கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய ஊழியச் செலவுகள் குறைந்தமை, மேம்பட்ட உற்பத்தித்திறன், அர்ப்பணிப்பு மற்றும் மேம்பட்ட உற்பத்தித்திறன், அர்ப்பணிப்பு மற்றும் மற்றும் குறைக்கப்பட்ட புரள்வு என்பன தொழில் வழங்குநர் திருப்தி, மற்றும் குறைக்கப்பட்ட புரள்வு என்பன தொழில் வழங்குநரின் பார்வையிலிருந்து நோக்குகையிலுள்ள பிரதான நன்மைகளாகும். மேலும், மிக நீண்டகாலமாக குறைந்த மட்டத்தில் மந்தமாகக் காணப்பட்ட இலங்கையின் பெண் தொழிற்படையின் பங்கேற்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கையொன்றாக வீட்டிலிருந்து பணியாற்றலானது தொடர்ந்து முன்னிலைப்படுத்தப்படுகிறது. வீட்டிலிருந்து பணியாற்றல் என்பது நாட்டில் கிடைக்கப்பெறுகின்ற வளங்களை பெருக்குவதும் இதனூடாக நீண்டகாலத்தில் பொருளாதார வளர்ச்சியினை ஊக்கவிக்கின்ற பொறிமுறையொன்றாகும். குறைவான வாகன நடமாட்டத்தின் விளைவாக குறைக்கப்பட்ட காபன் வெளியேற்றம், குறைந்த இயக்கங்களின் விளைவாக போக்குவரத்து நெரிசல் மற்றும் எண்ணெய் இறக்குமதிகள் குறைவடைந்தமை மற்றும் குறைவடைந்த நகரமயமாக்கலினூடாக சுற்றாடல் மீதான சாதகமான விளைவுகள் போன்றன தேசிய மட்டத்தில் அடையப்பெற்ற அத்தகைய செயற்பாடுகளின் மேலதிகமான நன்மைகளாகும்.

எனினும், வீட்டிலிருந்து பணியாற்றலை நடைமுறைப்படுத்துகையில் அதில் சில மட்டுப்பாடுகளும் சவால்களும் ஏற்படுகின்றன. முதலில், அனைத்து கைத்தொழில்கள், தொழில் வகைகள், வேலைத் தொழிற்பாடுகள் என்பன வீட்டிலிருந்து பணியாற்றுவதன் கீழ் சாத்தியமானதாக அமைவதில்லை. இக் காலப்பகுதியில், மின்னஞ்சல் தொடர்பாடல் முறைமைப்படுத்தப்பட்டிருப்பினும், அனைத்து காகிதப்பணிகளும் நடைமுறைகளும் இன்னும் இலத்திரனியல் மயமாக்கப்படவில்லை, குறிப்பாக பொதுத் துறைகளில், வேலை வளாகம் தவிர்ந்த இடங்களில் வேலைகளை முன்னெடுக்கையில் தவிர்ப்புக்கள், மற்றும் பொருத்தமான பணிகளை வெளிக்கொணர்வதில் செயற்திறனற்ற தன்மை என்பன காணப்படக்கூடும். உதாரணமாக, கொவிட் -19 உலகளாவிய நோய்த்தொற்றின் பரவலை தடுப்பதற்காகவே இலங்கையில் பொதுத்துறைகளில் வீட்டிலிருந்து பணியாற்றும் முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டது. எனினும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கல்வியறிவு, அதேபோல் பௌதீக ரீதியான செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் போன்றவற்றில் காணப்பட்ட பிரச்சனைகளின் காரணமாக அது முழுமையாக வெற்றியளிக்கவில்லை. மேலும், இலத்திரனியல் மயமாக்கலின் தற்போதைய நிலையில், பொதுமக்களுக்கான சேவைகள் நேரில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற நிலை காணப்படுவதால் பெரும்பாலான பொதுத்துறையின் வேலைத்தொழிற்பாடுகள் வீட்டிலிருந்து பணியாற்றும் நடைமுறைகளுக்கு குறைந்தளவிலேயே பொருத்தமானவை. இருப்பினும், அவ்வாறான ஏற்பாடுகளுடன் தொடர்புடைய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் தொடர்பாக பொருத்தமான சட்டங்களினூடாக வீட்டிலிருந்து பணியாற்றும் ஏற்பாடுகளுக்கு சாத்தியமான கைத்தொழில்கள், நிறுவனங்கள், தொழில் வகைகள், மற்றும் பணித்தொழிற்பாடுகள் தொடர்பில் தெளிவான இனங்காணலும், மதிப்பீடும் அவசியமாகும். மேலும். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் கல்வியறிவு மட்டம், தேவையான மேற்பார்வை மட்டம், பௌதீக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் போதியளவான கிடைப்பனவு மற்றும் தரம் அடிப்படையில் பணிச்சூழலுக்கு வெளியே பணியாற்றக்கூடிய திறன், ஊழியர்களின் வாழ்வியல் நடைமுறைகள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் என்பன தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும். (சர்வதேச தொழிலாளர் அமைப்பு, 2020). வீட்டிலிருந்து பணியாற்றல் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு போதுமான மற்றும் தரமான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உபகரணங்கள், வலையமைப்பு பாதுகாப்பு வசதிகள், மின்வலு வசதிகள் மற்றும் பணியிடம் என்பன ஏனைய பிரதான சவால்களாகும். குறிப்பாக, இலங்கையின் கணணியறிவு மற்றும் டிஜிட்டல் கல்வியறிவு என்பன முறையே 30.8 சதவீதம் மற்றும் 46.0 சதவீதமாக (தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், 2020) குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை, மற்றும் தரவுப் பாதுகாப்புத் தோல்விகளும் அதனுடன் தொடர்புடைய அச்சுறுத்தல்களின் அதிகரிப்பும்

பிரதான சவால்களாகும். இருப்பினும், வீட்டிலிருந்து பணியாற்றும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் நீடிப்பதற்கு வலையமைப்பு பாதுகாப்பினை விரிவுப்படுத்துதல், கணனி மற்றும் இலத்திரனியல் கல்வியறிவினை மேம்படுத்துதல் என்பன அத்தியாவசியமாகும். மேலும், தேவையான வலையமைப்பு உட்கட்டமமைப்பினை மேம்படுத்துதல், தொலைநிலை பணியாற்றும் ஒழுங்குகளுக்கு ஆதரவளிப்பதற்கு இணைய பாதுகாப்பினை வழங்குதல், காகிதப் பணிகளை இலத்திரனியல் மயமாக்குதல் மற்றும் அனுமதிக்கப்பட்ட நடைமுறைகளினூடாக அதேநேர இணையவழி பணியாற்றுச் சூழலை நோக்கி மாறுதலடையச் செய்தல் என்பன முக்கியமாகும்.

கடமைகளை செயற்படுத்துவதில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலுடன் தொடர்புடைய குறித்துரைக்கப்பட்டதும் அதனை இலக்காகக் கொண்ட பயிற்சிகள், தொடர்பாடல் மற்றும் இடைத்தொடர்பு என்பன அத்தகைய நடவடிக்கைகளின் சீரான தொழிற்பாட்டிற்கு முக்கியமானவையாகும். தொழில் ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் மற்றும் கட்டளைகளிலுள்ள மாற்றங்கள் அல்லது சேவை வழங்கல் இடத்துடன் தொடர்புடைய வழிகாட்டல்கள், வீட்டிலிருந்து பணியாற்றல்த் திட்டம் (மொத்தமாக அல்லது பகுதிளயவில்) மற்றும் கால அளவு (காலவரையறையின்மை அல்லது நிரந்தர கால அளவு) என்பன அதன் ஆரம்பகட்டத்திலேயே நிறுவப்பட வேண்டும் (கெயாரி, 2020). மேலும். உகந்த மட்டத்திலான உற்பத்தித்திறனை அடைவதற்கும் கருத்து வேற்றுமைகளை குறைத்துக் கொள்வதற்கும், பௌதீக செலவுகளுடன் தொடர்புடைய பொறுப்புமிக்க தரப்பினர்கள், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு, நியமிக்கப்பட்ட தொடர்பாடல் ஊடகங்கள், வேலை மணித்தியாலங்கள் மற்றும் ஓய்வுக் காலம் தேசிய சட்டங்களுடன் தொடர்புடைய மீதமிருக்கும் ஏற்பாடுகள் என்பன தொழில் ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் மற்றும் கட்டளைகள் அல்லது நிறுவனத்தின் கொள்கை வழிகாட்டல்களின் ஊடாக நிறுவப்பட வேண்டும்.

வீட்டுப் பணிச்சூழலின் கவனச் சிதறல்களினால் ஏற்படும் கவனம், ஊக்குவிப்பு மற்றும் உற்பத்தித்திறன் குறைவு, வேலை மற்றும் வீட்டு பொறுப்புக்களிலுள்ள முரண்பாடுகள், மோசமான உட்கட்டமைப்பு மற்றும் வலையமைப்பு வசதிகள், மற்றும் நேரடிக் கண்காணிப்பு இல்லாமை என்பன வீட்டிலிருந்து பணியாற்றல் நடவடிக்கைகளிலுள்ள பிரதிகூலங்களாகும். அதன்படி, ஊழியர்களின் ஊக்குவிப்பு மட்டத்தினையும், செயலாற்றத்தினையும் பராமரிப்பதற்கு தொழில் வழங்குநர் மற்றும் ஊழியர்களுக்கிடையிலான உறவில் தீவிர மாற்றம், புதிய முறைகளை பயன்படுத்தல், முகாமைப்படுத்தல், ஊழியர்களின் செயலாற்றத்தினை கட்டுப்படுத்தல், நடைமுறைப்படுத்தல் என்பனவும் நிறுவப்பட வேண்டும். இது மரபுவழிக் கட்டளைகளிலிருந்து விலகிச் செல்லல், கட்டுப்பாட்டுப் பெறுபேறுகள் அடிப்படையிலான முகாமைத்துவத்தை நோக்கிய முகாமைத்துவக் கட்டுப்பாட்டுப் பாணி (சர்வதேச தொழிலாளர் அமைப்பு, 2020), மற்றும் உடனுக்குடனான தொடர்பாடல் மற்றும் சரிபார்க்கைகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றது. இதற்கு மேலதிகமாக, நிறுவன கலாசாரம் மற்றும் குழு ஒத்திசைவு என்பவற்றை செயற்படுத்துவதற்கும் ஊழியர்களின் மன அழுத்தத்தை குறைப்பதற்கும் தொடர்பாடல் மற்றும் இடைத்தொடர்புகளில் புதிய முறைகளை பொருத்தமாக செயற்படுத்த வேண்டும். அதேநேரம், நீண்டகாலத்திற்கு உச்சளவில் உற்பத்தித்திறனை தொடர்ந்து செயற்படுத்துவதற்கு வீட்டிலிருந்து பணியாற்றலை நிரந்தரமாக பின்பற்றுவதாயின் ஊழியர்களின் பௌதீக மற்றும் மன ஆரோக்கியத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் நீண்ட கால மேலதிகப் பணிகள் மற்றும் பணியின் போதான பணி- குடும்ப முரண்பாடுகளை தடுப்பதற்கு தெளிவான வேலை மணித்தியாலங்களை வரையறை செய்தல் என்பவற்றிற்கு முன்னுரிமையளிக்கப்பட வேண்டும்.

வாழ்வியல் நடைமுறைகளில் இருந்தான தடங்கல்களை குறைப்பதற்கு, சார்ந்துள்ளோரின் அரவணைப்பு, வீட்டுப் பொறுப்புக்களின் பொருத்தமான நடைமுறைகளின் ஊடாக உச்சமட்ட உற்பத்தித்திறனை வழங்குவதற்கும் தொழில் வாழ்க்கையை சமநிலைப்படுத்துவதற்கு தொழில் மற்றும் வீட்டு பொறுப்புக்களுக்கிடையிலான தெளிவான வரையறைகளை ஊழியர்கள் கொண்டிருக்க வேண்டும். மேலும், குழுவுடனான தொடர்ச்சியான தொடர்பாடல் மற்றும் இடைத்தொடர்பு மூலமாக உடல், உள ஆரோக்கியத்தை பேணுதல், அத்துடன் பொருத்தமான பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்துதல், நிறுவனக் கொள்கைகளில் வரையறுக்கப்பட்டவாறு வேலையை நிறுத்தி வைத்தல் ஊடாக மேலதிகமாக பணியாற்றாதிருத்தல் என்பன நீண்டகாலத்திற்கு வீட்டிலிருந்து பணியாற்றலின் உச்ச மட்ட உற்பத்தித் திறனை அடைவதற்கு முக்கியமாகும்.

**முன்னோக்கிய பாதை**

உலகலாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் வீட்டிலிருந்து பணியாற்றல் நடைமுறைகளின் செயலாற்றத்தினை பெருமளவில் பரிசோதிப்பதற்கு கிடைத்த வாய்ப்பினைக் கருத்திற் கொள்கையில், அதிகரித்த தொழிற்படைப் பங்கேற்பு மற்றும் சேமிப்புக்களின் ஊடாக நடுத்தர காலத்திலிருந்து நீண்டகாலத்திற்கு நாட்டின் உயர்வான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றுக்குப் பின்னரும் இந்த முன்னுதாரணமான மாற்றத்தின் நன்மைகளை தொடர்ச்சியாக அடையப்படக்கூடியதாகவிருக்கும். இதற்கு மேலதிகமாக, உள்நாட்டு மற்றும் உலகளாவிய சூழலில் ஏற்படும் எதிர்ப்பாராத சம்பவங்களின் போது வீட்டிலிருந்து பணியாற்றல் நடவடிக்கை பாதுகாப்பானதாகும். எவ்வாறாயினும், அதன் சீரான தொழிற்பாட்டிற்கும் அத்தகைய நடைமுறைகளிலிருந்து விரும்பத்தக்க அனுகூலங்களை அறுவடை செய்வதற்கும் நடைமுறையில் காணப்படும் பிரச்சினைகள், சவால்கள், மற்றும் குறைப்பாடுகளை எடுத்துரைப்பது இன்றியமையாததாகும். மேலும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு, டிஜிட்டல் முறைமை, மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு என்பவற்றினடிப்படையில் வீட்டிலிருந்து பணியாற்றுவதற்கு தயாரான நிலையிலிருப்பதற்கு பொதுத்துறை தீவிரமான தொழில்நுட்ப மாற்றத்திற்கும் உட்பட வேண்டும். ஆரம்பத்தில். ஊழியர்களுக்கு குறைந்தளவில் வசதியளித்தாலும் தொழில் வாழ்க்கையில் சமநிலையையும் நாட்டினுடைய பொருளாதாரத்தில் திருப்தியையும் சமநேரத்தில் மேம்படுத்திக்கொண்டு, கொவிட் -19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக நிரந்தரமாக தழுவப்பட்ட டிஜிட்டல் தொழில்நுட்பமானது துரிதமான பொருளாதார வளர்ச்சிக்கும் நாட்டின் தரமான வாழ்க்கைத்தரத்திற்கும் ஓர் உந்துசக்தியாக அமைகிறது.

**உசாத்துணை**


1. Carey 2020, Details of new Telework Law approved by Congress, accessed 03 March 2021 <https://www.carey.cl/en/details-of-new-telework-law-approved-by-congress/>
2. Department of Census and Statistics 2020, Computer Literacy Statistics – 2020 (First six months), accessed 03 March 2021 <http://www.statistics.gov.lk/PressReleases/ComputerLiteracystatistics-2020-Firstsixmonths>
3. International Labour Organization 2020, An employers' guide on working from home in response to the outbreak of COVID 19, accessed 03 March 2021 <https://www.ilo.org/wcmsp5/groups/public/---ed_dialogue/--act_emp/documents/publication/wcms_745024.pdf>


2

உருவாக்குநராக விளங்கி 42.7 சதவீதம் கொண்ட மிகப்பெரும் பங்கினை பிரசன்னப்படுத்தியதுடன் சொந்தமாக தொழில்புரிவோர் 2020இல் மொத்த தொழில்நிலையில் 33.2 சதவீதத்திற்கு வகைகூறினர்.

மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட **அரச துறை தொழில்நிலை அளவீட்டின்படி, மொத்த அரச துறை தொழில்நிலை 2019இன் 1.467 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியில் 1.528 மில்லியனுக்கு அதிகரித்தது.** இது, அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள், மாகாண சபைகள் மற்றும் அரசுசார் நிறுவனங்களிலுள்ள ஊழியர்களையும் உள்ளடக்குகிறது. அரச துறை தொழில்நிலையில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்பிற்கு 60,000 தொழிலற்ற பட்டதாரிகளுக்கும் குறைந்த வருமானமீட்டுவோர் மட்டத்திலுள்ள 100,000 ஆட்களுக்கு தொழில் வழங்கப்பட்டமையும் காரணங்களாக அமைந்தன.

**ஆழமாக வேரூன்றியுள்ள பாதிக்கப்படும் தன்மையினை வெளிக்காட்டுகின்ற விதத்தில், முறைசாரா தொழில்வாய்ப்பு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.** கொவிட்-19 நோய்த்தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கட்டுப்படுத்தல் வழிமுறைகளுக்கு மத்தியிலும் முறைசாராத் துறை அதன் ஜீவனோபாயத்திற்கு ஏற்பட்ட இடையூறுகளின் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டது. முறைசாராத் துறையின் தொழில்நிலை எந்தவொரு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தினாலும் பாதுகாக்கப்படாததினால் அவர்கள் தொழிற்படையிலுள்ள மிகவும் பாதிக்கப்படக்கூடிய வகையினராகவும் இடர்ப்பாடான சூழ்நிலைகளில் வறுமைக்கோட்டிற்குள் வீழ்ந்து விடக்கூடியவர்களாகவும் இருப்பதனால் தற்காலிக வருமான ஆதரவு தேவைப்படுபவர்களாகவுள்ளனர். எனவே, நாட்டின் பாரிய முறைசாராத் தொழிலினை இலக்காகக் கொண்டு சமூக பாதுகாப்பு வழிமுறைகளை இலக்கிடுவது இத்துறையிலுள்ள மக்களின் நலனோம்புகளை மேம்படுத்துவதற்கு மிக முக்கியமானதாகும்.

## தொழிலின்மை

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மோசமான தாக்கத்தின் காரணமாக தொழிலின்மை வீதம் 2019இல் பதிவுசெய்யப்பட்ட 4.8 சதவீதத்திலிருந்து 2020இல் 5.5 சதவீதத்திற்கு அதிகரித்தது.** இதன்படி, தொழிலற்ற குடித்தொகை[8] 2019இன் பதிவுசெய்யப்பட்ட 0.411 மில்லியனிலிருந்து 2020இல் 0.468 மில்லியனுக்கு அதிகரித்தது. நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் தொழிலின்மை வீதத்தில் எதிர்பார்க்கப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது, தொழில்புரியும் குடித்தொகையில்

8 தொழிலுக்குக் கிடைக்கத்தக்க அத்துடன்.: அல்லது தொழிலை எதிர்பார்த்திருக்கும் ஆட்கள் என்பதுடன் தொழில்புரியாத மற்றும் கடந்த நான்கு வாரங்களில் தொழிலைப் பெறுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட அத்துடன் அடுத்த இரண்டு வார காலப்பகுதியில் தொழில்வாய்ப்புக்களை ஏற்றுக்கொள்ளத் தயாராகவுள்ள ஆட்கள் தொழிலற்றவர்கள் எனக் குறிப்பிடப்படுவர்.

வரைபடம் 2.12
தொழிலின்மை வீதம் (சதவீதம்)




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

ஏற்பட்ட வீழ்ச்சி தொழிலற்ற குடித்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முழுமையாக மாற்றப்பட்டிருக்காமையினால் குறைவாகக் காணப்பட்டது. தொழிலை இழந்தவர்கள் தற்போது நிலவுகின்ற இந்தச் சூழ்நிலையின் காரணமாக தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ தொழில் தேடுவதனையும் புதிய தொழில்களை ஏற்றுக்கொள்வதனையும் நிறுத்தியிருக்கும் காரணத்தினால் ஏற்பட்டதாகும். எனினும், வேலை நேரங்களில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினால் பிரதிபலிக்கப்பட்டவாறு தொழிற்படையின் உற்பத்தியாக்க இயலளவின் குறைப்பயன்பாடு காரணமாக 2020இல் கீழுழைப்பு குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.

சமத்துவமின்மையை மேலும் அதிகரிக்கின்ற விதத்தில் **பெண்கள், இளைஞர் மற்றும் கல்வித் தகைமைபெற்ற ஆட்களிடையேயான தொழிலின்மை வீதம் 2020இல் கணிசமாக அதிகரித்தது.** இதன்படி, பெண்களின் தொழிலின்மை வீதம் 2019இன் 7.4 சதவீதத்திலிருந்து 2020இல் 8.4 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. அதேவேளையில், ஆண்களின் தொழிலின்மை வீதமும் 2019இன் 3.3 சதவீதத்திலிருந்து 2020இல் 4.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. பெண்களின் தொழில்புரியக்கூடிய தேர்ச்சியில் விடாப்பிடியாகக் காணப்படும் பிரச்சனைகளும் பாலுடன் தொடர்பான பொருத்தப்பாடின்மையும் பெண்களின் தொழிலின்மை வீதத்தினை அவர்களின் இணைத்தரப்பினரின் வீதத்தினை விட இரண்டு மடங்கு கூடுதலாக அதிகரிக்கச் செய்திருக்கிறது.

## வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு

**கொவிட்-19 நோய்த்தொற்றின் பரவல் காரணமாக வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்காக நாட்டை விட்டுப் புறப்பட்டுச் செல்லுதல் 2019இன் 203,087 இலிருந்து 2020இல் 53,713 இற்கு 73.6 சதவீதத்தினால் கடுமையாக வீழ்ச்சியடைந்தது.** இக்கடுமையான வீழ்ச்சிக்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் அவர்களுடன் பதிவுசெய்யப்பட்ட புலம்பெயர் வேலையாட்களின் புறப்படுகை மீது விதிக்கப்பட்ட தற்காலிகத் தடைகள், தொழிலாளர்களைப் பெறுகின்ற நாடுகளில் காணப்படும்

அட்டவணை 2.18
வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கான வெளிச்செல்கைகள்

| தொழில்வாய்ப்பு | 2018 (அ) | | 2019 (அ) | | 2020 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் |
| **மொத்த தொழிலிலுள்ளோர்** | **211,211** | **100.0** | **203,087** | **100.0** | **53இ713** | **100.0** |
| **மூலத்தின்படி** | | | | | | |
| உரிமம்பெற்ற முகவர்கள் | 66,703 | 31.6 | 69,278 | 34.1 | 18,304 | 34.1 |
| ஏனையோர் | 144,508 | 68.4 | 133,809 | 65.9 | 35,409 | 65.9 |
| **பால் வகையின்படி** | | | | | | |
| ஆண் | 129,712 | 61.4 | 122,257 | 60.2 | 32,453 | 60.4 |
| பெண் | 81,499 | 38.6 | 80,830 | 39.8 | 21,260 | 39.6 |
| **மனிதவலு வகையின்படி** | | | | | | |
| தொழில் வல்லுநர்கள் | 9,005 | 4.3 | 9,861 | 4.9 | 2,929 | 5.5 |
| நடுத்தர மட்டம் | 6,530 | 3.1 | 5,725 | 2.8 | 1,480 | 2.8 |
| எழுதுவினைஞர் மற்றும் தொடர்பானோர் | 9,434 | 4.5 | 9,163 | 4.5 | 2,484 | 4.6 |
| தேர்ச்சிபெற்ற தொழிலாளர் | 67,013 | 31.7 | 62,711 | 30.9 | 16,690 | 31.1 |
| ஓரளவு தேர்ச்சிபெற்ற தொழிலாளர் | 2,769 | 1.3 | 2,950 | 1.5 | 748 | 1.4 |
| தேர்ச்சியற்ற தொழிலாளர் | 51,703 | 24.5 | 51,188 | 25.2 | 13,994 | 26.1 |
| வீட்டுப் பணிப்பெண்கள் | 64,757 | 30.7 | 61,489 | 30.3 | 15,388 | 28.6 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

2

பயணக் கட்டுப்பாடுகள், வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களுக்கு ஆட்சேர்ப்பது இடைநிறுத்தப்பட்டமை மற்றும் புலம்பெயர் வேலையாட்களுக்கான கேள்வி குறைவடைந்தமை என்பன காரணங்களாக அமைந்தன. வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காகப் புறப்பட்ட ஆண்களினதும் பெண்களினதும் புறப்படுகைகள் 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் முறையே 73.5 சதவீதத்தினாலும் 73.7 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்கான மொத்தப் புறப்படுகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இசைந்து செல்லும் விதத்தில், அனைத்து தேர்ச்சி வகைகளின் கீழான அதாவது தொழில்சார்ந்தவர்கள், நடுத்தர மட்டத்திலுள்ளவர்கள், எழுதுவினைஞர் மற்றும் தொடர்பானவர்கள், தேர்ச்சிபெற்றவர்கள், தேர்ச்சியற்றவர்கள் மற்றும் வீட்டுப்பணிப் பெண்களுக்கான வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கான புறப்படுகைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020இல் கடுமையாக வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, மத்திய கிழக்குப் பிராந்தியம் 2020இலும் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கான முக்கிய சேரிடமாகத் தொடர்ந்தும் விளங்கி, வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கான மொத்தப் புறப்படுகையில் 82.0 சதவீதத்திற்கு வகைகூறியது. எனினும், மத்திய கிழக்குப் பிராந்தியத்திற்கான வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கான புறப்படுகை 2019 உடன் ஒப்பிடுகையில் 74.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

வரைபடம் 2.13
திறமை அடிப்படையில் வெளிநாட்டு தொழில் நிலைக்கான வெளிச்செல்கைகள்




*மூலம்:* இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

**கொவிட்-19 நோய்த்தொற்றின் பரவல் காரணமாக தொழிலாளர்களைப் பெறுகின்ற நாடுகளிலுள்ள இலங்கை புலம்பெயர் வேலையாட்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். கொவிட்-19 நோய்த்தொற்றின் முதலாவது அலை ஐரோப்பிய பிராந்தியத்தில் பரவத் தொடங்கியமையுடன் பெரும் எண்ணிக்கையான இலங்கை புலம்பெயர் வேலையாட்கள் பீதி காரணமாக 2020இன் தொடக்கத்தில் இத்தாலி, தென் கொரியா மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலிருந்து இலங்கை திரும்பியிருந்தனர்.** கொவிட்-19 இலங்கைக்குள் பரவுவதைத் தடுக்கும் பொருட்டு உள்வரும் வர்த்தகப் பறப்புக்களுக்கான வானூர்தி நிலையங்கள் மூடப்பட்டமையின் காரணமாக, கணிசமான எண்ணிக்கை கொண்ட புலம்பெயர் வேலையாட்கள் தாய்நாட்டிற்குப் புறப்படுவதனை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். சுகாதாரம் சார்ந்த இடர்நேர்வுகள் மற்றும் ஒப்பந்தம் காலாவதியாதல், வேலை இழப்புக்கள் மற்றும் நோய்த்தொற்றின் காரணமாக பொருளாதாரச் சரிவுகளிலிருந்து தோன்றிய சம்பள வெட்டுக்கள் தொடர்பிலான பீதி காரணமாக தாய்நாட்டிற்குத் திரும்புவதற்கான தேவை மேலும் அதிகரித்தது. கொவிட்-19இன் எதிர்மறையான தாக்கம் காரணமாக உள்நாட்டு தொழிலாளர் சந்தை கொதிநிலையில் காணப்படுவதனால், தொழில் இழப்புக்கள் காரணமாக தாய்நாட்டிற்குத் திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்களுக்காகவும் அதேபோன்று புறப்படுகை நிறுத்தப்பட்டதன் விளைவாக

எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்களை தவறவிட்ட ஆட்களுக்காகவும் தொடர்ச்சியாக வாய்ப்புக்களைக் கண்டறிவதனூடாக மீண்டும் தொழிலுக்கமர்த்தப்படுதலுக்குரிய வழிமுறைகளை அறிமுகப்படுத்த வேண்டும். அதேவேளை, பன்னாட்டுத் தொழிற்சந்தைகளில் ஏற்படக்கூடிய எதிர்கால இடர்ப்பாடுகளை எதிர்கொள்ளக்கூடிய விதத்தில் பொருத்தமான சமூகப் பாதுகாப்பு வழிமுறைகள் நிறுவப்படுதலும் அவசியமாகும்.

## தொழிலாளர் உறவுகள் மற்றும் தொழிற்சந்தைச் சீர்திருத்தங்கள்

**கொவிட்-19 நோய்த்தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகக் காணப்பட்ட கட்டுப்பாடுகளின் விளைவாக வேலை நிறுத்தம் காரணமாக இழக்கப்பட்ட மனித நாட்களின் எண்ணிக்கை 2020ஆம் ஆண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது.** இதற்கமைய, பெருந்தோட்டத்துறை மற்றும் ஏனைய தனியார் துறைக் கைத்தொழில்கள் இரண்டிலும் இடம்பெற்ற வேலை நிறுத்தங்கள் காரணமாக இழக்கப்பட்ட மனித நாட்களின் எண்ணிக்கையில் அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்ட வேலைநிறுத்தத்தங்களால் இழக்கப்பட்ட மனித நாட்களின் மொத்த எண்ணிக்கை 2019இன் உடன் ஒப்பிடுகையில் 2020இல் 59.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், ஏனைய தனியார் துறைக் கைத்தொழில்களில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட வேலையாட்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக வேலை நிறுத்தங்களில் ஈடுபட்ட வேலையாட்களின் எண்ணிக்கை 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் 19.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், பெருந்தோட்டத் துறையில் வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் அதிகரித்தது.

**கைத்தொழிலில் இணக்க நிலையினை மேம்படுத்துவதற்காக 2020ஆம் ஆண்டுப்பகுதியில் தொழில் அமைச்சினால்[9] பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** இதற்கமைய, நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் தொழிலாளர் பிரச்சனைகளைக் கையாள்வதற்காக தொழில் சங்கங்களையும் தொழில்தருநர்களையும் உள்ளடக்கிய செயலணிக் குழுவொன்று தொழில் அமைச்சினால் நிறுவப்பட்டது. இதன் மூலம் கொவிட்-19 நோய்த்தொற்றின் காரணமாக பணி இடைநிறுத்தப்படுகின்றவிடத்து, நிறுவனங்களில் ஊழியர்களை வைத்துக் கொள்வதற்கும் அனைத்து ஊழியர்களையும் வேலைக்கு அழைக்கமுடியாதவிடத்து சூழ்நிலைக்கேற்றவாறு அனைத்து ஊழியர்களுக்கும் மாதாந்த வேலைகள் விகிதசமமாக வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக முறைமாற்று முறைமையொன்றினை அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான பொறிமுறையினை நடைமுறைப்படுத்துவதற்கும் இணக்கப்பாடொன்று எட்டப்பட்டது. மேலும், 2020 மே மற்றும் யூன் மாதங்களில் போதுமான வேலை இல்லாமை காரணமாக வீடுகளில் இருக்குமாறு ஊழியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டவிடத்து சூழ்நிலைக்கேற்றவாறு அவர்களுக்கு இறுதியாகச் செலுத்தப்பட்ட கொடுப்பனவு அடிப்படையில் 50 சதவீதத்தினை அல்லது மாதாந்தம் ரூ.14,500 இனை எது மிகச் சாதகமானதோ அதனைச் செலுத்துவதற்கு இணக்கப்பாடொன்று எட்டப்பட்டது. இதன் விளைவாக, இவ் உடன்படிக்கையானது 2020 செத்தெம்பர் 30 வரையிலும் நீடிக்கப்பட்டதுடன் அவை மேலும், 2020 திசெம்பர் 31 வரை நீடிக்கப்படுகின்றவிடத்து, சுற்றுலாத் துறை தவிர்ந்த அனைத்துத் துறைகளும் தொழில் ஆணையாளர் நாயகத்திடமிருந்து ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளுமாறு தேவைப்படுத்தப்பட்டன. அதேவேளை, கட்டாயக் கல்விக்கான வயதினை அதிகரிப்பதுடன் இசைந்து செல்லும் விதத்தில், தொழில்புரிவதற்கான குறைந்தபட்ச வயது 14 இலிருந்து 16 இற்கு அதிகரிக்கப்பட்டமையானது 1927ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க குறைந்தபட்சக் கூலிகள் (இந்தியத் தொழிலாளர்) (திருத்தச்) சட்டம், 1954ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் (தொழில்நிலை மற்றும் ஊதியங்கள்) (திருத்தச்) சட்டம், 1942ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க தொழிற்சாலைகள் (திருத்தச்) சட்டம் மற்றும் 1956ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் பிள்ளைகள் சட்டம் என்பனவற்றில் இணைக்கப்பட்டன. மேலும், தொழிலாளர் சட்டத்தின் கீழ் விசாரணைக்காக காத்திருக்கும் ஏறத்தாழ 16,000 வழக்குகளின் விசாரணைகளை விரைவுபடுத்துவதற்காக மாஜிஸ்டேட் நீதிமன்றத்திற்கும் தொழில் நீதிமன்றங்களுக்கும் ஒரேநேரத்தில் நியாயாதிக்க அதிகாரங்களை வழங்குவதற்கான சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும், அநேக சட்டங்களுக்கு திருத்தங்களைச் செய்வதற்காக அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டது. இதற்கமைய, தொழிலாளர் பிணக்குகளை நடைமுறைப்படுத்தல் கட்டளைகளுக்கு அதிகாரமளிப்பதற்கு; தொழில் முடிவுறுத்தல் தொடர்பாக விண்ணப்பங்களைச் செய்கின்ற தொழிலாளர் சார்பாக தோற்றுவதற்கு பிரதிநிதியொருவருக்கு அதிகாரமளிப்பதற்கும், தரப்பினர்கள் சார்பில் விசாரணைகளின் போது தொழில் ஆணையாளர் நாயகத்தின் முன் சட்டத்தரணியொருவர் தோன்றுவதற்கும்; வசதியளிக்கும் விதத்தில் 1950ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டத்திற்கு திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படும். தேசிய குறைந்தபட்சக் கூலியினை மாதாந்தம் ரூ.10,000.00 இலிருந்து மாதாந்தம் ரூ.12,500.00 இற்கு அதிகரிக்கும் விதத்தில் 2016ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க தொழிலாளர் குறைந்தபட்சக் கூலிகள் சட்டத்திற்கும் புதிய ஊழியரொருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டமை பற்றி குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்குள் தொழில் திணைக்களத்திற்கு அறிவிப்பதனை கட்டாயமாக்கும் விதத்தில் 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்திற்கும் திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. மேலும், 18 வயதிற்குட்பட்ட இளம் ஆட்களுக்கு தீங்குபயக்கும் தொழில்களைப் பற்றிய பட்டியலை இற்றைப்படுத்துவதற்காக 1956ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறுவர் தொழில் சட்டத்திற்கு திருத்தங்கள் செய்யப்படும். மேலும், 1971ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க தொழிலாளர்களின் தொழில்

9 திறன் விருத்தி, தொழில்நிலை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் பெயர் 2020 ஓகத்து 09 இலிருந்த தொழில் அமைச்சு என மாற்றப்பட்டது.

அட்டவணை 2.19
தனியார்துறைக் கைத்தொழில்களில் வேலை நிறுத்தங்கள்

| ஆண்டு | பெருந்தோட்டம் | | | ஏனையவை | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்கள் | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்கள் | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய தொழிலாளர்கள் | இழந்த மனித நாட்கள் |
| 2017 | 12 | 1,885 | 5,643 | 21 | 9,027 | 54,436 | 33 | 10,912 | 60,079 |
| 2018 | 29 | 6,545 | 33,212 | 22 | 5,610 | 16,406 | 51 | 12,155 | 49,618 |
| **2019 (ஆ)** | **9** | **1,981** | **28,363** | **16** | **5,630** | **27,689** | **25** | **7,611** | **56,052** |
| 1ஆம் காலாண்டு | 4 | 807 | 2,521 | 9 | 4,748 | 26,197 | 13 | 5,555 | 28,718 |
| 2ஆம் காலாண்டு | 2 | 939 | 24,393 | 3 | 218 | 420 | 5 | 1,157 | 24,813 |
| 3ஆம் காலாண்டு | 2 | 206 | 1,304 | 2 | 151 | 302 | 4 | 357 | 1,606 |
| 4ஆம் காலாண்டு | 1 | 29 | 145 | 2 | 513 | 770 | 3 | 542 | 915 |
| **2020 (இ)** | **13** | **1,936** | **9,375** | **15** | **4,189** | **13,215** | **28** | **6,125** | **22,590** |
| 1ஆம் காலாண்டு | 1 | 298 | 596 | 4 | 189 | 884 | 5 | 487 | 1,480 |
| 2ஆம் காலாண்டு | 7 | 862 | 3,174 | 3 | 899 | 899 | 10 | 1,761 | 4,073 |
| 3ஆம் காலாண்டு | 4 | 682 | 5,323 | 7 | 3,052 | 11,236 | 11 | 3,734 | 16,559 |
| 4ஆம் காலாண்டு | 1 | 94 | 282 | 1 | 49 | 196 | 2 | 143 | 478 |

(அ) பகுதியளவான அரசாங்கம் மற்றும் ஏனைய தனியார் நிறுவனங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

*மூலம்:* தொழிலாளர் திணைக்களம்

2

முடிவுறுத்தல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் இழப்பீட்டின் உயர்ந்தபட்ச வரையறையினை அதிகரிப்பதற்காக இழப்பீட்டு சூத்திரத்தினை ரூ.1.25 மில்லியனிலிருந்து ரூ.2.5 மில்லியனுக்கு அதிகரிக்கும் விதத்திலும் 1934ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தொழிலாளர் இழப்பீட்டு கட்டளைச் சட்டத்தினை தொழிலாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை ரூ.0.5 மில்லியனிலிருந்து ரூ.2.0 மில்லியனுக்கு அதிகரிக்கும் விதத்திலும் திருத்தப்படும்.

## தொழிலாளர் உற்பத்தித்திறன்

**மொத்தப் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் அளவிடப்படுகின்ற (2010 விலைகளில்) தொழிலாளர் உற்பத்தித்திறன், வேலை செய்த மணித்தியாலமொன்றிற்கு 12.5 சதவீதத்தினால் 2019இல் வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கான ரூ.513.17 இலிருந்து 2020இல் வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கு ரூ.577.17 இற்கு அதிகரித்தது.** ஒட்டுமொத்த தொழிலாளர் உற்பத்தித்திறனில் ஏற்பட்ட இக்கணிசமான அதிகரிப்பிற்கு கைத்தொழில்களிலும் பணிகள் நடவடிக்கைகளிலும் தொழிலாளர் உற்பத்தித்திறன் முறையே 13.2 சதவீதத்தினாலும் 22.4 சதவீதத்தினாலும் அதிகரித்தமை பக்கபலமாக விளங்கியது. இதற்கமைய, கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகளில் தொழிலாளர் உற்பத்தித்திறன் 2019இல் முறையே பணியாற்றிய மணித்தியாலமொன்றிற்கு ரூ.540.70 இலிருந்தும் பணியாற்றிய மணித்தியாலமொன்றிற்கு ரூ.624.33 இலிருந்தும் 2020இல் முறையே பணியாற்றிய மணித்தியாலமொன்றிற்கு ரூ.611.89 இற்கும் பணியாற்றிய மணித்தியாலமொன்றிற்கு ரூ.764.29 இற்கும் அதிகரித்தது. இதற்கு மொத்தப் பெறுமதிகூட்டலில் ஏற்பட்ட ஒப்பீட்டு ரீதியில் சிறிய வீழ்ச்சியைக் கருத்திற்கொள்கையில் கொவிட்-19 நோய்த்தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான கட்டுப்பாடுகளின் காரணமாக பணியாற்றிய மணித்தியாலங்களில் செய்யப்பட்ட குறைப்புக்களே முக்கிய காரணமாகும். மாறாக, படிப்படியாக அதிகரிக்கின்ற போக்கு மாற்றமடைகின்றமையினைத் தொடர்ந்து வேளாண்மை நடவடிக்கைகளின் உற்பத்தித்திறன் 2019இல் பணியாற்றிய மணித்தியாலத்திற்கான ரூ.192.46 இலிருந்து 2020இல் மணித்தியாலத்திற்கு ரூ.177.54 இற்கு 7.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு வேளாண்மை நடவடிக்கைகளில் காணப்பட்ட தொழில்முறைமாற்று காரணமாக பணியாற்றிய மணித்தியாலங்களில் ஏற்பட்ட அதிகரிப்பும் மொத்த பெறுமதி கூட்டலில் ஏற்பட்ட குறைப்பும் முக்கிய காரணங்களாக அமைந்தன. இதற்கமைய, உற்பத்தித்திறன் மட்டங்களின் நியதிகளில், பணிகள் துறை தொடர்ந்தும் தொழில் மூலவளங்கள் மிகச் சிக்கனமாகப் பயன்படுத்துவதனை எடுத்துக்காட்டியதுடன் உயர்ந்த தொழிலாளர் உற்பத்தித்திறனையும் பதிவுசெய்தது அதனைத் தொடர்ந்து கைத்தொழில் நடவடிக்கைகள் காணப்பட்ட வேளையில் வேளாண்மை நடவடிக்கைகள் மிகக் குறைந்த மட்டங்களைப் பதிவுசெய்தன.

அட்டவணை 2.20
முக்கிய பொருளாதாரத் துறைகளின்படி தொழிலாளர் உற்பத்தித்திறன்

| | 2019 (அ) | 2020 (ஆ) |
|---|---|---|
| நிலையான விலைகளில் (2010) மொத்த பெறுமதி சேர்க்கை, ரூ.மில் | 8,973,108 | 8,693,114 |
| வேளாண்மை | 686,412 | 669,802 |
| கைத்தொழில் | 2,608,211 | 2,427,844 |
| பணிகள் | 5,678,485 | 5,595,496 |
| தொழிலாளர் உற்பததித்திறன், தொழில் செய்த மணித்தியாலம் ஒன்றிற்கான ரூபா | 513.17 | 577.17(,) |
| வேளாண்மை | 192.46 | 177.54(,) |
| கைத்தொழில் | 540.70 | 611.89(,) |
| பணிகள் | 624.33 | 764.29(,) |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) வருடாந்த தொழிலாளர் மணித்தியாலங்களானது 2020இன் நான்கு காலாண்டுகளினதும் கூட்டுத்தொகையின் அடிப்படையிலானது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி